**ANGLO ASIAN MINI MART**
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 7 15 – 21 பெப்ரவரி 2001 முழக்கம்: 318

**FORWARD CONSULTANTS**
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT
ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

## பேச்சுவார்த்தை தடைவிதித்தால் தடைப்படலாம்!

## சிறீலங்காவின் போருக்கு கைகொடுக்கும் கைகள்!



கொழும்பு: சிறீலங்கா [illegible] நாயகர்கள் சந்திப்பு



அன்ரன் பாலசிங்கம்

# கொலை முயற்சி! சிறீலங்காவின் சதியா?

## ஐயற்றை வளவுக்கை பேய்கள் உலாவுது

## எல்லைகள் பிரான்ஸ் – பிரித்தானியா இணைந்து இறுக்கம்!



[illegible]

**தமிழினி**
**TAMILINI**
பல்பொருள் அங்காடி
Cash and Carry
195-197 The Broadway, Southall, Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0208-813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

- MD JAM - 99 P
- KIST JAM - 99P
- MD CORDIAL - £1.99P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- KIST CORDIAL - £1.99 P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- LARICH மோர்மிளகாய் (ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்)
- ROSE SYRUP - £1.99
- RED BULL (Imp) - £12.00 Case (24x 250 Ml)
- பனங்களி - £1.79P



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# பறிக்கப்பட்ட 'இராசதானி'யும் பிரித்தானியப் பட்டியலும்


கடந்த மாதம் பிரித்தானியாவில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதம் தொடர்பான புதிய சட்டமூலத்தின் பிரகாரம் பயங்கரவாத அமைப்புக்கள் எனக் கருதப்பட்டு அந்நாட்டில் சட்டம் விரோதமாக்கப்படவேண்டிய அமைப்புக்கள் சிலவற்றின் பட்டியலை பிரித்தானிய உள்துறை அமைச்சு தயாரித்துவரும் இவ்வேளை சிங்களப் பேரினவாதம் தனது பொய்ப்பரப்புரைகளையும், தகிடு தத்தங்களையும் முழுமையாகப் பிரயோகித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினையும் அப்பட்டியலில் பிரித்தானியா இடம்பெறச்செய்துவிடவேண்டுமென கங்கணம்கட்டி களத்தில் குதித்துள்ளன. எதிர்வரும் 19ம் திகதி இப்பட்டியல் வெளியிடப்படவுள்ள நிலையில் சிறீலங்கா அரசும் அந்நாட்டின் பேரினவாத அமைப்புக்கள் அனைத்தும் பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிவருகின்றன. விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடைசெய்யுமா? இல்லையா? என்ற கேள்விக்கு விடைகாண்பதற்கு முன்னர் தமிழ்த் தேசியத்தின் வரலாற்றுப் பாதையில் கடந்து சென்று பிரித்தானியா பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய காலனித்துவவாத ஆட்சிக்கு இலங்கைத் தீவின் கரையோர இராச்சியங்கள் உட்படுவதற்கு முன்னதாக தனது இறைமையையும் - ஆட்புல ஒருமைப்பாட்டையும் மிகக் காத்திரமாக பேணிப்பாதுகாத்துக்கொண்டு தனிக்கொடியுடன் சுதந்திரபூமியாகத் திகழ்ந்தது எமது யாழ்ப்பாண இராசதானி. ஆனால் அந்நிய காலனித்துவவாதம் எமது இராசதானியை பறித்ததுடன் தமது நிர்வாக நடைமுறை சுலபங்களுக்காக அந்த இராசதானியை ஏனைய இராசதானிகளுடன் இணைத்து தமது காலனித்துவவாதத்தை விஸ்தரித்து. இந்த வரலாற்றுத் தவறைப் புரிந்தவர்கள் வேறுயாருமில்லை அன்றைய பிரித்தானியர்களே.

இறைமையும், ஆட்புல ஒருமைப்பாடும் கொண்ட எமது இனம், காலனித்துவவாதம் விட்ட தவறுகளினால் ஒரு சிறுபான்மை இனமாக சிங்களப் பேரினவாதத்தால் நோக்கப்படும் நிலைமையும் இதனால் எழுந்ததென்பதும் மறக்க முடியாதது. இதுமட்டுமல்ல பிரித்தானியா இன்னொரு பெரும் தவறினையும் அன்று செய்துவிட்டது. இலங்கைத் தீவில் நிகழ்ந்த அரசியல் சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளில் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்காது அவர்களது நலன்களை சிறுபான்மையினர் சம்பந்தப்பட்டதாகவே நோக்கியது. டொனமூர் ஆணைக்குழு, சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இதற்கு நல்லதொரு சாட்சிகள். காலச் சக்கரம் சுழன்றது. பிரித்தானியா தனது காலனித்துவவாதத்தை இலங்கைத் தீவில் முடித்துக்கொண்டு அதாவது சிறீலங்காவிற்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டபோது தமிழ் மக்களையும் சிங்களப் பேரினவாதத்தின் வலைக்குள் தள்ளிவிட்டது. சிறீலங்காவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட காலப்பகுதியில் இன்று பிரித்தானியாவில் ஆட்சிசெய்யும் தொழிற்கட்சிதான் அன்று பிரித்தானியாவில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தது என்பதும் இன்னொரு விடயம்.

எது எப்படியோ பிரித்தானியா தமிழ்த் தேசியத்தின் விடயத்தில் தனது காலனித்துவவாதக் காலப்பகுதியில் பல தவறுகளை இழைத்ததென்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தத் தவறுகள்தான் இன்று தமிழ் மக்களின் வாழ்வியலையே சிங்களப் பேரினவாதம் மூர்க்கம் கொண்டு நசுக்கும் நிலையையும் தோற்றுவித்தது என்பதும் ஏற்றுக் கொள்ளவேண்டிய கசப்பான உண்மை.

எனவே இந் நிலையில் இன்று பிரித்தானியா கடைப்பிடிக்க வேண்டிய அதன் தார்மீகக் கடமை என்ன? சிறீலங்காவிற்கு செவிசாய்ப்பதா? அல்லது தமிழ்த் தேசியத்தின் ஒட்டுமொத்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதா? தான்விட்ட வரலாற்றுத் தவறிற்கான பிராயச்சித்தமாக இதற்கான பதிலைக் கண்டுகொள்ளவேண்டும்.




# பார்வை

## போர்வெறியேற்றும் சனாதிபதியும் - போர் பட்ஜெட்டும்

சிறீலங்கா சனாதிபதியின் சுதந்திர தின உரையும், சிறீலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2001ம் ஆண்டுக்கான வரவு-செலவு அறிக்கையும் தமிழர்களை அச்சுறுத்துகின்றது.

தனது சுதந்திர தின உரையில், வழமையான இனக்குரோத கருத்துக்களை வெளிக்காட்டிய சந்திரிகா, 'போர் தொடரும்' என சூளுரைத்தார். நோர்வேயுடனான இணக்கப் பேச்சுக்கள் மத்தியில் சிங்கள பேரினவாதத்தை உசுப்பிவிடும் போக்கு அவரது உரையில் காணப்பட்டது. 'நியாயமற்ற கோரிக்கைகளைக் கொண்டு பயங்கரவாதம் புரியும் சிறுகுழுவே புலிகள்' எனவும், 'தமிழ் மக்களை புலிகளின் பாசிசத் தலைமையிலிருந்து தனது சிங்கள இராணுவம் மீட்கும்' எனவும் கூறியதுடன், தனது வீரம் மிக்க படைகள் புலிகளை அடக்கிவருவதாக சந்திரிகா மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றார். கொழும்பில் இருந்தவாறு யாழ். மக்களுக்கே யாழ். நிலவரம் பற்றி போதிக்கும் அதிகாரத் திமிர் கொண்ட சந்திரிகாவுக்கு, சிங்கள மக்களை இப்படி தூண்டிவிடுவது கடினமான விடயமுமல்ல. இவ்வுரையை அடுத்த சில தினங்களில் சந்திரிகா பாராளுமன்றத்தில் 2001ம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையை (appropriation bill) வெளியிட்டார். அதனை பிரதான போர் பட்ஜெட் என பிரெஞ்சு செய்தி நிறுவனமான ஏ.எஃப்.பி விபரித்தது. புலிகளுக்கு எதிராக போராட 720 மில்லியன் டொலர்களை 2001ம் ஆண்டிற்கு சிறீலங்கா ஒதுக்கியது என உலக செய்தி நிறுவனமான ஏ.பி தலைப்பு எழுதியது. 2000ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியினை மேலும் 20 வீதம் அதிகரித்து, சிங்களப் படைகளை பலப்படுத்தி தமிழர்களின் விடுதலைப் போரை பூண்டோடு அழிக்க சந்திரிகா பண்டாரநாயக்கா முற்பட்டுள்ளார்.

சந்திரிகாவின் மேற்கண்ட இரு நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப் போரை அழித்தொழித்து சிங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்டுதல் என்ற 'சிங்களக் கடும் போக்கை' தெளிவாக கோடிட்டுக் காட்டியுள்ளன.

★ ★ ★

## சிக்கலில் மாட்டியுள்ள பிரித்தானியா

சிங்கள சனாதிபதி சந்திரிகாவும், புலிகளும் பிரித்தானியாவின் தடைச்சட்டம் தொடர்பான தத்தமது நிலைப்பாட்டை தெளிவாக மீள முன்வைத்துள்ளனர். பிரித்தானியா அரசு தமிழ் மக்களின் உணர்வை மதிக்காது தமது புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் புலிகளை தடை செய்வது அமைதிக்கான இணக்கப் பேச்சுக்களை பின்தள்ளிவிடும் என புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளரும், அரசியல் ஆலோசகருமான திரு.பாலசிங்கம் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். ஆனால், அது பேச்சுக்களைப் பாதிக்காது என சந்திரிகா அவசர அறிவிப்பொன்றை அரச ஊடகங்கள் ஊடாக விடுத்து, 'பிரித்தானியாவின் தடைச்சட்டம் புலிகளை தடை செய்ய வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கை, இதன் மூலம் 'பெரும் இக்கட்டான நிலைக்கு' இட்டுச் செல்லப்பட்டுள்ளது. சட்ட அடிப்படையில் புலிகளை தடை செய்து அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் சேர்ந்து நிற்கும் எண்ணத்தில் பிரித்தானியா உள்ளதா அல்லது, முக்கியமான பேச்சுக்கள் இடம் பெறும் காலத்தில் பேச்சுக்களுக்கு இணக்கமாக செயற்படும் அரசியல் முடிவை சிறீலங்கா மேற்கொள்ளப் போகின்றதா என்ற கேள்வி இப்போது கூர்மையடைந்துள்ளது.

பிரித்தானியா தடைசெய்யும் அல்லது தடைசெய்வதற்கான முடிவை சற்று ஒத்திவைக்கும் என்கின்ற ஊகங்களே பெருமளவு நிலவுகின்றன.

இவ்வாறு விடுதலைக்காக போராடும் இயக்கங்களை பயங்கரவாதமாக பிரகடனப்படுத்தும் புதிய சட்டத்துடன் பிரித்தானியா நகர்கையில், புதிய அமெரிக்க அதிபர் புஷ் ஈராக்கிற்கு எதிரான குழுக்களுக்கு 4 மில்லியன் டொலர்களை வழங்கி போராடுமாறு உற்சாகப்படுத்தியுள்ளார். அவர் கிளின்டனின் உலகளாவிய கொள்கைகளில் தனக்கு மதிப்பு இருப்பதாக காட்டவில்லை. அதேபோன்று இஸ்லாமிய தலிபான்கள் அரசாளும் ஆப்கானிஸ்தான் அரசை கையாளும் பணியில், புஷ் நிர்வாகம் என்ன பங்கு வகிக்கப் போகின்றது என்ற கேள்வி பெரிதாக எழுந்துள்ளது. மறுபுறம், இஸ்ரேலின் புதிய அரசு கடும் போக்காளர்கள் என்பதும் அவர்களிற்கு எதிரான பல்வேறு ஆயுத வன்முறைகளும் வெடிக்கலாம் என்பதும் புதிய மாற்றங்களாகும். *'பிரித்தானியா தன் கைகளை தானே கட்டிப் போடுகையில், அமெரிக்கா புதிய தலைமையில் மற்றுமொரு சூழலை தயார்படுத்த முனைகின்றது.'*

புலிகள் தடைசெய்யப்பட்டால் வலுவிழந்து விடுவார்கள் என கொழும்பு சிங்கள ஆய்வாளர்கள் திரும்பத் திரும்பச் கூறிக் கொள்கின்றனர். அவர்களின் வாதப்படி புலிகளின் அனைத்துலக செயலகம், நிதி சேகரிப்பு என்பன பாதிக்கப்படுவதாக கூறப்படுகின்றது. ஆனால், தடைகளும், சட்டங்களும் புலிகளையோ அல்லது மக்கள் ஆதரவு பெற்ற விடுதலை இயக்கங்களையோ பாதிக்காது என்பதே, 'அனுபவபூர்வமாக நிரூபிக்கப்பட்ட இயற்கையின் விதி'யாகும். விடுதலைப் போராட்டத்திற்கான மக்கள் ஆதரவு அடிப்படையில் இந்த சட்ட வியாக்கியானங்களிற்கு உட்பட்டு கிளர்ந்ததல்ல. மாறாக, பாதிக்கப்பட்ட மக்களின் ஈடுபாடாகவே அது கிளர்ந்தது. மேற்குலகின் நேர்மையான விமர்சகர்கள் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையேயான உறவை ஒப்புக் கொள்வர் (பிரித்தானிய அமைச்சர் பீற்றர் கெயின்ஸ் பகிரங்கமாக ஒப்புக்கொண்டவிடயம்). புலிகளின் பிரதான செயற்பாட்டுத் தளமும், தலைமையும் மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்கும் விடயங்களாகும். அவற்றினை அமெரிக்க - இந்திய சட்டங்கள் பாதிக்கவில்லை.

★ ★ ★

## தடையா அல்லது அங்கீகாரத்திற்கான விவாதமா ?

நீண்டகாலமாக சிங்களம் தனது போர் தோல்விகளை மறைப்பதற்கு கண்டுபிடித்த காரணங்களில் ஒன்று புலிகளின் ஐரோப்பிய - அமெரிக்க பணியகங்கள். அதாவது, அவை இருப்பதாலேயே தமது அரச படைகள் தோற்பதாக கூறுவதை வழக்கமாகக் கொண்டனர். அதன் மூலம், புலிகளின் சர்வதேச செயற்பாடுகளை முடக்கிவிட்டால் தாம் வென்றுவிடலாம் என்ற மனோநிலைக்கு அவர்கள் தம்மை பழக்கப்படுத்திக் கொண்டனர். கிளின்டனின் புதிய உலக ஒழுங்கு அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது.

ஆனால், விடுதலைப் போராட்டம் தீவிரமாக வளர்ச்சி கண்டு மரபுப் படையணிகள், சர்வதேச மத்தியத்துவத்துடனான பேச்சுக்கள் என்பன இடம்பெறும் காலத்தில், லண்டனில் புலிகளை பயங்கரவாத இயக்கமாக தடைசெய்ய கோருவது, புலிகளினை அங்கீகரிப்பதற்கான ஒரு படிக்கல்லாகவே அமையும். உண்மையில், சிறீலங்கா - புலிகள் என்ற சிக்கல் நிலையில் இல்லாது, 'பிரித்தானியாவுக்கும் புலிகளுக்கும் இடையேயான புதிய சரியான சமன்பாட்டை தேடும் விடயமாக' தடை விவாதம் உருவாகியுள்ளது. உண்மையில் புலிகள் (தமிழர்கள்) எதிர்கொள்வது ஒரு இராஜதந்திர - அரசியல் சிக்கலே ஆகும். அதனை புலிகளும், பிரித்தானியாவும் தமக்கு ஏற்புடைய விதத்தில் எதிர்கொண்டு தகுந்த வடிவங்கள் ஊடாக தீர்க்க முனைவார்கள்.

அண்மையில் ஒரு ஆய்வாளர் கூறியது போல், அமெரிக்கா புலிகள் மீது விதித்த தடையும், அதன் பிற்பாடு பல்வேறு அமெரிக்க நிறுவனங்கள் ஊடாக மேற்கொண்ட விவாதங்களும் புலிகளின் அரசியல் இராஜதந்திர வலுவை அதிகரிக்க உதவியுள்ளது. அமெரிக்கத் தடையை புலிகள் வெற்றிகொள்ளும் சாத்தியங்கள் கூட உள்ளமையை பிறிதொரு கொழும்பு ஆய்வாளர் ஒப்புக்கொண்டுள்ளார். அமெரிக்காவின் ஒரு முன்னணி ஆய்வு நிறுவனம், புலிகள் மீது தடை விதிக்கப்பட்டது ஒரு பிழையான இராஜதந்திரம் என்கின்றது. கண்டபடி தடைபோடும் கிளின்டன் நிர்வாகத்தை எதிர்த்து பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ள புதிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், 'தடைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பாவிக்கப்பட வேண்டும்' எனக் கூறியமை அவதானிக்கத்தக்கது (அவரது கருத்து அமெரிக்க விதித்துள்ள பொருளாதாரத் தடை பற்றியே இருந்தாலும் அதன் விசாலத்தன்மையில் அமெரிக்கா தன்னைத் தானே அந்நியப்படுத்தும் முடிவில் அவர் உடன்படவில்லை என்பது புலப்படுகின்றது.)

*- ராஜா*

# பிரித்தானியா தடை விதித்தால் சமாதான முயற்சிகள் பாதிக்கும்

**- அன்ரன் பாலசிங்கம் -**

(13.02.01)

சிறீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே விரைவில் பேச்சு வார்த்தைகள் இடம்பெறப்போவதாக கொழும்பில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ள இவ்வேளையில், பிரித்தானிய அரசு நடைமுறைக்கு கொண்டு வந்த சட்டமூலம் ஒன்றின் பிரகாரம் சில பயங்கரவாத அமைப்புக்கள் தொடர்பான பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகின்றது. எதிர்வரும் 19ம் திகதி வெளியாகவுள்ள இப்பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் பிரித்தானியா சேர்த்துக் கொள்ள வேண்டும் என சிறீலங்கா அரசும் சிங்கள பேரினவாத அமைப்புக்களும், சில சிங்களக் கட்சிகளும் பிரித்தானியாவிற்கு தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மேற்கூறிய அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக மிக விளக்கமான செவ்வி ஒன்றினை இலண்டனில் இருந்து வெளியாகும் ஆங்கில இதழான தமிழ் கார்டியன் ஏட்டிற்கு வழங்கியிருக்கின்றார். தற்போதைய நிலையில் இச்செவ்வி மிக முக்கியமானதாக அரசியல் அவதானிகளால் நோக்கப்படுகின்றது. சிறீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தினை ஏற்க மறுத்து தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது தனது இராணுவ அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டு இந்த ஆண்டிற்கான யுத்தச் செலவீனத்தையும் 1088 கோடி ரூபாவால் அதிகரித்துள்ள இந்நிலையில், விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டினை இச்செவ்வி மூலம் தெளிவுபடுத்துப்பட்டுள்ளது. தமிழ் கார்டியனுக்கு வழங்கிய செவ்வியின் முழு விபரமும் கீழே வருகின்றது.

(☞ 13ம் பக்கம்)

## அன்ரன் பாலசிங்கத்தின் மீது கொலை முயற்சி

(12.02.01)

கடந்த மூன்றாம் திகதி சனிக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மீது கொலை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. இனந்தெரியாத நபர்களைக் கொண்ட குழு ஒன்றே இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. இக்கொலை முயற்சி குறித்து தற்பொழுது பிரித்தானியப் பொலிசார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருவதுடன் பாலசிங்கம் அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பினையும் வழங்கியுள்ளார்கள்.

கடந்த 3ம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில் இலண்டன் நகரில் இருக்கும் பாலசிங்கம் அவர்களது இல்லத்திற்குள் இனந்தெரியாத நபர்களைக் கொண்ட குழுவொன்று பலவந்தமாக பிரவேசிக்க எத்தனித்துள்ளது. பிரதான வாசற்கதவை இக் குழு உடைத்து இல்லத்தினுள் பிரவேசிக்க முயன்றவேளை வீட்டில் பொருத்தப்பட்டிருந்த அபாயமணி ஒலிக்கவே இக் குழுவினர் வீட்டில் பிரவேசிக்கும் முயற்சியை கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் செல்வதற்கு முன்னதாக பாலசிங்கம் அவர்களது காரை கடுமையாக சேதப்படுத்தி இருக்கின்றார்கள். காரின் கண்ணாடிகள், மின் விளக்குகள் அனைத்தும் அடித்து நொருக்கப்பட்டதுடன் ரயர்களும் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நடைபெற்று சற்று நேரத்தின் பின்னர் அங்கு வந்த பிரித்தானிய பொலிசார் விசாரணைகளை உடனடியாக ஆரம்பித்துள்ளனர். இவ்விசார

(☞ 4ம் பக்கம்)

## சமாதான முயற்சிக்கு பிரிட்டனின் தடை பாதிக்காதாம்!

**சந்திரிகா**

(12.02.01)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் அரசு தடை செய்தாலும் கூட அது சமாதான முயற்சிகளை ஒரு போதும் பாதிக்காது என சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐரிஸ் குடியரசு இராணுவத்தை அந்த நாட்டு அரசாங்கம் தடை செய்திருந்தபோதும் அந்த அமைப்புக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம் பெற்றன என்பதைச் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் நான் சுட்டிக்காட்டியுள்ளேன். எனவே பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தாலும் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படமாட்டாது என அவர் மேலும் கூறியுள்ளார்.

## சமாதானப் பேச்சை தடுத்து நிறுத்துங்கள்!

**பௌத்த பிக்குகள் அறைகூவல்**

(11.02.01)

சமாதானப் பேச்சுக்களை தடுத்து நிறுத்தமாறு சிங்கள பௌத்த பிக்குகளின் சம்மேளனம் அறைகூவல் ஒன்றை விடுத்துள்ளது. சிங்களத் தேசிய இனம் அதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக இறங்க வேண்டும் எனவும் அவ் அமைப்பு கூறியுள்ளது. இது தொடர்பாக கடந்தவாரம் கொழும்பில் அவ் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், சமாதான முயற்சிகள் என்ற பெயரில் நச்சுத் தன்மையான சதி நடைபெறுகிறது எனவும், எனவே சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலம் மீளப்பெறப்பட்

(☞ 4ம் பக்கம்)

## விடுமுறை வழங்காததால் கைக்குண்டுத் தாக்குதல்

**அதிகாரியும் சிப்பாயும் காயம்**

(12.02.01)

விடுமுறையில் செல்வதற்கு இராணுவ அதிகாரி மறுப்புத் தெரிவித்ததால் ஆத்திரமடைந்த கடற்படைச் சிப்பாய் தனது கைக்குண்டை கழற்றி வீசியதில் அதிகாரியும் அச்சிப்பாயும் காயமடைந்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன. கடந்த வெள்ளியன்று பிற்பகல் மூன்று மணியளவில் தலைமன்னார்

(☞ 4ம் பக்கம்)

## நான்கு போராளிகள் வீரச்சாவு

(12.02.01)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் கடந்த 8ம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் வீரவேங்கை நித்தியன் (சுப்பிரமணியம் சசிக்குமார் - நெடுங்கேணி) என்ற போராளி வீரச்சாவை தழுவிக் கொண்டார். கடந்த 03.02.2001 அன்று எழுதுமட்டுவாள் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரவேங்கை எழில் (செல்லத்துரை மஞ்சுளாதேவி - யாழ்.), வீரவேங்கை கீதா (பரமலிங்கம்

(☞ 4ம் பக்கம்)

## சுன்னாகத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

(12.02.01)

சுன்னாகம் சிவன் கோயில் பகுதியில் இளைஞர் ஒருவர் சிறீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் மேற்படி இளைஞர் வீதியில் வந்துகொண்டிருந்தபோது அங்கு மறைந்திருந்த படையினர் இவரைச் சுட்டுக் கொன்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆலயத் திருவிழாவிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவரின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR Sarl

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன்
திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France.
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356
தர்சனன்: 01732620605

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natél: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## அன்ரன் பாலசிங்கத்தின்...

ணைகளுக்கு உதவியாக ஸ்கொட்லாண்ட் யாட் பிரிவும் அழைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. தற்பொழுது பிரித்தானியப் பொலிசார் பாலசிங்கம் அவர்களது இல்லத்திற்கு பாதுகாப்பு வழங்கிவருகின்றனர். அத்துடன் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதேவேளை, பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், பாலசிங்கம் அவர்களது உயிருக்கான உத்தரவாதத்தை வழங்குமாறும் பொலிசாருக்கு பணித்துள்ளனர். இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இலண்டனில் உள்ள சிங்களத் தேசியவாத அமைப்பைச் சார்ந்த சிலர் பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டதாகவும் விசாரணைகள் தொடர்வதாகவும் தெரியவருகின்றது. இத் தாக்குதல் சம்பவம் சிறீலங்காவின் சதி முயற்சியாக இருக்கலாம் என நம்பப்படுகின்ற அதேவேளை, முன் பொருதடவையும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சென்னையில் தங்கியிருந்தபோது இவ்வாறானதொரு கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## விடுமுறை...

கடற்படை முகாமில் கடமையாற்றிவந்த மேற்படி சிப்பாய் தனது அதிகாரியிடம் விடுமுறை தொடர்பாக வினவியபோது ஏற்பட்ட தகராறையடுத்தே கைக்குண்டை வீசியதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த அதிகாரி அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். சிப்பாய் மன்னாரில் விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நித்தி வாகன சேவை
உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஷிப்ட், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825
Pub Fr

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## நான்கு...

யோகாம்பிகை - யாழ்.) ஆகிய போராளிகளும் 11.02.2001 அன்று எழுதுமட்டுவாள் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரவேங்கை அன்புமகள் (அருந்தவராசா நகுலேஸ்வரி - யாழ்.)ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். (உ—ன்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## சமாதானப் பேச்சை...

டதை அடுத்து சமாதானம் குறித்த புதிய திட்டம் ஒன்றைப் பற்றி ஜனாதிபதி பேசத் தொடங்கியுள்ளார். அரசமைப்பு நடைமுறைகளைச் சூழ்ச்சித்தனமாக மாற்றுவதன் மூலம் வடக்கில் ஒரு சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே அதன் நோக்கம். புதிதாக அமைச்சு ஒன்றை நிறுவுவதற்கு அரசமைப்புத் திருத்தம் எதுவும் அவசியமல்ல. எனவே தான் வடக்குப் புனர்வாழ்வு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் விவகார அமைச்சு என்னும் புதிய அமைச்சை உருவாக்கி ஈழ வாதியான டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியிருக்கிறார் ஜனாதிபதி. இந்த அமைச்சு தமிழர் தாயகம் எனப்படும் பிரதேசத்தை உள்ளடக்குகிறது. விடுதலைப் புலிகள் கேட்பது போன்று மரபுவழித் தாயகம் என்னும் விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. நாட்டில் புதிய அரசு நிறுவப்பட்டகையோடு நோர்வேயின் தூதர், பிரபாகரனை வன்னியில் சந்தித்தது பற்றிய செய்திகள் வெளியாகின. இச்சதியின் அடுத்தகட்டமாக ஜனாதிபதியையும் இலண்டனில் அன்ரன் பாலசிங்கத்தையும் சொல்ஹெய்ம் சந்தித்தார். நடைபெற்றுவரும் நிகழ்வுகளை உற்றுநோக்குகையில் அரசும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க,வும், விடுதலைப் புலிகளும், தமிழ்க் கட்சிகளும், நோர்வேயும், பிரிட்டனும் இணைந்து ஒரு சதித்திட்டம் உருவாக்கியிருப்பது புலனாகிறது எனவும் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



திரு.திருமதி விஸ்வரூபன் (காந்தி) இராஜநந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அபினாஸ் தனது முதலாவது பிறந்தநாளை 15.02.2001 வியாழக்கிழமை சுவிசிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா(தமிழீழம்), அம்மம்மா (தமிழீழம்) மாமாமார் இராஜசேகரம் (சுவிஸ்), சுபேந்திரராஜா (கனடா), தவனேசலிங்கம் (தமிழீழம்), அத்தைமார் வினோதினி (தமிழீழம்), ஜெயந்தினி (சுவிஸ்), பெரியப்பாமார் சந்திரகுமார் (இலண்டன்), நவநீதராஜா, கணேசமூர்த்தி (தமிழீழம்), பெரியம்மாமார் இராஜேஸ்வரி, இராஜசிறி, இராஜலக்சுமி (தமிழீழம்), சித்தப்பாமார் ஜெயரூபன், சாந்தரூபன் (தமிழீழம்), காந்தரூபன் (கனடா), வசந்தரூபன் (சுவிஸ்), சித்தி ப்ரியா, மச்சாள்மார் கார்த்தி, கஜன், ரோபிதா, ஜெயதர்சினி (தமிழீழம்), மச்சான் தர்ஷன், அண்ணன்மார் தீசன், சுபிந்தன், தனுஷன், தரன், தருஜன், கோகிலன் (தமிழீழம்), அக்காமார் சரண்யா, இளந்தீபா, இளநீதா, டென்சிகா (தமிழீழம்), மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் அபிஸை இறைவன் அருள் பெற்று பல்கலையும் கற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

முகவரி:- Rasiah Rajasegaram
Romansharner str-30, 8592 Uttwil.
TP:- 0041 71 46 11 840

தகவல்:- மாமா சுவிஸ்

பிள்ளையார் துணை

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,
நிகழும் மங்கலகரமான ஸ்ரீ விக்கிரம வருடம் மாசி மாதம் 6ம் நாள் (18.02.01) ஞாயிற்றுக்கிழமை 8.38 மணிமுதல் 9.45 மணி வரை மீனலக்ன ஏகாதசி திதி மூல நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி மு. சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வன்
தமிழீழம் - மயிலிட்டித்துறை (M.L.T)
திருநிறைச் செல்வன்
**ஸ்ரீவரதன்** (M.S.S. வரதன்) அவர்கட்கும்
(நெதர்லாந்து)

திரு. திருமதி. வே. புவனேசன் தம்பதிகளின் புதல்வி
தமிழீழம் - வல்வெட்டித்துறை
திருநிறைச் செல்வி
**கயல்விழி**
(இந்தியா)

இறை அருள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் மேற்படி திருமணம் தேவி திருமணமஹால் திருமண மண்டபத்தில் (47 பீட்டர் பேக்ரி, சபரிமில், திருச்சி-21) நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம் நல்வரவை நாடும்

**மணமகன் வீட்டார்**
திரு. திருமதி. மு. சுப்பிரமணியம் (இந்தியா)
429, இந்திரா காந்தி நகர், K.K. நகர், திருச்சி - 21
தொலைபேசி இலக்கம்: (0091) 431-351778 - (0091) 431-455750
திரு. திருமதி அழகராசா (ஈழம்)
திரு.திருமதி சு. தியாகராசா(ஈழம்)
திரு.திருமதி சு. யோகராசா 431455750 (இந்தியா)
திரு. திருமதி சு. ரவிக்குமார் 566311640 (சுவிஸ்)
செல்வி. சு. வரதலஷ்மி (இந்தியா)
செல்வன் சு. கிருபானந்தபாரதியார் (ஜேர்மனி) 7112367872

**மணமகள் வீட்டார்**
திரு. திருமதி. வே.புவனேசன் (இந்தியா)
பிளாட் தெ.5, கட்டப்பொம்மன்,
ஐயப்பன் நகர், திருச்சி -2
தொலைபேசி இலக்கம்: (0091)431 456849
மைத்துனர் N. கண்ணன் (லண்டன்) 0795025 259007
திருமதி K.சாந்தி (இந்தியா)
செல்வி P.வசந்தி (இந்தியா)
செல்வன் P.வசந்தன் (லண்டன்) 02087678 3059
செல்வி.P. கஸ்தூரி (இந்தியா)

இரு வீட்டார் அழைப்பு
*தொடர்புகட்கு: திரு. S.S. வரதன் (மயிலிட்டித்துறை Holland) 00316532 1 7846*
Pub.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |


மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# ஐ.தே.க.வின் பாத யாத்திரை முடிவடைந்தது

## இறுதி நிகழ்வில் ஒரு இலட்சம் மக்கள்

(11.02.01)

சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சிறீலங்கா அரசின் நாணயவீழ்ச்சியினால் ஏற்பட்ட விலையேற்றங்களுக்கு எதிராக நடாத்திய பாத யாத்திரை நேற்று முன்தினம் கொழும்பில் முடிவடைந்தது. சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று கண்டியில் இருந்து ஆரம்பமாகிய இப் பாதயாத்திரை ஐந்தாவது நாள் கொழும்பில் முடிவடைந்துள்ளது. இவ் இறுதி நாள் நிகழ்வில் ஐ.தேக. ஆதரவாளர்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை கலந்துகொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்போது விலைய திகரிப்புகளைச் சித்தரிக்கும் பொருட்களும் வடிவமைக்கப்பட்டு கலந்துகொண்டவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.



பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்கள்



கூட்டத்தில் உரையாற்றும் ரணில்



பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்கள்

இதேவேளை, இறுதிநாளான வெள்ளியன்று மாலை கொழும்பு நகரசபை மண்டபத்தில் இறுதி நிகழ்வின் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தேக தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஐம்பது சதவீதத்தை வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்களுக்காகச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து விட்டதாகவும், இதனால் விலைவாசி அதிகரித்து மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் தெரிவித்த ரணில், வாழ்க்கைச் செலவு உட்பட பல பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேசிய ரீதியில் பல போராட்டங்கள் நடத்தப்படும். இதன் இரண்டாம் கட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும். அத்துடன் மேலும் பல தொடர் போராட்டங்கள் நடத்தப்படும். வெளிநாட்டின் நாணயமாற்று இன்னும் ஏழு மாதங்களுக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பிதம் அடைவதைத் தடுக்க வேண்டுமானால் அரசாங்க செலவினம் குறைக்கப்பட வேண்டும் அல்லது வரிகளை அதிகரிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். இதில் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, உபதலைவர் காமினி அத்துக்கோரள மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் உரையாற்றினார்கள்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மட்டு விஜயம்

(11.02.01)

பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகர் செல்வி லிண்டா டாபீல்ட் கடந்தவாரம் மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவருடன் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் றொபேட் ஹென்டோல் உட்பட உயர்ஸ்தானிகராலய உயரதிகாரிகளும் சென்றிருந்தனர். அங்கு சிறீலங்கா படை அதிகாரிகள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்களை சந்தித்து, மட்டக்களப்பின் அபிவிருத்தி தொடர்பாக அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை, மட்டு — திருமலை மறைமாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை அவரது இல்லத்தில் சந்தித்து பேசியுள்ளனர். இதன்போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரித்தானிய அரசு தடைசெய்வதால் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் பாதிக்கப்படலாம். எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெறுவதற்கும், சிறுபான்மை மக்களின் பிரச்சினை தீர்வுக்கும் பிரித்தானியா உதவவேண்டும் எனவும் ஆயர் கேட்டுக்கொண்டார். இதற்கு பதிலளித்த செல்வி லிண்டா, இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே தமது நாடு விரும்புகிறது எனவும், சமாதானமுயற்சிகள் வெற்றி பெறும் வகையில் மக்களை அதன்பால் அணி திரட்ட வேண்டும் என்றும், மக்கள் இருசாராரையும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தூண்ட வேண்டும் என்றும், இதற்கு மதத் தலைவர்கள் உழைக்க வேண்டும் என்றும் ஆயரிடம் கேட்டுக்கொண்டார்.

# கொள்ளையின் மறு வடிவமே யுத்தம்!

## - றொனி டிமெல்

(11.02.01)

கொள்ளையின் மறுவடிவமே யுத்தம் என சிறீலங்கா துறைமுகங்களின் அபிவிருத்தி அமைச்சர் றொனி டிமெல் தெரிவித்துள்ளார். கொழும்பு செய்தி நிறுவனமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாட்டில் சமாதான சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் தென்படுகின்றன. சமாதானத்துக்காக நீண்ட காலம் அயராது உழைத்து வருகிறேன். இதற்காக என்னைக் கொலை செய்ய பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே இந்தக் கொலை முயற்சிகளின் பின்னணியில் இருந்தார். நான் எப்போதும் யுத்தத்துக்கு எதிரானவன். கொள்ளையின் மறு வடிவமே யுத்தம். யுத்தத்தின் மூலம் நிலங்களைக் கைப்பற்றுவதும் ஒருவகையான கொள்ளைதான். இது தேவையற்ற ஒன்று. யுத்தத்தை நிறுத்தினால் அதற்குச் செலவாகும் பெரும் நிதியை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என்றும் றொனி டிமெல் அப்பேட்டியில் மேலும் கூறியுள்ளார்.

# மட்டு. வாவியில் படகு கவிழ்ந்தது! மூன்று பெண்கள் உட்பட நான்கு பேர் பலி

(11.02.01)

மட்டு. காஞ்சிரங்குடா வாவியில் படகொன்று கவிழ்ந்து நான்கு பேர் பலியாகியுள்ளனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர்களின் படகோட்டியும் மூன்று பெண்களும் அடங்கியுள்ளனர். உயிரிழந்தவர்கள் முனைக்காட்டைச் சேர்ந்தவர்களான மனோகரன் அசோகன்(19), சின்னத்தம்பி நல்லமுத்து (46), வேலாப்போடி ஞானம்மா(47), கொத்தியாவலையைச் சேர்ந்த மாணிக்கப்போடி மேனகா(25) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரு படகுகளை ஒன்றாக இணைத்து முன்னர் இவ்வாவி ஊடான போக்குவரத்து இடம்பெற்று வந்ததாகவும், அப்படகு சேதமடைந்ததையடுத்து சிறிய தோணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்தன என்றும் அதில் பயணம் செய்த போதே இவ்விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சடலங்கள் புதனன்று வாவியில் இருந்து மீட்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாவியில் இடம்பெற்ற மூன்றாவது படகு விபத்து சம்பவம் இதுவாகும். இச்சம்பவங்களில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாயாறு விமானத் தாக்குதலில் மீனவர் பலி

(11.02.01)

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவேளை, சிறீலங்கா விமானப் படையினரும், கடற்படையினரும் இணைந்து கடந்த ஞாயிறு, திங்கள் இரு தினங்கள் நாயாறு முதல் நாகர்கோவில் வரையான கடற்கரை பிரதேசங்கள் மீது நடாத்திய கடும் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்களில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏராளமான பொதுமக்களின் குடியிருப்புகளும், படகுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

மீனவர்களின் படகுகள் மீது சிறீலங்கா கடற்படையின் நடாத்திய பீரங்கி தாக்குதலில் முல்லைத்தீவு வட்டுவாகலை சேர்ந்த யோகேந்திரராசா பார்த்திபன்(17) என்ற மீனவர் கொல்லப்பட்டுள்ளார். ஏனையவர்கள் படகுகளில் இருந்து கடலில் குதித்ததனால் உயிர் தப்பியுள்ளனர். இதன்போது மீனவர்களின் இரு மீன்பிடி படகுகளும் பலத்த சேதமடைந்து கடலில் மூழ்கியதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.


**A.S.C.E.S இன் புதியவகுப்புகள்**

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

CP1,CP2,CM1,CM2,6e → terminale
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire,comptabilité etc
வீட்டுப்பாடங்கள் செய்ய விளக்கம் பெற உதவி செய்யப்படும்
சனி பி.ப. 1.30 மணி– ஞாயிறு காலை 10 மணி

பிரஞ்சு
17.02.01 சனி பி.ப. 3.30 மணி
18.02.01 ஞாயிறு பி.ப. 3.30 மணி
19.02.01 திங்கள் பி.ப. 2 மணி
20.02.01 செவ்வாய் பி.ப. 3 மணி
21.02.01 புதன் பி.ப 3.30 மணி
17.02.01 3 மாத காலப் பேச்சுப்பயிற்சி வகுப்பு சனி பிப 3.30 மணி

பிரஞ்சுகற்க சிறந்த கைநூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும்
பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
17-18.02.01 சனி – ஞாயிறு காலை 11 – பி.ப 1.30மணி–3.30

கம்பியூட்டர்
win 98-2000,word,excel,access,NT4
பாகங்கள்பொருத்த வாங்க ஆலோசனை
17-18.02.01 சனி–ஞாயிறு காலை 10மணி பி.ப 1.30மணி 3.30 மணி
ஞாயிறு பி.ப 1 மணி hardware பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
சிறுவர்க்கான தமிழ்~ ஆங்கிலம்~ பிரஞ்சு~கணித வகுப்புக்கள்
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புக்கள் ஞாயிறு பி.ப 3 மணி
தையல் கேக் அலங்காரம் : சனி பி.ப 2 மணி 3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 10 மணி திங்கள் புதன் 3.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Direction N°13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt

# புலிகள் சமாதானப் பாதையில் உறுதியாக நிற்கின்றனர்

## – வன்னி சென்று திரும்பிய மன்னார் ஆயர் தெரிவிப்பு

(11.02.01)

விடுதலைப் புலிகள் தமது சமாதான அரசியல் பாதையில் உறுதியாக நிற்கின்றனர் என கடந்த வாரம் வன்னி சென்று திரும்பிய மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார். கடந்த 5ம் திகதி செவ்வாயன்று தமது திருச்சபை பணிகளின் பொருட்டு வன்னிப் பிரதேசத்திற்கு மன்னார் ஆயர் இராயப்பு யோசப், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோர் சென்றிருந்தார்கள். அப்போது அங்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை சந்தித்துப் பேசியதாகவும் இதன்போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் சமாதானப் பேச்சுக்களில் அவர்களுக்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதாகவும் மன்னார் ஆயர் கூறியுள்ளார். கடந்த வெள்ளியன்று வன்னியில் இருந்து திரும்பிய ஆயர் மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகள் இவ்வளவு காலமும் நடந்து வந்த பாதையிலும் பார்க்க இப்போது செல்லத் தொடங்கியுள்ள பாதை அவர்களுடைய இலட்சியப் போக்கை பொறுத்தவரையில் மேலோங்கி இருப்பதாக விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தருடன் பேசிய போது புரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் தமது இலட்சியத்தை அடைவதற்காக நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு உறுதுணையாக உறுதியுடன் இருக்கிறார்கள் எனக் கூறிய ஆயர், அரசாங்கம் இவ்வளவு காலமும் சமாதான முயற்சிகளுக்குத் தேவையான நல்லெண்ண அறிகுறிகள் எதனையும் காட்டவில்லை. அந்த சமிக்ஞைகளை தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும், சமாதான வழிக்குரிய நல்ல சமிக்ஞைகளை அரசு காட்டினால், தாங்கள் தொடர்ந்தும் இப்போதைய அரசியல் வழியில் செல்லத் தயாராக இருக்கிறோம். நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாற்காகவே நாங்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். சமாதான முயற்சிகளுக்காக நோர்வே நாட்டை வரவழைத்த அரசு, அதற்கு சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சமாதான முயற்சிகளுக்கு உலக நாடுகள் கொடுத்து வரும் ஊக்கம் மற்றும் அழுத்தம் காரணமாக நாங்கள் எமது ஒத்துழைப்பை பூரணமாக வழங்கி வருகிறோம். சமாதான தீர்வுக்கு இது தக்கதொரு



இராயப்பு ஜோசப்

தருணம் என்று நாங்கள் உணர்ந்தமையினால் இதனை தொடர்ந்து முன்னெடுத்து செல்கிறோம். இதனை ஏற்று அரசு நல்ல அறிகுறிகளை காட்டுமானால் அதற்கு ஆதரவான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

போர்க் கைதிகளின் விடுதலை மற்றும் அரசு எதிர்பார்க்கும் ஏனைய விடயங்களையும் நாங்கள் மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதற்கு 3ம் தரப்பு நாட்டின் உதவியோடு யுத்த நிலைமைகள், யுத்தத்தின் தாக்கங்கள் குறைக்கப்பட்டு முற்று முழுதான ஓர் அரசியல் சூழ்நிலையில் காலடி எடுத்து வைக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்த்து, எல்லா இடங்களிலும் எமது போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தி சமாதான முயற்சிக்கு ஆதரவு கொடுத்துள்ளோம். இந்நிலையில் ஆனையிறவை மீண்டும் பிடிப்பதற்கு இராணுவம் முயற்சிக்குமானால் அதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம். இரு தரப்பிலும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்ட நிலையிலேயே நாங்கள் ஆனையிறவை கைப்பற்றினோம். அரசு ஆனையிறவை எங்களிடம் இருந்து கைப்பற்ற முயற்சிக்குமானால் மீண்டும் அத்தகைய பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் என்பது நிச்சயம். தொடர்ந்து இராணுவத்திற்கு இழப்புக்கள் ஏற்பட்ட வண்ணமே இருக்கும். அதன் பின்னர் பேச்சுவார்த்தைக்கு இடமில்லாமல் போகலாம். அழிவுப் பாதையை விட்டு ஆக்கபூர்வமான சமாதான வழியில் அரசு நடக்குமானால் இரட்டிப்பான முறையில் அரசியல் செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுப்போம். எனவே வீண் உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தாமல் அரசாங்கம் நன்மையான சமாதான வழிக்கு வந்து சமாதான பேச்சுக்களை நடத்த வேண்டும் என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை சந்தித்தபோது தம்மிடம் தெரிவித்ததாக ஆயர் கூறியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் போர்ப் பாதையை விட்டு சமாதான அரசியல் பாதையில் உறுதியாக நிற்பது எங்களுக்கும் பொது மக்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது எனத் தாங்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களிடம் தெரிவித்ததாகவும், இந்த வழியை விட்டு பின்வாங்காமல் தொடர்ந்து முன்னேறிச் செல்லுமாறு தாங்கள் விடுதலைப் புலிகளை கேட்டுக்கொண்டதாகவும், அழிவுதரும் போர்வழிக்குத் திரும்பாமல் சுபீட்சம் தருகின்ற நாகரிகமான சமாதான வழியில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து முன்செல்ல வேண்டுமென்று தாங்கள் அவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொண்டதாகவும் ஆயர் மேலும் கூறியுள்ளார்.

# கைதடியில் மீளக்குடியமரக்கூடிய நிலை இல்லை!

(11.02.01)

கைதடிப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறுவதற்கான எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லை என அங்கு சென்று திரும்பிய மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் கைதடிப் பகுதிக்கு சென்று தமது வீடுகளைப் பார்வையிட்ட மக்கள், வீடுகள் உடைந்தும் சிதைவடைந்தும் காணப்படுகின்றது. இங்கு தற்போது மீளக்குடியமர முடியாத நிலையே காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டால் பொதுமக்களை கவசமாகப் பாவித்து தப்பித்துக் கொள்வதற்காக இப் பகுதிகளில் மக்களை வலுக்கட்டாயமாக மீளக் குடியேற்றுவதற்கு சிறீலங்கா இராணுவமும் அதற்குத் துணையாக தமிழ் கூலிக்குழுக்களும் செயற்பட்டு வருகின்றன. ஆனால் ஆபத்தான இப்பகுதிகளில் மக்கள் பாதுகாப்பு கருதி உடனடியாக மீள்க்குடியேற வேண்டாம் என விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# படையினரால் இரு பிள்ளைகளின் தாய் பாலியல் வல்லுறவு

(11.02.01)

மட்டு. செட்டிப்பாளையம் கிராமத்தில் சிறீலங்காப் படையினர் இரு பிள்ளைகளின் தயார் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். பாதிக்கப்பட்ட இப்பெண் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நான்காம் திகதி மாலை, அருகில் உள்ள காட்டிற்கு விறகு எடுத்துவரச் சென்றபோது அங்கு மறைந்திருந்த சிறீலங்கா சிப்பாய் அவரை துப்பாக்கிமுனையில் மிரட்டி இழுத்துச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர், அப்பெண்ணிடம் இச்சம்பவம் பற்றி வெளியில் சொன்னால் குடும்பத்தையே அழித்து விடுவோம் என எச்சரித்து விடுவித்துள்ளார். எனினும் அப்பெண் இது பற்றி சிறீலங்கா பொலிசாரிடம் முறைப்பாடு செய்தபோது அக்கறையெடுக்காத பொலிசார், பின்னர் எற்பட்ட அழுத்தம் காரணமாக செட்டிப்பாளையம் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரை கைது செய்து மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர்.

# நோர்வே அரசின் மூலம் எமது அபிலாசைகள் நிறைவேற வேண்டும்!

## – எரிக் சொல்ஹெய்மிற்கு வன்னி வாழ் மக்கள் மகஜர்

(11.02.01)

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கௌரவமான சுதந்திர வாழ்வு என்னும் தமிழ் மக்களின் அபிலாசை நிறைவேற தங்களது சமாதானப் பணி இடைவிடாது முன்னெடுக்கப்பட வேண்டும். நோர்வேயின் இந்த முயற்சிகள் மூலம் எமது அபிலாசைகள் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மிற்கு வன்னி வாழ் மக்கள் கடந்த 5ம் திகதி செவ்வாயன்று அனுப்பிவைத்த மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னி மக்களின் சார்பில் புதுக்குடியிருப்பு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இந்த மகஜரை எரிக் சொல்ஹெய்மிற்கு அனுப்பிவைத்துள்ளது. அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, நீடித்த சாத்தியப்பாடுடனான சமாதானத்துக்கான அழைப்பாக நல்லெண்ண சமிக்ஞைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளனர். ஆனால் அவை உதாசீனப் படுத்தப்பட்டன என்பதே வேதனைக்குரிய வரலாறாகும். சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற காலங்களிலும் சிங்களப் பௌத்த பேரினவாதம் வஞ்சகம் மிகுந்த நோக்குடன் சமாதானத்துக்கான பாதையில் இடர்களை விளைவித்து வந்தது. மேற்கண்ட பின்னணியில் மாற்றம் நிகழாத சூழ்நிலையில் விளைவிக்கப்படுகின்ற இடர்களுக்கு மத்தியிலும், சமாதான இலக்கை எப்படியாவது எட்டுவதென தாங்கள் விடாப்பிடியாகமுயன்று வருகின்றீர்கள். சர்வதேச சமூகத்தின் சமாதான விருப்பினையும், மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதில் உள்ள பற்றினையுமே தங்களது இடைவிடாத முயற்சிகள் சுட்டி நிற்கின்றன. சுதந்திரமான கௌரவம் மிக்க வாழ்வையே அபிலாசையாகக் கொண்டுள்ள நாங்கள், சமாதானப் பேச்சுக்கான ஏற்பாட்டாளராகச் செயற்பட முன்வந்துள்ள தங்களதும் நோர்வே அரசினதும் முயற்சிகள் மூலம் எமது அபிலாசைகள் நிறைவேற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரிட்டன் புலிகளை தடைசெய்யக் கூடாதெனக் கோரி யாழ். பொங்குதமிழ் மாணவர்கள் ஐந்து இலட்சம் கையெழுத்துக்கள் சேகரிப்பு

(11.02.01)

பிரித்தானிய அரசு கொண்டுவரவுள்ள புதிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி குடாநாட்டில் ஐந்து இலட்சம் மக்களிடம் கையெழுத்து திரட்டும் திட்டமொன்றை யாழ். பல்கலைக்கழக பொங்கு தமிழ் மாணவ சமூகம் மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகம் மேற்கொண்டுவரும் பொங்குதமிழ் நிகழ்வின் ஒரு அங்கமாகவே இந்த கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாணவ சமூகம் தெரிவித்துள்ளது.

மாணவர்களின் இப் பொங்கு தமிழ் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புக்களையும் எச்சரிக்கைகளையும் சிறீலங்கா இராணுவம் விடுத்திருந்த நிலையிலும், தொடர்ந்து மாணவர்கள் பொங்கு தமிழ் எழுச்சியினை மேற்கொண்டு வந்தகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழகச் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆரம்பத்தில் ஆதரவு வழங்கிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், இராணுவத்தினரின் நெருக்குதல் காரணமாக கடந்த கடந்த வியாழனன்று நடைபெறவிருந்த கூட்டத்திற்கு அனுமதி மறுத்திருந்ததாகவும், எனினும் வெளிப்படையாக அவர் அனுமதி மறுத்திருந்த போதிலும் உளரீதியில் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் யாழ். பல்கலைக்கழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்டபடி விடுதலைப் புலிகளை பிரிட்டன் அரசு தடை செய்யக்கூடாதென வலியுறுத்தி ஐந்து இலட்சம் மக்களின் கையெழுத்து சேகரிக்கப்பட்டு பிரிட்டன் அர்சுக்கு அனுப்பிவைக்கப்படும் என பல்கலைக்கழக மாணவ சமூகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் தமது பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு, திட்டமிட்டவாறு தொடர்ந்து நடைபெறும் எனவும் இதன் இரண்டாவது பெரும் நிகழ்வு விரைவில் முன்னையதைவிட பாரியளவில் நடத்தப்படும் எனவும் பல்கலைக்கழகச் சமூகம் தெரிவித்துள்ளது.

## புலிகளின் ஈழக் கனவினை சொல்ஹேய்ம் நனவாக்கப்போகிறார் - ஜே.வி.பி.

புலிகளின் ஈழக்கோரிக்கைக் கனவு மேற்குலக நாடுகளின் வழி காட்டுதலின்பேரில் நோர்வே தூதர் சொல்ஹேய்ம் ஊடாக நனவாகப்போகின்றது. இதற்கு இந்த அரசும் இணங்கிவிட்டது. இப்போது இதனை மறைத்து மக்களை ஏமாற்றுவதற்காக படையினரின் புகழ்பாட அரசில் உள்ளவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வாறு சிறீலங்காவின் ஜேவிபி. அமைப்பின் உறுப்பினர் விமல் வீரவன்ச சிறீலங்காப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார். சிறீலங்காவின் அவசரகால நிலைமையை நீடிக்கும் பிரேரணை மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவது என்ற பேரில் மேற்கு நாடுகள் இந்த நாட்டின் மீது தலையீடுகளை மேற்கொள்ளுகின்றன. இதன் மூலமாக புலிகளின் ஈழக் கனவு நனவாகப் போகிறது எனவும் அவர் அடிக்கடி தனது உரையில் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

## வவுனியாவில் நெருப்புக்காய்ச்சல் பரவும் அபாயம்

வவுனியாப் பிரதேசத்தில் நெருப்புக் காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றிவருவதாக வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற வருவோரில் மூன்று பேருக்கு இந்நோய் இருப்பது வைத்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இக் காய்ச்சல் பரவும் அபாயம் குறித்து வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களிடையேயே இக் காய்ச்சல் பரவ ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது. அகதி முகாம்களில் காணப்படும் இட நெருக்கடி மற்றும் சுகாதார சீர்கேடுகள் என்பனவே இந்த நோய்க்கான காரணம் எனவும் அண்மையில் பெய்த பெரு மழை வெள்ளம் இன்னும் பல இடங்களில் தேங்கியிருப்பதால் இக் காய்ச்சல் மேலும் பரவும் அபாயம் எழுந்துள்ளதாகவும் அஞ்சப்படுகிறது.

## இரத்தினபுரி இந்து ஆலய கோபுரத்தை இடிக்க முயற்சி!

இரத்தினபுரிப் பகுதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய இராஜகோபுரத்தை இடித்துத் தகர்க்க சிறீலங்காவின் வீதி அதிகாரசபை நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. இந் நடவடிக்கை குறித்து இப்பகுதித் தமிழ் மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். பெரும் பழமையும், பெருமையும் மிக்க ஆலயமாக இவ் ஆலயம் இருந்து வருகின்றபோதிலும் வீதி அபிவிருத்திப் பணிகள் என்ற சாக்கில் இவ் ஆலயத்தை முற்றாக இடித்துத் தகர்க்க வீதி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே ஆலயத்தின் முன் மண்டபப் பகுதி மேற்படி அதிகார சபையினால் முற்றாகச் சிதைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இராஜகோபுரத்தை இடித்துத் தகர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் இந்தச் செயலைத் தடுத்து நிறுத்துமாறு இப் பகுதி மக்கள் சிறீலங்கா அரசின் சகல மட்டங்களிற்கும் அவசர முறையீட்டு மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர்.

## கடவுச்சீட்டுப்பெற கொழும்பு சென்றவர்கள் வீடு திரும்பவில்லை

மட்டக்களப்பு திருப்பெருந்துறை வாசிகளான இருவர் கடவுச்சீட்டுப் பெறுவதற்காக கொழும்புக்குச் சென்றபின்னர் வீடு திரும்பவில்லை என மட்டக்களப்பு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருப்பெருந்துறை முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் உதயராஜ் என்ற ஒரு குடும்பஸ்தரும் அவரது தாயாரான செல்வராணி என்பவருமே காணாமல் போனவர்களாவார். ஜனவரி மாதம் 3ம் திகதி கொழும்புக்குப் புறப்பட்ட இவர்களைப்பற்றிய செய்திகள் எதுவும் இதுவரை இவர்களது உறவினர்களுக்குக் கிடைக்கவில்லை. இது ஒருபுறமிருக்க பட்டிருப்பைச் சேர்ந்த நகைக்தொழிலாளியான சீனித்தம்பிராஜா என்பவர் கொழும்பில் வைத்து சிறீலங்கா குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

## ஜானக பெரேராவிற்கு தூதர் பதவி

வடக்குக் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்கெதிரான பல அராஜக நடவடிக்கைகளை இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொண்ட சிறீலங்கா இராணுவ அதிகாரிகளுள் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் குறிப்பிடத்தக்கவர். கடந்த மாதம் இராணுவச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவருக்கு அவுஸ்திரேலிய நாட்டிற்கான சிறீலங்காத் தூதுவராக நியமனம் பெற பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக லெப்ரினன்ட் ஜெனரல் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே தூதுவர் பதவிகள் வழங்கப்படுகின்றபோதிலும் ஜானக பெரேராவினது பேரும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## மார்ச் 8ல் வரவு செலவுத் திட்டம் யுத்தத்திற்கு 6338 கோடி ஒதுக்கீடு

சிறீலங்கா அரசின் 2001ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அடுத்தமாதம் 8ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதிநிதி அமைச்சரும் அரசியலமைப்பு விவகார கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க இருப்பதால் அதற்கு முன்னோடியாக வரவுசெலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த 8ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் 67 ஆயிரத்து 181 மில்லியனுக்கு குறைவான தொகை துண்டுவிழலாம் என எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், யுத்தத்திற்கென 6338 கோடியே 90 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இத் தொகையானது தரைப்படை, விமானப் படை, கடற்படை, பொலிஸ் படை ஆகியவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றது. இவ்வாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனத்திற்காக மேலதிக தொகை மேலும் ஒதுக்கப்பட்டிருப்பதால் மொத்தமாக இவ் வருடத்திற்கான பாதுகாப்புச் செலவீனம் 8000 கோடி ரூபாவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## கசகஸ்தானிலிருந்து திருப்பி அனுப்பப்படும் 24 இலங்கையர்கள்!

ஜேர்மனி எனக் கூறி கடந்த டிசம்பர் மாதம் கசகஸ்தான் நாட்டில் இறக்கிவிடப்பட்ட 24 இலங்கையர்களும் எதிர்வரும் 17ம் திகதி மீண்டும் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதப் பிற்பகுதியில் 25 இலங்கையர்கள் பயண முகவர்கள் சிலரால் கசகஸ்தான் நாட்டில் கைவிடப்பட்டனர். இது தான் ஜேர்மனி எனக்கூறியே இவ் இளைஞர்கள் முகவர்களால் கைவிடப்பட்டனர். நிர்க்கதியான நிலையில் இருந்த இவ் இளைஞர்கள் நான்கு நாட்களுக்கு மேலாக மிகக் கடுமையான குளிரில் அலைந்து திரிந்ததால் அவர்களில் ஒருவர் குளிரில் விறைத்து பலியாகிவிட்டார். அவரது சடலத்தையும் காவிக் கொண்டு ஏனையவர்கள் அலைந்துதிரிந்தவேளை கசகஸ்தான் எல்லைப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டனர்.

தற்பொழுது இவர்கள் அனைவரையும் இந்தியத் தலைநகர் புதுடெல்லியூடாக கொழும்பு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச குடியகல்வு அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

## பிரிட்டனில் சிங்கள இனவாத அமைப்புகளை தடைசெய்ய கோரிக்கை

(11.02.01)

பிரிட்டனில் செயற்படும் சிங்கள இனவாத அமைப்புகளை உடனடியாகத் தடை செய்யுமாறு பிரிட்டனிலுள்ள உள்ள தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கையில் சமரசத் தீர்வுக்கான தமிழர்கள் அமைப்பு என்ற கூட்டமைப்பே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரியவருகிறது. இலங்கையில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களுக்கு இத்தகைய சிங்கள இனவாத அமைப்புகளே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள கூட்டமைப்பு, சிங்கள இனவாத அமைப்புகளின் உதவியுடனேயே குமார் பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்யக்கூடாது எனவும் இக் கூட்டமைப்பு பிரிட்டன் அரசிடம் கோரியுள்ளது.


**உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்**

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமரால்ஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Pega Star -Co Verleger**
**Mr. A. Thevaraj**
**Hasenberg str. 47**
**70176 Stuttgart/ Germany**
**Tel: 0049 + 711 - 6157028**
**Fax: 0049 + 711-6157030**
**E-Mail: theva@t-online.de**

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
*படிவத்தை நிரப்பி அனுப்பவும்*

*Fullname:* ......................................
*Date of Birth:*.................. *Time of Birth:*............
*Place of Birth:* ......................................
*Address:*......................................
......................................
*City/ Date:*......................... ____________
*Signature*

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub.Gr



பிரான்ஸ் — ஆர்ஜோன்தெய்
**தமிழ்ச்சோலையின்**
**முதலாவது ஆண்டு**
**நிறைவு விழா**

காலம்:– 18.02.2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:– பிற்பகல் 15.00 மணி
இடம்:– Salle Jean - Vilar
9Bld. Heloïse,
95100 Argenteuil.
Gare: Argenteuil.
Bus 140, 08 (Borderel)

Pub. Gra.

# பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்த இளைஞர்களின் கண்களை மக்கள் தோண்டி எடுத்தனர்

இளம்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்துவிட்டு வீசியெறிந்த மூன்று இளைஞர்களின் கண்களை பொதுமக்கள் தோண்டி எடுத்துள்ளனர். இதன்போது ஒரு இளைஞன் பலியாகியுள்ளான்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; பீகார் மாநிலம் பாட்னா நகரில் உள்ள நவாடா என்ற கிராமத்தில் உள்ள அண்ணன், தம்பி, நண்பன் உட்பட மூன்று இளைஞர்கள் அக்கிராமத்து பெண் ஒருவரை மாறி மாறி வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் படுகொலை செய்துள்ளனர். இதனால் கோபங்கொண்ட அக் கிராம மக்கள் மூன்று இளைஞர்களையும் தேடிப் பிடித்து, கிராம மக்கள் அனைவரும் அடித்து, உதைத்து இழுத்துச்சென்று கட்டிவைத்து தாக்கிய பின்னர் அவர்களது கண்களையும் தோண்டி எடுத்துள்ளனர். இதன்போது ஒரு இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான். ஏனைய இருவருக்கும் (சகோதரர்கள்) தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பொது இடங்களில் புகை பிடிக்க தடை

இந்தியாவில் பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு தடை விதிக்கும் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் புகைத்தலினால் ஏற்படும் தீமை பற்றி நடைபெற்ற விவாதத்தின் இறுதியில், பொது இடங்களில் புகைத்தலுக்கான தடை விதிப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், இது தொடர்பாக மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் சிகரெட், புகைத்தல் தொடர்பான விளம்பரங்களுக்கு தடை, புகைத்தல் பொருட்களை 18 வயதிற்கு உட்பட்டவர்கள் பயன்படுத்த தடை, சிகரெட், புகையில் பெட்டியில் அதன் பெயரின் தலைப்பிற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே அளவு முக்கியத்துவம் அதே அளவிற்கு அதனால் ஏற்படும் ஆபத்து குறித்த எச்சரிக்கையும் இருக்கவேண்டும். அத்துடன் பெட்டிகளில் ஆங்கிலம் மற்றும் அம் மாநிலத்தின் மொழியில் எச்சரிக்கை அறிவிப்பு இருக்க வேண்டும் என்பன போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை சட்டமாக்கப்பட்டு மீறுபவர்கள் மீது மூன்று ஆண்டு வரையான தண்டனை வரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இத் தடைச் சட்டம் கொண்டு வருவது பற்றி கூறிய பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரமோத் மகாஜன்;

உலகில் 55 நாடுகளில் இது போன்ற தடைச் சட்டங்கள் உள்ளன. அவற்றில் 21 நாடுகளில் புகையிலை தயாரிப்பு பொருட்களை விளம்பரம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. 19 நாடுகளில் 'பெட்டிகளின் மீது புகையிலையில் அடங்கி உள்ள நச்சுப் பொருட்கள் பற்றிய விவரம் இடம்பெறவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. புகையிலையின் தீங்கில் இருந்து புகை பிடிக்காதவர்கள் மற்றும் புகை பிடிப்போரை காப்பாற்றும் நோக்கத்தில் இந்தச் சட்டம்கொண்டு வரப்படுகிறது.

இந்த சிகரெட் தடைச் சட்டத்தை நாடு முழுவதும் மத்திய அரசு அமுல்படுத்தும். இதுவரை பஞ்சாப், கோவா, மேற்கு வங்காளம், உத்திரபிரதேசம், மற்றும் எல்லா யூனியன் பிரதேசங்களும் தான் புகையிலை தயாரிப்புகளுக்கு கட்டுப்பாடு விதிக்கவேண்டும் என்று வற்புறுத்தி உள்ளன. உலகில் ஆண்டுதோறும் புகையின் தீங்கால் 30 இலட்சம் பேர் பலியாகிறார்கள். இந்தியாவில் மட்டும் 10 இலட்சம் பேர் உயிர் இழக்கிறார்கள். புகை பிடிப்பவர்களுக்கு புகை பிடிக்காதவர்களை விட ஆயுள் ஏழரை ஆண்டுகள் குறைவு என்று ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. புகை பிடிப்பதால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு 13,517 கோடி ரூபா தேவையாகிறது. இது புகையிலை விற்பனை மூலம் சம்பாதிக்கும் தொகையை விட மிக அதிகமானது ஆகும் எனத் தெரிவித்தார்.

# 160 பாகிஸ்தான் மீனவர்கள் விடுதலைக்கு ஏற்பாடு

இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன் பிடித்த பாகிஸ்தான் மீனவர்கள் 160 பேர் இந்திய சிறையில் உள்ளனர். இவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இதனையடுத்து, இவர்களை உரிய பாதுகாப்புடன் பாகிஸ்தான் அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு பாகிஸ்தானிடம் கேட்டுக்கொண்டுள்ளது.




## இவ்வாரச் செய்திகள்

- ★ காஷ்மீரில் ஆறு சீக்கியர்கள் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து நடந்த ஆர்ப்பாட்ட பேரணி மீது பொலிசார் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக இரு காவற்துறை அதிகாரிகள் இடைநீக்கம்.
- ★ 27 ஈழத் தமிழ் அகதிகள் தனுஷ்கோடியை வந்தடைந்தனர். விசாரணைகளின் பின்னர் அனைவரும் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- ★ இந்திராகாந்தி ஆட்சிக்காலத்தில் அமைச்சராகவும் காங்கிரசின் செய்தி தொடர்பாளராகவும் இருந்த அக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான என்.காட்ஹில் [72] மரணமானார்.
- ★ காஷ்மீர் கார்கில் பகுதியில் வீடொன்றினுள் இருந்து குண்டு வெடித்ததில் வீட்டிலிருந்த தந்தையும் இரு பிள்ளைகளும் கொல்லப்பட்டனர்.
- ★ பின்னணிப் பாடகர்களான டி.எம். சௌந்தரராஜனுக்கும் நாகூர் ஹனீபாவிற்கும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ச் செம்மல்' விருது வழங்கியுள்ளது.
- ★ அசாமில் போராளிகள் இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- ★ தஞ்சையில் தொடருந்து பாதையில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று குழந்தைகள் தொடருந்து மோதிப் பலியானார்கள்
- ★ கோல்கத்தா விமான நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புத்துறை பொலிசார் கண்மூடித்தனமாக நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு விமான நிலைய அதிகாரிகள் கொல்லப்பட்டதுடன், இரு காவல்துறை அதிகாரிகள் படுகாயமடைந்தனர். இதேவேளை அக் காவலாளி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றவேளை படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# குஜராத்தில் மீண்டும் நில நடுக்கம் 40 பேர் காயம்

குஜராத்தில் மீண்டும் கடந்த வெள்ளியன்று நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது 40 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த வெள்ளியன்று மட்டும் 13 தடவைகள் நில நடுக்கம் ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். நில நடுக்கம் ஏற்பட்டபோது அச்சம் காரணமாக மாடிகளில் இருந்து குதித்தவர்களே காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 26ம் திகதி குஜராத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சுமார் 30,000 பேர் வரை கொல்லப்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் படுகாயங்களுக்கு உள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குஜராத்தில் 26ம் திகதி இடம்பெற்ற பூமி அதிர்வில் தரைமட்டமாகிய இந்திய அரச வங்கியின் இடிபாடுகளுக்குள் இருந்து 20 கோடி ரூபா இராணுவத்தினரால் மீட்கப்பட்டது. இரும்பு அறைக்குள் இருந்த இப் பணத்தை இராணுவத்தினர் எட்டு மணிநேர முயற்சியின் பின்னர் மீட்டெடுத்தனர் எனச் செய்திகள் தெரிவித்துள்ளன.

# பூமியில் புதையுண்ட 300 மாணவர்களுக்கு நினைவு மண்டபம்

குஜராத் பூமி அதிர்வின் போது, குடியரசு தின விழாவை முன்னிட்டு தேசியக்கொடியுடன் வீதியில் அணிநடையாக சென்று கொண்டிருந்த 300 மாணவர்கள் கட்டடங்கள் இடிந்து விழுந்து பலியானார்கள். இவர்களின் நினைவாக மீட்புப் பணிகள் முடிவடைந்த பின்னர் அப்பகுதியில் நினைவு மண்டபம் ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதியில் கொல்லப்பட்ட மாணவர்களில் 50 பேரது உடல்களே மீட்கப்பட்டன. ஏனையவை மீட்க முடியாத நிலையில் இருந்ததால் மீட்புப் பணி கைவிடப்பட்டது எனவும் செய்திகள் தெரிவித்தன.

ஆறே மாதங்களில் கணினியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணினி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணினி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர [9–16 வயது] வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு: Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

# 138 மணிநேரத்தின் பின் உயிருடன் ஒருவர் மீட்பு

ஜார்கண்டில் உள்ள தன்பாத் நிலக்கரி சுரங்கத்தில் சிக்கிய 38 பேரில் 138 மணி நேரத்திற்குப் பின்னர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். கடந்த வெள்ளியன்று இச் சுரங்கத்தில் தண்ணீர் திடீரெனப் புகுந்ததில் 38பேர் சிக்கிக்கொண்டனர். இவர்களை மீட்கும் பணியை ஆரம்பித்த கடற்படையினர் முதலில் திங்களன்று ஒரு உடலை கண்டெடுத்தனர். தொடர்ந்து மேற்கொண்ட மீட்பு நடவடிக்கையில் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். இதேவேளை மீட்புப்பணி தொடர்ந்து இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எழுத்தாளர் சாவி மரணம்



பிரபல எழுத்தாளர் சாவி தனது 85வது வயதில் கடந்த 9ம் திகதி வெள்ளியன்று காலமானார். 60 ஆண்டு காலமாக எழுத்துத்துறையில் இலக்கியப் பணியாற்றிய இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். கடந்த மாதம் 20ம் திகதி சாவியின் வாழ்க்கை வரலாற்றை ராணியின் மைந்தன் 'சாவி 85' எனும் நூலாக தொகுத்து வெளியிட்டார். இவ் வெளியீட்டு விழாவில் கலந்து உரையாற்றிய போது மயக்கமடைந்து வீழ்ந்த சாவி; மயக்க நிலை தெளியாமலே வெள்ளி அன்று மரணமாகியுள்ளார்.

சாஸ்திரிகள் விஸ்வநாதன் என்ற தனது பெயரைச் சுருக்கி சாவி என்ற பெயரில் வார இதழ் ஒன்றை வெளியிட்டு வந்த இவர், சிவகாமியின் செல்வன், வாசிங்டனில் திருமணம், விசிறி வாழை என்பன போன்ற ஏராளமான சிறந்த நூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ம.க. கூட்டணி மாற்றமும் தமிழக அரசியல் நிலையும்

### ஜெயலலிதா - ராமதாஸ் கூட்டணி

கடந்த வாரம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகிய பாட்டாளி மக்கள் கட்சி; அண்ணாதிராவிட முன்னேற்ற கழகத்துடன் கூட்டணி அமைத்துள்ளது. இது தொடர்பாக பாமக. நிறுவனர் டாக்டர் ராம



ராமதாஸ் - ஜெயலலிதா சந்திப்பு

தாஸ் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதாவை அவரது 'போயர்ஸ்' தோட்டத்தில் சந்தித்துப் பேசியுள்ளார். இதன்போது அதிமுகவுடன் பாமக. இணைந்து கூட்டணி அமைப்பது முடிவாகியது.

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் தமது பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான தயார் நிலையை உருவாக்கிக் கொண்டு வந்தவேளை பா.ம.க. வின் கூட்டணி மாற்றம் தமிழகத்தின் பல்வேறு கட்சிகளின் நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்பட வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### வாழப்பாடியுடன் மோதலுக்கு கருணாநிதியே காரணம் - ராமதாஸ்

தனக்கும் தமிழ்நாடு ராஜீவ் காங்கிரசு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திக்கும் பிரச்சினை



கருணாநிதி

ஏற்பட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி தான் காரணம் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் அளித்த பேட்டியில், அன்புச் சகோதரி ஜெயலலிதா அம்மையாரைச் சந்தித்ததில் எனக்கு மிகமிக மகிழ்ச்சி. இந்த மாற்றம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்ன என்பதை ஒரே வரியில் சொல்லிவிடுகிறேன்.

பெரிய அண்ணன் கலைஞர் எங்களை அழிக்க நினைத்தார்; ஆனால் அன்புச் சகோதரி எங்களை ஆதரிக்க நினைத்தார். எனவே நாங்கள் அவருடன் தோழமையுடன் இருக்க விரும்பினோம். எங்களை அழிக்க நினைத்தவர் என்பதற்கு பல நேரங்களில் அதற்கான காரணங்களை சொல்லியிருக்கிறோம். வாழப்பாடி ராமமூர்த்தி என் மீது அவதூறுகளைக் கூறியதை கருணாநிதி இரசித்தார். அவர் என்னைப் பற்றி வெளியிட்ட புத்தகங்களைப் பார்த்தும் வெகுவாக இரசித்தார். திண்டிவனத்தில் காவல்துறை உதவியுடன் நடந்த பொதுக் கூட்டத்தில் என்னை வாழப்பாடி திட்ட, கருணாநிதி உறுதுணையாக இருந்தார். வாழப்பாடி என்மீது கூறிய குற்றச்சாட்டுகள் பற்றியெல்லாம் 6 முறை கருணாநிதியை நேரில் சந்தித்து இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முறையிட்டேன். ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் ஒரே முறை தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தைக் கூட்டினார். அதில் எந்த முடிவும் எடுக்காமல்விட்டார். அதன்பின் இதுவரை எந்தக் கூட்டத்தையும் அவர் கூட்டவில்லை.

எங்கள் கட்சியைச் சேர்ந்த 21 பேரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைதுசெய்து நடுத் தெருவில் நிற்கவைத்தார். 6 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்தார். அவர்களை விடுதலை செய்ய கருணாநிதிக்கு கடிதம் எழுதினேன். இது கட்சியினர் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய காரணங்களால் எங்களது செயற்குழு எனக்கு அளித்த அதிகாரத்தின் கீழ் எங்களது கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூட தி.மு.க. வுடன் கூட்டணியில் இருக்க விரும்பவில்லை என்ற அவர்களது மனநிலையைப் புரிந்துகொண்டு இனி தி.மு.க. உடன் இருக்கமுடியாது என்ற நிலை வந்த பின் நாங்கள் அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைக்க முடிவு செய்தோம். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தி.மு.க. வைத் தவிர வேறு எந்தக் கட்சியுடனும் எங்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. எந்தவித உரசலும் இல்லை எனக் கூறியுள்ளார்.

### த.மா.க. வந்தால் வரவேற்போம் - கருணாநிதி

டாக்டர் ராமதாஸ் கூறியுள்ள கருத்துக்களை மறுத்துள்ள தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதி; தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தமது அணியில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்தால் வரவேற்போம் எனக் கூறியுள்ளார். தா.ம.க. மூன்றாவது அணியாக இருந்து அண்மையில் அ.தி.மு.க. வுடன் கூட்டணி வைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அதிமுகவுடன் பா.ம.க. இணைந்ததையடுத்து தமாகா. தலைவர் மூப்பனாரை டெல்லிக்கு அழைத்த காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கடந்த வெள்ளியன்று பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார். இதனையடுத்து அ.தி.



மூப்பனார்

மு.க. வுடனான காங்கிரசின் கூட்டணித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு த.மா.க.வுடன் இணைந்து தமிழகத்தில் மூன்றாவது அணியொன்று உருவாகக்கூடும் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தி.மு.க. தம்மை அழைத்தால் அக் கூட்டணியில் தம்மை இணைத்துக்கொள்ளத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

### விடுதலைச் சிறுத்தைகள் விலகியது

பாமக, அதிமுகவுடன் கூட்டணி வைத்துக்கொண்டதை அடுத்து, அ.தி.மு.க. அணியில் அங்கம் வகித்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு விலகிக் கொண்டுள்ளது. இவ் விலகல் குறித்து கருத்துத் தெரிவித்த விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன்; சாதிக் கட்சிகள் தோன்றக் காரணமான பா.ம.க. இருக்கின்ற கட்சியில் விடுதலைச் சிறுத்தைகள் ஒரு நிமிடம் கூட நீடிக்கமாட்டாது எனத் தெரிவித்துடன் பா.ம.க.வை தனிமைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### விடுதலைப் புலிகளை தொடர்ந்து ஆதரிப்போம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அ.தி.மு.க. கூட்டணியில் பாமக. இணைந்திருப்பதால் விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து



செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கும் ராமதாஸ்

ஆதரிப்பீர்களா என பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'விடுதலைப் புலிகளின் மீதான ஆதரவு நிலையை நாம் ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்? நான் எப்போதும்போல்தான் இருப்பேன் எனத் தெரிவித்துள்ளார். ராமதாசின் இப் பதிலினை அடுத்து அ.தி.மு.க. கூட்டணியில் விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்ப்பு கட்சிகளான காங்கிரஸ் கட்சியும், தமாகவும் நீடிக்கமாட்டாது என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, த.மா.க., அ.தி.மு.க கூட்டணியில் நீடிப்பதைத் தாம் விரும்புவதாக டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

### பா.ம.க. முடிவு துரதிர்ஷ்டமானது - வைகோ

பா.ம.க. தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகியமை பற்றி கருத்துத் தெரிவித்த பாமக. எடுத்த முடிவு துரதிர்ஷ்டமானது. ஆனால் இதனால் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தி.மு.க. தலைமையேற்கிறது. இந்தக் கருத்தை இந்த ஆண்டுத் துவக்கத்தில் சென்னையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். தற்போது அணிகள் மாறினாலும் யார் எந்தப் பக்கம் மாறினாலும் வாக்காளர் முன் வைக்கப்படும் பிரச்சினை ஒன்றுதான். அடுத்த முதல்வர் யார் என்பதுதான். 91 முதல் 96 வரை தமிழகத்தை பாழாக்கி அரசு கஜானாவை கொள்ளையடித்து இந்தியாவில் எங்கும் நடக்காத அளவு ஊழல் செய்து பாசிச வெறியாட்டம் நடத்தினார்கள். தமிழக வாக்காளர்கள் மீண்டும் அவர்களுக்கு வாக்க



வைகோ

ளிக்க வாய்ப்பில்லை. வாக்களிக்கக்கூடாது என்பதுதான் எங்களது எதிர்பார்ப்பும் எனத் தெரிவித்தார்.

## அதிரடிப்படை அட்டூழியம் தொடர்கிறது

### - பழ. நெடுமாறன்

வீரப்பனை கைது செய்வதற்காக தேடுதல் நடிவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதிரடிப்படையினரின் அட்டூழியம் தொடர்வதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். கடந்த புதனன்று சென்னையில் நடைபெற்ற 'தமிழ் முழக்கம்' வெளியீட்டக தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்;

தமிழ் தேசிய உணர்வு எழுச்சிபெற்று வருகிறது. தமிழ் உணர்வு கொண்டோர் தீவிரவாதிகளாகப் பார்க்கப்படும் அவலநிலையும் இருந்து வருகிறது. வீரப்பனை பிடிக்க அனுப்பப்பட்ட அதிரடிப்படைப் பொலிசார் 90 அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றுள்ளனர். 60 க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். 300 க்கும் மேற்பட்டோர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். 43 பேரை கர்நாடக அதிரடிப்படை பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர். தற்போதும் அதிரடிப் படையினரின் அட்டூழியங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

இதேவேளை இவ் விழாவில் 'விடை தந்தது சந்தனக்காடு' என்ற குறுந்தகட்டை கவிஞர் அறிவுமதி வெளியிட்டு வைத்தார். ம.தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் புதுக்கோட்டை பாவாணர் பெற்றுக்கொண்டார்.

# உலகச் செய்திகள்

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஆப்கான் எதிர் தரப்பினர் தயார்!

(11.02.01)

ஆப்கானின் எதிர்த்தரப்பு கூட்டணியினர் தலிபான் ஆட்சியாளர்களுடன் புரிந்து வரும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்து ஐ.நாவின் ஏற்பாட்டில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயார் என்று அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் சுமார் 4 விகித நிலப் பரப்பு இன்னமும் முன்னாள் ஜனாதிபதி ரபானியின் கூட்டணியினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. இப்பகுதியை கைப்பற்றுவதற்காக தலிபான்களும் அதனை எதிர்த்து ரபானி குழுவினரும் போரிட்டு வருகின்றனர். ஆப்கானிஸ்தானின் மனித உரிமைகள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஐ.நாவின் விசேட பிரதிநிதி கமால் ஹொசைனிடம் பேராசிரியர் ரபானி மேற்கண்ட அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஐநாவின் ஆப்கானிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகள் கொண்டு வரப்பட்டன. ஆப்கானில் தங்கியுள்ள சவுதி கோடீஸ்வரரான பின்லாடெனை விசாரணைகளுக்காக ஒப்படைக்க ஆப்கான் அரசு மறுத்ததையடுத்து பாதுகாப்புச் சபை மேற்கண்ட தடையை அமுல்படுத்தியது. இதனையடுத்து தலிபான்கள் இனிமேல் ஐ.நா ஏற்பாட்டிலான எந்த ஒரு சமாதான பேச்சுக்களிலும் ஈடுபடப் போவதில்லை என அறிவித்தனர். அத்துடன் எவ்வித சந்தர்ப்பத்திலும் பின்லாடென் நாடுகடத்தப் படமாட்டார் என்பதையும் உறுதிப்படுத்தினர். இதற்கிடையே ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட உதவி உணவுப் பொருட்கள் தஜிக்கிஸ்தான் ஊடாக ஆப்கானை வந்தடைந்துள்ளன. சுமார் 200 தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ரஷ்யா அனுப்பிவைத்துள்ளது.

## இரசாயன ஆயுத அழிப்பு ரஷ்யாவில் ஆரம்பம்

(10.02.01)

இரசாயன ஆயுத கையிருப்பினை அழிக்கவேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை திகதி காலாவதியாகி ஒரு வருட காலத்தின்பின் ரஷ்யா தனது கையிருப்புக்களை அழிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

அரசின் ஆயுதக் கிடங்கில் உள்ள 44 000 தொன் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கான திட்டங்களைக் கடந்த வெள்ளியன்று அதன் தலைவர் வெளியிட்டார். 'பொஸ்ஜேன்' எனும் இரசாயனம் கலந்து தயாரிக்கப்பட்டுள்ள நீண்டதூர எறிகணைகளை மொஸ்கோவில் இருந்து தென்கிழக்காயுள்ள யூரல் மலைப் பகுதியில் வைத்து அழிக்கவிருப்பதாயும், அமெரிக்க உதவிகள் அவசியப்படலாம் என்றும் அவர் கூறிய போதிலும், எவ்வளவு காலத்துக்குள் முழுமையாக ஆயுதங்கள் அழிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கவில்லை. இவ் ஆயுத அழிப்புக்கு 5 முதல் ஆறு பில்லியன் டொலர்கள் செலவாகும் என்று கூறிய ஆயுதக் களஞ்சியங்களின் தலைவர், அமெரிக்காவும், சில ஐரோப்பிய நாடுகளும் அதற்கான உதவியைச் செய்ய முன்வந்துள்ளதாயும் தெரிவித்தார்.

இதுவரை 174 நாடுகள் இரசாயன ஆயுத அழிப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. 2012க்கு முன்பாக எல்லா தொகை ஆயுதங்களும் அழிக்கப்பட்டுவிடும் என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா தனது கையிருப்பில் உள்ள 31,500 தொன் ஆயுதங்களில் கால்வாசியை அழித்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் இராணுவ அதிகாரி கென்யாவில் கைது

(10.02.01)

பாகிஸ்தானின் உயர் இராணுவ அதிகாரியொருவர் கென்யாவின் இரகசிய உளவுப் பிரிவினரால் நைரோபி சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து பல ஆயிரம் டொலர் பெறுமதியான தங்கத்தால் செய்யப்பட்ட பொருட்கள் இருந்துள்ளன. நைரோபியில் இருந்து டுபாய் நோக்கி புறப்பட இருந்த விமானத்தில் மேற்படி அதிகாரி பயணம் செய்ய இருந்ததாயும், பயணப் பொதிகளை சோதனையிட்டபோது மேற்படி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாயும் விமான நிலைய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ருவாண்டாவில் ஐ.நாவின் சமாதானப் படையில் கடமையாற்றும் மேற்படி அதிகாரியின் பயணப் பொதிக்குள் தந்தப் பொருட்களுடன் சிறுத்தைத் தோலும் காணப்பட்டதாம். ஐ.நா. படையில் இவர் இருந்ததால் பயணப் பொதிகளை சோதனையிடுவதில் மிகவும் சிரமங்களை பொலிசார் எதிர்கொண்டதாயும் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். ஆபிரிக்காவின் பல நாடுகள், தந்தத்தின் ஏற்றுமதியையும் அதனால் செய்யப்படும் பொருட்களின் விற்பனையையும் தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போல் கெகாமே பெல்ஜியத்தில் பேச்சுவார்த்தை

(11.02.01)

ருவண்டாவின் ஜனாதிபதி போல் கெகாமே பெல்ஜியத்துக்கு விஜயம் செய்துள்ளார். பெல்ஜிய அரச தலைவர்களுடன் கடந்த வெள்ளி முதல், பிராந்திய சமாதான நகர்வுகள் குறித்த பேச்சுக்களை அவர் நடத்திவருகின்றார். பிரதமர் கய்வேர் கோவ்ஸ்டாட் மற்றும் வெளியுறவு அமைச்சர் லூயிஸ் மிசேல், அரசர் இரண்டாம் அல்பேர்ட் போன்றோரைச் சந்தித்துப் பேசினார். கடந்தவாரம் கொங்கோ ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி ஜோசப் கபிலா பெல்ஜியம் வந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

கொங்கோ, ருவண்டா போன்ற நாடுகளின் முன்னாள் காலனித்துவ எஜமானான பெல்ஜியம், சமாதான முன்னெடுப்புக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கோரியதன் விளைவாக, மேற்படி விஜயம் முக்கியத்தும் பெற்றுள்ளது. இவ்வார ஆரம்பத்தில் நியுயோர்க்கில் உள்ள ஐநா. தலைமையகத்துக்கு விஜயம் செய்த கெகாமே, ஐ.நா தனது சமாதான படைகளின் மூலம் 94ம் ஆண்டின் ருவண்டா இனப்படுகொலைக்குக் காரணமான ஹுடு தீவிரவாதிகளை கைதுசெய்யுமானால், தான் தனது படைகளை கொங்கோ ஜனநாயக குடியரசின் எல்லைப் பகுதியில் இருந்து விலக்கிக் கொள்ளத் தயார் என்று கூறியிருந்தார். அவர் பாதுகாப்புச் சபையில் உரையாற்றியபோது ஜோசப் கபிலாவின் நியமனமானது பிராந்தியத்தில் அமைதி ஏற்படுவதற்கான ஒரு புதிய சூழல் நிலையை தோற்றுவித்துள்ளது என்றார்.

## இஸ்ரேலின் மனித உரிமை மீறல்கள் ஐ.நா. அதிகாரிகளால் விசாரணை

ஐ.நாவின் அதிகாரிகள் குழுவொன்று ஒருவார காலமாக இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இஸ்ரேலிய இராணுவத்துக்கும் பாலஸ்தீன போராளிகளுக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகையில் ஐ.நா. குழுவினர் காசாப் பகுதியில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இஸ்ரேல், ஐ.நாவின் மேற்கண்ட நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ளது. அரபு நாடுகளின் ஏற்பாட்டில் இஸ்ரேல் போர்க்குற்றவாளி என்றும், மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுள்ளது என்றும் பிரகடனப்படுத்தும் தீர்மானம் ஒன்றும் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டது.

## சரோன் அரசில் பெரஸ் வெளியுறவு அமைச்சர் பராக் பாதுகாப்பு அமைச்சர்?

(10.02.01)

இஸ்ரேலின் புதிய பிரதமராக தெரிவாகியுள்ள வலதுசாரி லிக்குட் கட்சியைச் சேர்ந்த ஆரியல்



சரோன்

சரோன் தனது அமைச்சரவையில், தொழிற்கட்சியின் சிமோன் பெரஸ் வெளியுறவு அமைச்சர் பதவியை ஏற்கவேண்டும் என்று கோரியுள்ளார். அதேவேளை பதவியில் இருந்து வெளியேறும் பிரதமர் எகுட்பராக், புதிதாக சரோன் அமைக்கவுள்ள தேசிய அரசில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்க வேண்டும் என்று கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி கருத்து வெளியிடுகையில் எகுட்பராக் புதிய பதவியை ஏற்பதற்கு ஆட்சேபணை தெரிவிக்காதபோதிலும் சிறிது காலத்துக்கு அரசியல் வேலைகளை நிறுத்திவிட்டு ஓய்வெடுக்கப்போவதாகக் கூறினார்.

இதேவேளை ஆரியல் சரோனின் உதவியாளர்கள், சிமோன் பெரஸ் வெளியுறவு அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளனர். சமாதானத்துக்கான நோபல் பரிசினை பெற்றுக்கொண்டவரும், ஒஸ்லோ உடன்படிக்கைக்கு பிரதான பங்காற்றியவருமான சிமோன் பெரசின் பங்களிப்பு, புதிய அரசிற்கு அத்தியாவசியமானது என்ற கருத்தும் லிக்குட் கட்சி வட்டாரத்தில் இருந்து வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.


வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 02085219767

தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

# மெக்சிக்கோவின் பொக்ஸ், சியாப்பாஸ் பயணம்! பேச்சுவார்த்தைக்கு வருமாறும் அழைப்பு

(10.02.01)

மெக்சிக்கோவின் அதிபர் வின்சென்டே பொக்ஸ் தென்பகுதி சியாப்பாஸ் மாநிலத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் சப்பாடிஸ்டா போராளிகளை பேச்சுவார்த்தை மேடை-க்கு வருமாறு அழைப்பு விடுத்தார். சப்பாடிஸ்டா போராளிகள், எதிர்வரும் மார்ச் மாதம் இந்தியர்களது உரிமைக்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு வலுச்சேர்க்கும் வகையில் தலைநகர் மெக்சிக்கோ நகரில் ஊர்வலம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்கள். அப்போது தன்னையும் சந்தித்து சமாதான பேச்சுக்களை முன்னெடுக்க வருமாறு, அவர் அழைப்பு விடுத்தார்.

மெக்சிக்கோவின் தென்பகுதியில் குவாத்தமாலா எல்லையில் அமைந்துள்ள மலைப்பகுதிப் பிராந்தியமான சியாப்பாஸ் இய-ற்கை வளங்களை ஏராளமாக கொண்டுள்ளது. ஆனால் அபிவிருத்தியில் மிகவும் பின் தங்கியுள்ளது. அங்கு விஜயம் செய்த வின்சென்டே பொக்ஸ் 50 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள ரயில்வே திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். கடந்த டிசம்பர் முதலாம் திகதி அதிபராக பதவியேற்றதுடன் நாட்டின் சமாதான முன்னெடுப்புக்களுக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். நீண்ட காலமாக சிறைகளில் வாடிய போராளிகளின் ஆதரவாளர்களை விடுதலை செய்ததுடன் இந்தியர்களது உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் கொண்டுவந்துள்ளனர்.

# கனடியப் பிரதமர் சீனா வருகை

(12.02.01)

கனடியப் பிரதமர் ஜோன் கிறித்தியன் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ஞாயிறன்று சீனா வந்தடைந்தார். அவருடன் சுமார் 500 பேரடங்கிய வர்த்தக பிரதிநிதிகளும் வந்துள்ளனர். சீனாவின் பிரதமர் சூ ரொன்ஜி மற்றும் உயர்மட்ட தலைவர்களுடன் முதற்கட்ட பேச்சுக்களை அவரது குழுவினர் நடத்தி வருகின்றனர்.

கனடாவின் பிரதான வர்த்தக பங்காளியாக சீனா நீண்டகாலமாக விளங்கி வருகின்றது. 1994ம் ஆண்டிலும் இதேபோன்றதொரு பாரிய விஜயத்தினை கனடிய தலைவர் மேற்கொண்டிருந்தார்.

இம்முறை விஜயத்தின் போது பல வர்த்தக உடன்படிக்கைகளை இரு தரப்பினரும் மேற்கொள்வார்கள் என்று தெரிவித்த சீன அதிகாரிகள், சீனாவின் மேற்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கனடாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க அளவு இருக்கும் என்றும் கூறியுள்ளனர்.

# சட்டவிரோத குடியேற்றக்காரர்களை கட்டுப்படுத்த பிரித்தானியாவுக்கு பிரான்ஸ் உறுதி

(10.02.01)

பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்கும்' இடையே நடந்துவரும் மாநாட்டில் இருதரப்பினரும் பல தரப்பட்ட விடயங்களை பிரஸ்தாபித்துள்ளார்கள். முக்கியமாக பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே சேவையில் ஈடுபடும் தொடருந்தின் மூலம் சட்டவிரோதமாக இங்கிலாந்துக்குள் நுழைய முற்படுபவர்களைத் தடுத்து நிறுத்துவது குறித்து பேசப்பட்டுள்ளது. பிரித்தானியாவுக்கு மேற்கண்ட விடயம் நீண்டநாட்களாகவே பிரச்சினையானதொன்றாக இருந்துள்ளது. பிரித்தானிய பிரதமர் இந்த தொடருந்தில் சோதனைகளின் பெரும் பங்கினை பிரித்தானிய அதிகாரிகள் மேற்கொள்வது பற்றி பிரெஞ்சு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தார். இதற்கான முதற்கட்ட அங்கீகாரத்தை வழங்க பிரான்ஸ் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கட-ந்த வருடமே மேற்கண்ட தொடருந்தின் கடவுச் சீட்டு சோதனைகளை இருநாட்டு அதிகாரிகளும் பரிமாறிக்கொள்வதற்கான



இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்படி பாரிசின் தொடருந்து நிலையத்தில் பிரித்தானிய அதிகாரிகளும் இங்கிலாந்தில் பிரெ-ஞ்சு அதிகாரிகளும் சோதனைகளில் ஈடுபடுவது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அக்கரையில் கைது செய்யப்படும் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பான விடயத்தில் தொடர்ந்தும் இழுபறி நிலையே காணப்படுகிறது என்றும் தொடர் பேச்சுக்கள் மூலமே இதற்கு இணக்கம் எதுவும் காணப்பட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானிய கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கு அமெரிக்கா கவலை தெரிவிப்பு

(12.02.01)

ஜப்பானிய மீன்பிடி பயிற்சிக் கப்பல் ஒன்று அமெரிக்க நீர்மூழ்கியினால் தாக்கப்பட்டு கடலில் மூழ்கியது. கடந்த வெள்ளியன்று மேற்படி சம்பவம் இடம்பெற்றது. ஹவாய் கடல்பகுதியில் 499 தொன் எடைகொண்ட ஜப்பானிய பயிற்சிக் கப்பல் 35 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த போது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலான கிறீன்வில்லினால் மோதப்பட்டது. நீரில் மூழ்கிய கப்பலில் இருந்து 26 பேர்களை மீட்புக் குழுவினர் காப்பாற்றியுள்ளனர். இரண்டு பயிற்சியாளர்கள் மூன்று சிப்பந்திகள் மற்றும் நான்கு மாணவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கடலின் அடியில் 550 மீற்றரில் கப்பல் தரை தட்டியுள்ளது.

மேற்படி சம்பவத்திற்கு அமெரிக்கா தனது கவலையையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது. அமெரிக்க பாதுகாப்பு செயலர் இது ஒரு மிக மோசமான ஒரு விபத்து என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த உதவிகளை வழங்க தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாயும் தெரிவித்தார். இராஜாங்க செயலர் கொலின் பவல் நடந்தவைகளுக்கு மன்னிப்புக் கோருகிறோம். ஜப்பானுடனான உறவுகளில் பாதிப்புக்கள் ஏற்படாது என்று உறுதியாக கூறுகிறோம் என்றார். அதிபர் புஷ் தனது அனுதாபச் செய்தியில் ஜப்பானிய அரசுக்கும் மக்களுக்கும் அமெரிக்காவின் வருத்த-த்தை தெரிவித்துக்கொள்வதாகக் கூறியுள்ளார்.

# ஈரானிய அதிபர் நாட்டின் மதவாத தலைவர்களை வன்மையாக கண்டித்துள்ளார்

1979ம் ஆண்டு ஈரானில் நடந்த இஸ்லாமிய புரட்சியின் நினைவு நாள் கொண்டாடப்பட்டபோது, அங்கு பேசிய அதிபர் மதமும், சுதந்திரமும் ஒன்றிற்கொன்று எதிராக இருக்கக் கூடாது. இங்குள்ள மத தீவிரவாதம் மக்களது மனங்களுடன் ஒத்துப்போகாத ஒன்றாக உள்ளது. பரந்த மனப்பான்மையுடன் மக்கள் வாழ்வதை தடைசெய்கிறது என்றார். ஈரானிய அதிபரது முற்போக்குவாதக் கருத்துக்கள் மதவாதிகளினால் வன்மையான விமர்சனங்களுக்கு உள்ளாவது வழக்கமானது.

## மத்திய கிழக்கு

★ லெபனான் ஜனாதிபதியின் மகன் எமில் லாகூட்டின் தலைமையில் வர்த்தகர்கள், விளையாட்டுத்துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் விமானம் மூலம் பாக்தாத் வந்தடைந்தனர்.

★ ஐ.நாவின் தடை அமுலில் இருக்கும் வேளையிலும் முதன் முறையாக பாக்தாத்துக்கும், கெய்ரோவுக்கும் இடையே நேரடி விமான சேவை, செவ்வாய் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

★ ஐரோப்பிய ஒன்றியத்துடன் லெபனான் பொருளாதார, சமுகநல, கல்வி கூட்டு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

★ அமெரிக்க இராஜாங்க செயலாளரான கொலின் பவல் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயத்தை அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளார்.

★ இவ்வருட இறுதிக்குள் ரஷ்யாவும் ஈரானும் பல ஆயுத விநியோக, விற்பனை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

★ ஐக்கிய அரபு எமிரேட்சின் தகவல் வலைப்பின்னலை தடை செய்த பிரித்தானிய இளைஞன் மீது விசாரணைகள் ஆரம்பமாகின.

## ஆபிரிக்கா

★ அல்ஜீரியாவின் வட பகுதியில் சனியன்று மாலை ஆயுதந்தாங்கிய நபர்கள் குடியிருப்பு ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

★ எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் கடந்த சனியன்று பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றினை பல ஆயிரம் பெண்கள் மேற்கொண்டனர். இதில் கடுமையான சட்டங்களை அரசு அமுல்ப்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி மெலெஸ் செனாவியை கோரும் கோஷங்களும் இடம்பெற்றன.

★ ஐ.நாவின் படைகளை தற்காலிக பாதுகாப்பு பிராந்தியத்தில் கடமைக்காக ஈடுபடுத்துவதற்கான நகர்வுகளை எரித்திரிய – எதியோப்பிய அதிகாரிகள் ஏற்றுக்கொண்டார்கள். கென்யத் தலைநகர் நைரோபியில் இதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றன.

★ லொக்கர்பீ விமானத் தகர்ப்பு தொடர்பான தீர்ப்பிற்கு எதிராக லிபியா தெரிவித்த எதிர்ப்பினை தென்னாபிரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதிபர் தபோம்பெக்கி, லிபிய அதிபருடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலின்போது தனது ஆதரவினைத் தெரிவித்ததுடன் லிபியா மீதான தடைகளை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

★ தென்னாபிரிக்க கடவுச்சீட்டுகளுடன் எகிப்துக்கூடாக பயணம் செய்த 25 உகண்டா பிரஜைகளை எகிப்து கைதுசெய்து நாடுகடத்தியுள்ளது. மேற்படி பயணிகள் எகிப்தில் இருந்து விமானம் மூலம் இங்கிலாந்துக்குள் நுழைவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்று எகிப்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## ஆசியா

★ இந்தோனேசிய அதிபர் அப்துர்ரஹீம் வாஹீட்டுக்கு ஆதரவாக பல ஆயிரம் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொண்டுள்ளனர். பாராளுமன்றத்தில் அவருக்கு எதிரான் விசாரணைகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதை எதிர்த்தே மேற்படி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ பங்களாதேசும் இந்தியாவும் இணைந்து கணினித்துறையில் மென்பொருட்களை [Soft Wares] தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. தலைநகர் டாக்காவில் செயற்படவுள்ள மேற்படி நிலையத்தில் வங்கி, வைத்தியசாலைகள், போக்குவரத்து நிறுவனங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படத்தேவையான மென்பொருட் தொகுதிகள் தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ இந்தோனேசிய எரிமலை குமுறல்களில் இருந்து தப்ப, பல ஆயிரம் மக்களை பாதுகாப்புப் படையினர் வெளியேற்றியுள்ளார்கள். தலை நகரில் இருந்து தென்மேற்காக உள்ள மெராபி மலைப்பகுதியில் அமைந்துள்ள எரிமலை சனியன்று முதல் பெருமளவில் புகையையும் சாம்பலையும் கக்கி வருகின்றது. இம்மலைப் பகுதியை சூழவுள்ள கிராமங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள்.


★ மலேசியா, பாதுகாப்பு தளவாடங்களை பாகிஸ்தானிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின்மூலம் பாகிஸ்தான் மலேசியாவுக்கு தரையில் இருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகள், தாங்கி எதிர்ப்பு ஆயுத தளவாடங்கள் போன்றவற்றை விநியோகம் செய்யும்.

## ஐரோப்பா

★ அரசியலில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள உக்ரேன் அதிபர் லியோனிட் குஷ்மாவுக்கு தனது ஆதரவினை ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடீன் வழங்கியுள்ளார். கடந்த சில வாரங்களாக எதிர்த்தரப்பினர், அதிபர் குஷ்மா பதவி விலகவேண்டுமெனக்கோரும் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர். இந்த நிலையில் ரஷ்ய அதிபர் அந்நாட்டிற்கு திடீர் விஜயத்தினை மேற்கொண்டு முன்னாள் கூட்டுக் குடியரசின் நட்பு தொடர்ந்தும் உறுதியாக தொடரவேண்டுமெனவும் கோரியுள்ளார்.

★ பிரான்சின் பிரித்தானிய கடல் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கலே என்னும் இடத்தில் உள்ள அகதிகள் முகாமில் ஆப்கான் பிரஜைகளுக்கும், குர்திஷ் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர கலகம் அடக்கும் பொலிசார் வரவழைக்கப்பட்டனர். இம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள அனைவரும் சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்குள் நுழைய முற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி மோதல்களில் பலர் காயமடைந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

★ ஈரானிய வெளியுறவு அமைச்சர் கமால் கராஷி ஜேர்மனி வந்து சேர்ந்தார். அங்கு வெளியுறவு அமைச்சர் ஜோஸ்சா பிஸ்ச்சர் மற்றும் பல தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டார்.


ttn
தமிழ் ஒளி
தமிழர் திருநாளில் உதயமான
ஒரு இனிய வரலாறு
இது நமது என்று சொல்ல
இப்போது ஒரு
தொலைக்காட்சியும்
தமிழ் ஒளி
தரணியெங்கும் வாழும் தமிழர்களின் பிம்பம்
HOTBIRD 13° EAST
Frequency: 12245 Mhz, Polarization: Horizontal
ஊர்ப் புதினம் தவறாமல் சுமந்துவரும்
உண்மைகளைச் சிறைமீட்டுக் கொண்டுவரும்
அகிலத்துச் செய்திகளை விரைந்து தரும்
அறிவியலும், இலக்கியமும் கற்றுத்தரும்
சிந்தனையைத் தூண்டுகின்ற வாதம் தரும்
சினிமாவை தரம்பிரித்து விருந்து தரும்
நல்லதமிழ் குழந்தைகட்கு சொல்லித்தரும்
நாவூறச் சமைக்கும் விதம் காட்டித் தரும்
விதம் விதமாய் அனைவருக்கும் நிகழ்ச்சி தரும்
வீட்டுக்கு இது வேண்டும் என்ற எண்ணம் தரும்
TAMIL TELEVISION NETWORK
5-7 Rue Emile Zola, 93120 La Corneuve
Tel: 01 48 39 34 29 Fax: 01 48 39 31 36
கே. பாலசந்தரின்
பிரதி திங்கள் புதன் வெள்ளி
மாலை 7.30 மணிக்கு
பிரதி சனி ஞாயிறு
மாலை 7.30 மணிக்கு
செவ்வாய், வியாழன் இரவு 10.30 மணிக்கு
திங்கள் முதல் வெள்ளி மாலை 6.30 மணி
விதியா
பிரதி செவ்வாய் வியாழன்
சின்ன ரேகை
மாலை 7.30 மணிக்கு
திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணிக்கு
புத்தம் புது காலை
நாடி
மருத்துவ ஆலோசனை
கே. பாலசந்தரின்
திங்கள் முதல் வெள்ளி
வாரம் ஒரு கதை
GERMANY
LEEMA
மக்கள் களஞ்சியம்
MARIENKIRCH PLATZ 05, 41460 NEUSS
Tel. 02 131 54 6311 / Fax: 02 131 54 6312
SWITZERLAND
NEW MILLENNIUM
COMPUTER & ELECTRONIC
Tellstr. 31, 8004 ZURICH
Tel. 00 41 1 240 25 06 / 00 41 78 28 77 369
Fax: 00 41 1 240 30 85
NORWAY
THAINILAM KALAIYAGAM
POST BOKS 6678, RODELOKKA
0502 OSLO
Tel: 99003154 (Kumar)
FRANCE
TTN
5-7 Rue Emile Zola, 93120 La Courneuve
Tel: 01 48 39 34 29 / Fax: 01 48 39 31 36
LUNE INFORMATIQUE
5, Rue Perdonnet, 75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70
U.K.
TTN
JANANI CREATIONS LTD.
South Bank House
Room No 445, Black Prince Road,
London SE1 7SJ
DENMARK
Mrs. SHANTHY
GRUNDTVIG VEG 581 TH, 7400 HERNING
Tel. & Fax: 097 21 46 85 / Mobile: 022 45 72 19
HOLLAND
SUNRISE IMPORT & EXPORT
ZOUTMANSTRAAT 23, 2518 GL DEN HAAG
Tel. 062 815 1259 (NADES) / Fax: 070 35 10 19
ITALY
PEOPLE SHOP
KURUNATHAN GENGATHARAN
VIA DABTE 218, 90141 PALERMO
Tel. & Fax: 00 39 091 6824056

# பிரித்தானியா தடை விதித்தால் சமாதான முயற்சிகள் பாதிக்கும்

(03ம் பக்கத் தொடர்ச்சி)

**தமிழ் கார்டியன்:** விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறீலங்கா அரசிற்கும் மத்தியில் விரைவில் பேச்சு வார்த்தைகள் நடைபெறப் போவதாக கொழும்பு ஊடகங்கள் நம்பிக்கையூட்டும் செய்திகளை பிரசுரித்து வருகின்றன. இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கான புறசூழ்நிலையை நோர்வே நடுநிலையாளர்கள் உருவாக்கியுள்ளார்களா?

**திரு.பாலசிங்கம்:** சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக கொழும்பு ஊடகங்களில் பல வகையான ஊகங்கள் நிலவுகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு இன்னும் நிறையத் தயாரிப்பு வேலைகள் செய்யப்படவுள்ளன. நோர்வே அரசு பரிந்துரைத்த 'புரிந்துணர்வு உடன்பாடு' இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாடாக இன்னும் முழுமைபெறவில்லை. இந்த உடன்பாட்டில் சிறிலங்கா அரசு சில மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்திருப்பதாக நாம் அறிகின்றோம். அவற்றை நாமும் பரிசிலனை செய்ய வேண்டும். இந்த உடன்பாட்டைக் கண்காணிக்கும் சர்வதேச குழுவில் எந்தெந்த நாடுகளைத் தெரிவு செய்வதுபற்றி தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கிறோம். இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான கண்காணிப்புக் குழுவை தெரிவுசெய்ய நோர்வே முயன்றுவருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து அதனை மேலும் நீடித்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் போர்நிறுத்தத்தை கடைப்பிடிப்பதன் மூலம் நோர்வேயின் புரிந்துணர்வு உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கடப்பாடுகளை நாம் செம்மையாக கடைப்பிடித்து வருகிறோம். அதாவது தென்னிலங்கையில் சகலவிதமான வன்செயல்களையும் நிறுத்தியிருக்கிறோம். எமது இந்த நல்லெண்ண முயற்சியை ஏற்றுக்கொண்டு சிங்கள அரசும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்துவதற்கு ஏதுவான சமாதானப் புறநிலை தோன்றும்.

**தமிழ் கார்டியன்:** பேச்சுவார்த்தைக்கு முன்னராக போர்நிறுத்தம் க்டைப்பிடிக்கப்பட மாட்டாது எனவும் பேச்சு வார்த்தையில் கணிசமாக முன்னேற்றம் காணப்பட்டால் போர் நிறுத்தம் பற்றி பரிசீலனை செய்யலாம் எனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது சுதந்திரதின உரையில் வலியுறுத்தியிருக்கிறார். இந்த நிலைப்பாடு பேச்சுவார்த்தைக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமையுமென கருதுகிறீர்களா?

**திரு.பாலசிங்கம்:** சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் சண்டை முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு. போரும் வன்முறையும் தாண்டவமாடும் சூழ்நிலையில் பேச்சுக்களை நடாத்துவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. ஆகவேதான் பேச்சுக்கு முன்னர் போருக்கு ஓய்வு கொடுப்பது அவசியமென நாம் வலியுறுத்திவருகிறோம். சமாதானப் பேச்சுக்களில் எமது அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி இராணுவத் தளபதிகளும் பங்கு பற்ற நேரிடலாம். எனவே, இத்தகைய பேச்சுக்களுக்கு துப்பாக்கிகள் முழுமையாக மௌனமடையும் ஒரு சமாதானப் புறநிலை நிலவுவது அவசியம்.

இரு தரப்பினரும் சம்பிரதாய பூர்வமாக செய்து கொள்ளும் போர் நிறுத்த முறைமை பற்றி சனாதிபதி குமாரதுங்க குறிப்பிடுகிறார் போலும். இவ்விதமான போர் நிறுத்த முறைமைகள், ஒழுங்குகள், கடப்பாடுகள் பற்றி பேச்சுக்களின்போது உடன்பாடு காணலாம். ஆனால் இப்பொழுது தேவைப்படுவது என்னவென்றால் இரு தரப்பினரும் தாக்குதல் நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்திக் கொண்டு அமைதியைப் பேண வேண்டும். பேச்சுக்கு முன்னோடியாக இந்த அமைதி நிலை அவசியம்.

விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வரும் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தமும், நோர்வே அரசு சமர்ப்பித்துள்ள புரிந்துணர்வு உடன்பாடும் ஆக்கபூர்வமான முயற்சிகள். போர் நெருக்கடியைத் தணித்து, சமாதானச் சூழ்நிலையை உருவாக்கும் நல்லெண்ண முயற்சிகள். இந் நல்லெண்ண முயற்சிகளை சிறீலங்கா அரசு உதாசீனம் செய்வது தவறு. இம் முயற்சிகளை வரவேற்று சிறீலங்கா அரசும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தால் போர் நிறுத்தமும் அதைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களும் ஏற்படுவதற்கான சூழ்நிலை பிறக்கும்.

> சமாதானப் பேச்சுக்களில் எமது அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி இராணுவத் தளபதிகளும் பங்கு பற்ற நேரிடலாம். எனவே, இத்தகைய பேச்சுக்களுக்கு துப்பாக்கிகள் முழுமையாக மௌனமடையும் ஒரு சமாதானப் புறநிலை நிலவுவது அவசியம்.

**தமிழ் கார்டியன்:** அரசாங்கம் கொண்டு வந்த புதிய அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளே பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டுமென சனாதிபதி சந்திரிகா வலியுறுத்தி வருகிறார். திம்புக் கோட்பாடுகளே பேச்சுக்கு அடித்தளமாக இருக்க வேண்டுமென நீங்கள் கூறி வருகிறீர்கள். இந்த முரண்பாடான நிலைமையை எப்படிக் களைவது?

**திரு.பாலசிங்கம்:** சந்திரிகா அரசின் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை உலகம் நன்கறியும். அதனை மீண்டும் இங்கு விபரித்துக் கூறுவது அவசியமில்லை. இந்த அரசமைப்புத் திட்டத்தில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. இது எமது மக்களின் அரசியல் அபிலாசைகள் எதையுமே தொடவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், ஏனைய பெரும்பாலான தமிழ் அரசியற் கட்சிகளையும் பொறுத்த வரை இந்த அரசமைப்புத் திட்டமானது செயலிழந்து, செத்துப் போன ஒரு ஆவணம். இந்த செத்துப் போன ஆவணத்திற்கு உயிர் கொடுப்பதால் எந்தவிதப் பயனும் ஏற்படாது.

இன நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவே பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. இந்த இன நெருக்கடியானது தமிழரின் பிரச்சினை சம்பந்தப்பட்டது. தமிழரின் கோரிக்கைகள், அபிலாசைகள் சம்பந்தப்பட்டது. ஒரு தேசிய இனத்தின் கூட்டுரிமை சம்பந்தப்பட்டது. சமாதானப் பேச்சுக்களின் போது தமிழரின் பிரச்சினையை கருத்தில் எடுக்கும் பொழுது, அப் பிரச்சனையின் ஆழமான அடிப்படைகளை, உள்ளீடுகளை, மையங்களை நாம் அலசிப் பார்ப்பது அவசியம். அப்படிப் பார்க்கும் பொழுது வரலாற்று ரீதியாக அமைந்த தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் தேசியத் தகைமை, அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே இனப் பிரச்சினையின் அடிப்படைகளாக, மையக் கூறுகளாகக் காணமுடியும். தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வையும், நிரந்தர சமாதானத்தையும் விரும்புபவர்கள் அனைவருமே பிரச்சினையின் அடிப்படைகளை எதிர்கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும், அவை பற்றி விவாதிக்கவும் தயாராக இருக்க வேண்டும். அப்படி விவாதிக்கும் பொழுது எமது மக்களின் அடிப்படையான அபிலாசைகளை நிறைவு செய்யும் புதிய அரசியல் வடிவமைப்புக்கள் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

எமது மக்களின் மையப் பிரச்சினைகளைத் தழுவி நிற்கும் கோட்பாடுகளை சிங்கள அரசியல் வாதிகள் புரிந்து கொள்ளவில்லை. அவற்றின் அர்த்தங்களைத் திரித்து, சிதைத்து, பிறழ்வுபடுத்தி, அசிங்கப்படுத்தி விட்டதால் அவை ஆபத்தான கோட்பாடுகளாக, தேசத் துரோகத்தைக் குறிக்கும் கருத்துருவங்களாக மாற்றப்பட்டுள்ளன. சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது இலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் மட்டுமன்றி, வேறிடத்தில் எமது நண்பர்கள் மத்தியிலும் எத்தகைய சந்தேகத்துடனும், அச்சத்துடனும் நோக்கப்படுகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றி நான் இங்கு ஒரு நீண்ட விளக்கத்தை அளிக்க விரும்பவில்லை. சுருக்கமாக சொல்வதானால் சுயநிர்ணய உரிமை என்பது சட்டரீதியான, அரசியல் ரீதியான ஒரு உரிமை. ஒரு மக்கள் சமூகம் தனது அரசியல் தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் இவ் உரிமை அம் மக்களுக்கு வழங்குகின்றது. தமிழ் மக்களும் இந்த உரிமைக்கு உரித்தானவர்கள். ஏனென்றால் அவர்களும் ஒரு மக்கள் சமூகத்தின் கட்டமைப்பைக் கொண்டவர்கள். இனத்துவப் பிரக்ஞையாலும், போராட்ட எழுச்சியாலும் ஒன்றுபட்ட மக்கள் சமூகமாக எமது மக்களும் அணிதிரண்டு நிற்கிறார்கள்.


அன்ரன் பாலசிங்கம்

காலனித்துவ கால கருத்துலகில் சஞ்சரிக்கும் கதிர்காமர், சுயநிர்ணய உரிமையை வெறுமனே பிரிந்து செல்லும் உரிமையாகக் காண்கிறார். சுயநிர்ணய உரிமை பற்றி சமகாலத்தில் நிகழும் விவாதங்கள் கருத்தோட்டங்கள் பற்றி அவர் அறியவில்லைப் போலும். சுயநிர்ணய உரிமை என்பது வரலாற்று ரீதியாக வளர்ந்துவரும் ஒரு கருத்துருவம். செழுமையயான அர்த்தத்தையும் படைப்பாற்றலையும் கொண்ட கோட்பாடு. தேசிய இனப் போராட்டங்களை அரவணைத்து நாகரிகமான அரசமைப்பு வடிவங்களில் உள்வாங்கும் ஆற்றலும் சிருஸ்டிகரத்தன்மையும் அதற்குண்டு. பிரிந்து சென்று தனியரசை அமைக்கும் உரிமையும் இக் கோட்பாட்டில் இருக்கத்தான் செய்கிறது. ஒரு மக்கள் சமூகத்திற்கு சுயாட்சியுரிமை மறுக்கப்பட்டு, அம் மக்கள் மீது இன வழிப்புப் பரிமாணத்தில் ஒடுக்கு முறையும், பாரிய மனித உரிமை மீறல்களும் நடத்தப்பட்டால், இறுதிப் பரிகாரமாக பிரிந்து சென்று தனியரசை அமைப்பதற்கு அம் மக்களுக்கு உரிமையுண்டு. தமிழ் மக்களும் தமது வரலாற்றுத் தாயகத்தில் சுயாட்சியை நிறுவ சிங்கள அரசு மறுத்துவருகிறது. அத்தோடு அவர்களைத் தாங்கொணா ஒடுக்குமுறையின் விளிம்பிற்கு தள்ளிக்கொண்டிருக்கிறது. இதனால் இறுதிப் பரிகாரமாக அரசியற் சுதந்திரம் வேண்டி தனியரசை அமைக்கும் நிர்ப்பந்தத்திற்கு அவர்களை ஆளாக்கிவருகிறது.

**தமிழ் கார்டியன்:** அடுத்த வாரம் அமுலுக்கு வரும் பயங்கரவாத சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டும் என சிறீலங்கா அரசு பிரிட்டிஸ் அரசாங்கம் மீது அழுத்தம் பிரயோகித்து வருகிறது. பிரித்தானியாவில் புலிகள் இயக்கம் நிச்சயமாக தடைசெய்யப்படுமென சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் திரு. கதிர்காமர் நம்பிக்கையுடன் இருக்கிறார். இதுபற்றி உங்களது கருத்து என்ன? பிரித்தானியா உங்களது விடுதலை அமைப்பை தடைசெய்யுமென நினைக்கிறீர்களா?

**திரு.பாலசிங்கம்:** முதலாவதாக, பிரிட்டிஸ் பயங்கரவாதச் சட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள். இது ஒரு அடக்கு முறை சட்டம். இந்தச்சட்டத்தில் 'பயங்கரவாதம்' என்ற பதத்திற்கு மிகவும் அகன்ற, தெளிவற்ற வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வரைவிலக்கணத்தின் கீழ் நியாயமான, தர்மமான அரசியல் இலட்சியங்களுக்காக வன்முறை வடிவங்களில் மேற்கொள்ளப்படும் சகல விதமான போராட்டங்களுக்கும் பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இன அழிப்பை நோக்கமாக கொண்ட அரச ஒடுக்கு முறைக்கு எதிராக தற்பாதுகாப்பிற்காக நடாத்தப்படும் ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாதமாக சித்தரிக்கப்படுகிறது. உலகில் நிகழும் வன்முறை புரட்சிகள், தேச விடுதலைப் போராட்டங்கள், ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கங்கள், கிளர்ச்சிகள், வன்முறை வடிவிலான ஆரப்பாட்டங்கள் — எல்லாமே பயங்கரவாதமாக திரிபுபடுத்தப்படுகிறது. சகிப்புத் தன்மையிலும், சனநாயக மரபிலும், முற்போக்கு அரசியலிலும் சிறப்பான வரலாற்றுப் பின்னணியை கொண்ட பிரித்தானியா இத்தகைய கொடுமையான பயங்கரவாத சட்டத்தை உருவாக்கி இருப்பது துரதிர்ஸ்டவசமானது என்றே சொல்ல வேண்டும். உலகம் தழுவிய ஆழமான வரலாற்று அனுபவத்தில், காலனித்துவத்திற்கும் இனவாதத்திற்கும் எதிராக நிகழ்ந்த ஆயுதப் போராட்டங்களின் தன்மைகள் பற்றி பிரித்தானியா நன்கறியும். உலகடங்கிலும் ஒடுக்கப்பட்ட

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# ‘சமாதானத்திற்காக புலிகள் கொடுத்த விலை’

# போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டது ஏன்?

சிறீலங்கா அரசதரப்பில் இருந்து யுத்தத்திற்கான பிரகடனங்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கையில் - விடுதலைப் புலிகளிடம் இருந்து யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான அறிவிப்பு வெளிவந்தது. இது ஒருவகையில் மக்களையும் - விமர்சகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதாகவும் அமைந்தது.

விடுதலைப் 'புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் அறிவித்த டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவிலிருந்து ஜனவரி 24ம் திகதி நள்ளிரவு வரையான ஒருமாத காலப்பகுதியில் சிறீலங்கா அரசிடம் இருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. மாறாக, யுத்தம் என்பதே அரசின் முடிந்த முடிவாக இருந்தது. சுருக்கமாகக் கூறுவதானால் இவ் யுத்த நிறுத்த காலத்தில் இரண்டு அம்சங்கள் தெளிவாக உணரக்கூடியதாக இருந்தது.

★ அரசிடம் யுத்த நிறுத்தத்திற்கோ அன்றி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கோ திட்டம் எதுவும் இல்லை.

★ யுத்தத்தில் வெற்றிகளுக்காக மட்டுமல்ல – சமாதானத்திற்காகவும் விடுதலைப் புலிகள் விலைகொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் இரண்டாவது யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோதும் அதில் முன்னேற்றகரமான முடிவுகள், அதாவது அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான முடிவுகள் -ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், அரசாங்கம் யுத்தத்தை நடாத்துவதிலேயே முனைப்பாக இருப்பது மட்டுமல்ல, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடாத்தக்கூடிய வகையில் செயற்பட்டதாகவும் இல்லை.

**- வன்னியிலிருந்து ஈழநாதம்**

அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தலைப்பட்ச போர் நிறத்தத்தை அறிவித்தபின்பும் ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் செய்யவில்லை. அதேசமயம், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பு எதையும் வழங்கியதாகவும் இல்லை.

வேறுவிதமாகக் கூறுவதானால் 1999ம் ஆண்டின் இறுதியிலும், 2000ம் ஆண்டின் முற்பகுதியிலும் பாரிய இராணுவ தோல்விகளைச் சந்தித்தபோது நோர்வேயைச் சமரச முயற்சிக்கு அழைத்த அரசு - பின்னர் ஆயுத தளவாட ரீதியில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டதும் நோர்வேயைப் புறந்தள்ள முயற்சிக்கின்றது என்றே கூறலாம்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து 21ம் திகதி கொழும்பு வந்திருந்த நோர்வே நாட்டின் விசேட தூதுவர், யுத்த நிறுத்தம் பற்றி அரசதரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். ஆனால் அரச தரப்பு யுத்த நிறுத்தத்தை நிராகரித்ததைத் தொடர்ந்து அவர் தனது நான்கு நாள் பயணத்தை இடைநடுவில் முடித்துக்கொண்டு இரண்டு தினங்களிலேயே திரும்ப வேண்டியிருந்தது.

இப்பயணம் குறித்து லண்டனில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் கருத்து வெளியிட்ட எரிக் சொல்ஹெய்ம், கொழும்புப் பயணம் ஏமாற்றம் அளித்ததாகத் தெரிவித்தார். அதாவது அவரின் பயணம் யுத்தநிறுத்த விடயத்திலோ சமரச முயற்சியிலோ எந்தவித முன்னேற்றமும் இன்றி முடிந்தது.

அது மாத்திரமல்ல சிறீலங்கா பேரினவாத சக்திகள் எரிக் சொல் ஹெய்மின் தனிப்பட்ட வாழ்க்கையை பார்ாளுமன்றத்தில் கேவலமான முறையில் பிரஸ்தாபிக்கும் வரையில் நிலைமை சென்றது. இது எரிக் சொல் ஹெய்மை அவமானப்படுத்தும் வகையிலானதாக இருந்தது.

இவ் அவமதிப்பு சிஹலஉறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரட்ணவினால் ஏற்படுத்தப்பட்டதாயினும், அரசதரப்பினரும் அதற்கு ஒப்பான வகையிலேயே நடந்துகொண்டனர். 'அரசால் அழைக்கப்பட்ட சமரச முயற்சியாளர் என்ற கௌரவம் அவருக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.' அதிலும் குறிப்பாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவின் பேச்சும், நடவடிக்கைகளும் எரிக் சொல்ஹெம்மின் முயற்சிகள் அர்த்தமற்றவை என்ற ரீதியிலும், அவர் தேவையற்ற விருந்தாளிபோன்றும் ஆக்கி இருந்தது.

எடுத்துக்காட்டாக, எரிக் சொல்ஹெம்மின் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவுடனான சந்திப்பைச் சுட்டிக்காட்ட முடியும். பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைச் சந்திக்கவென நோர்வேயின் விசேட தூதுவருடன் சிறீலங்காவிற்கான நோர்வேயின் தூதுவரும் சென்றிருந்தார். இச்சந்திப்பின்போது நோர்வே தூதுவருடன் மட்டுமே பேச்சுக்களை நடாத்திய பிரதமர் ரட்ணசிறீ விக்கிரமநாயக்க எரிக்சொல் ஹெய்மை கண்டுகொண்டதாக இல்லை. இறுதியில் விடைபெறும்போது மட்டுமே மாலை வணக்கங்களைப் பரிமாறிக் கொண்டார்.

இது ஒருபுறம் இருக்க, பிறிதோர்நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர்ரட்ணசிறிவிக்கிரமநாயக்க, 'யார் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடாத்தினும், யுத்தத்தை நாம் தொடர்ந்துகொண்டே இருப்போம்' எனத் தெரிவித்தார். பிரதமரின் இப்பேச்சானது சமாதான முயற்சிகள் அர்த்தமற்றவை என்ற ரீதியிலேயே அமைந்ததாகும்.

இதேசமயம் கடந்த யுத்த நிறுத்த காலத்தில் சிறீலங்கா இராணுவம் பெற்றுக்கொண்டதாகக்கூறும் வெற்றிகள் இராணுவ ரீதியில் எத்தகைய முக்கியத்துவமானவை - இதன்மூலம் சிறீலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டில் மேலாண்மையைப் பெற்றுவிட்டதா என்பவை எல்லாம் ஒருபுறம் இருக்க -இவ் யுத்த நிறுத்தத்தை அறிவிப்புச் செய்ததினால் புலிகள் அதற்காக குறிப்பிடத்தக்க விலை கொடுக்கவேண்டியும் இருந்தது.

> வேறுவிதமாகக் கூறுவதானால் 1999ம் ஆண்டின் இறுதியிலும், 2000ம் ஆண்டின் முற்பகுதியிலும் பாரிய இராணுவ தோல்விகளைச் சந்தித்தபோது நோர்வேயைச் சமரச முயற்சிக்கு அழைத்த அரசு – பின்னர் ஆயுத தளவாட ரீதியில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டதும் நோர்வேயைப் புறந்தள்ள முயற்சிக்கின்றது என்றே கூறலாம்.

ஒருபுறம், தென்மராட்சியின் மேற்கிலும், வலிகாமத்தின்தென் கிழக்கிலும் மீட்டெடுத்த நிலப்பரப்புக்களை தந்திரோபாய ரீதியில் தானும்விட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகிய அதே வேளை, இப்போர் நிறுத்த காலத்தில் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட வலிந்து தாக்குதல்களில் குறிப்பிடத்தக்க போராளிகளையும் அது இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஒருவகையில் பார்த்தால் அவை யுத்த நிறுத்தத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் கொடுக்கப்பட்ட விலை என்றே கூறலாம். ஆனால், இவற்றைச் சிறீலங்கா அரசோ விடுதலைப் புலிகளின் பலவீனம் எனச் சித்திரிக்க முனைகின்றது. இதனையே காரணமாகக்கொண்டு மேலும் புதிய வலிந்து தாக்குதல்களை நடாத்தவும் திட்டமிடுகின்றது.

அதாவது, சிறீலங்கா அரசதரப்புத் தகவலின்படி ஆனையிறவுப் பிரதேசத்தை மீட்டெடுப்பதற்கென இராணுவம் தயாராகிவருவது உறுதிசெய்யப்படுகிறது. கினிகிர - 09 நடவடிக்கை கடந்த 16ம் திகதி ஆரம்பிக்கப்பட்டபோதே இராணுவப்பேச்சாளர் 'ஆனையிறவு நோக்கி இராணுவம் டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் முன்னேறுகின்றது' எனக் கூறியதில் இருந்து அதனை உறுதிசெய்திருந்தார்.

இவ்வாறாக சந்திரிகா குமாரதுங்க அரசு முற்றிலும் யுத்தத்தையே முனைப்புப்படுத்துவதாக ஒருபுறமும், யுத்த நிறுத்தம் இராணுவ ரீதியிலான பாதிப்புக்களை விளைவித்துள்ள நிலை மறுபுறமுமாக இருக்கையில்; யுத்த நிறுத்தத்தினை மேலும் நீடிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானம் மேற்கொண்டது ஏன்? எவ்வாறு? என்பதே இன்று பலர் மத்தியிலும் உள்ள முக்கிய கேள்வியாகும்.

ஆனால், சிறீலங்கா அரசாங்கம் கூறிக்கொள்வதுபோன்று விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுப்போயுள்ளதினால் தனது ஆளணியைத் திரட்டிக்கொள்ளவும், மீண்டும் ஒரு தாக்குதலுக்குத் தயாராவதற்குமே இதனை அறிவிப்புச் செய்துள்ளனர் என்பதை கொழும்பிலுள்ள பிரபல இராணுவ விமர்சகர்கள்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்தகாலம் போன்றே அரசு தவறான மதிப்பீடு செய்துள்ளது. அன்றி பிரச்சார யுத்தியாகக்கொண்டுள்ளது என்பதே அவர்களின் அபிப்பிராயம்ஆகும்.

மேலும், இராணுவம் பாரிய வலிந்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ள நிலையில் - மற்றுமொரு யுத்த நிறுத்தத்திற்குப் புலிகள் தயாரென அறிவிப்பதானது அரசின் வாதத்தை அர்த்தமற்றதாக்கிவிடுகின்றது. ஏனெனில், அரசு கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்வதினால் இராணுவமும் யுத்த நிறுத்தத்தை கைக்கொள்ளும் நிலையிலேயே தான் அது சாத்தியமாகும். அதாவது புலிகள் பலப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆனால், அரசு யுத்த நிறுத்தத்தை நிராகரிக்கையில் அதனைத் தொடர்வதால் புலிகளுக்குப் பயன்தான் என்ன?

இது ஒருபுறம் இருக்க, சர்வதேச நிர்ப்பந்தங்களினால் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு முன்வந்திருப்பதாக சிலவேளைகளில் சிறீலங்கா அரசும், சில விமர்சகர்களும் கூறிக்கொள்வதுண்டு. ஆனால், இவ்வாதமும் பொருத்தப்பாடானதொன்றாக இருக்கமுடியாது. ஏனெனில், புலிகள் பிறரின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்துபோகவேண்டிய நிர்ப்பந்தத்திலோ கட்டாயத்திலோ இல்லை என்பது மட்டுமல்ல புலிகள் மீது நிர்ப்பந்தங்களைத் திணிக்கும் வகையில் வெளிநாடுகளிடம் தங்கியிருக்கும் நிலையிலும் புலிகள் இல்லை.

அதாவது, வெளிப்படையாகக் கூறின், வெளிநாடுகளில் புலிகளின் தளங்களோ அன்றி புலிகளின் தலைமைத்துவமோ இல்லை. அத்தோடு, வெளிநாடுகளின் இராணுவ - பொருளாதார உதவியோ அன்றி ஒத்தாசைகளோ புலிகளுக்கு கிடைப்பதாகவும் இல்லை. இந்நிலையில் வெளியார் புலிகள்மீது நிர்ப்பந்தத்தைத் திணிப்பது என்பதோ, புலிகள் நிர்ப்பந்தத்திற்குப் பணிவதென்பதோ சாத்தியப்பாடானவையும் அல்ல.

இந்நிலையில், யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மேலும் நீடிப்புச் செய்வதற்கு தெரிவித்த காரணங்கள் நிராகரிக்கப்படமுடியாதவையாகவே உள்ளன. அதாவது,

**1, முழுமையான போர் ஒன்றைத் தவிர்த்தல்**

**2. நோர்வே உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.**

இனப்பிரச்சினைக்குச் சர்வதேச மத்தியஸ்துவத்துடன் சமாதான முறையில் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு இன்று உருவாகியுள்ள சந்தர்ப்பத்தைபயன்படுத்தாதுபோனால் அடுத்து மூளப்போகும் யுத்தமானது முழு வீச்சளவிலானதாகவே இருக்கும் என்பதை எவரும் ஆருடம் கூறித்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதல்ல.

ஏனெனில் சிறீலங்கா அரசோ பெருமளவில் நவீன ஆயுத தளபாடங்களை வாங்கிக்குவித்துள்ளதோடு ஆனையிறவுப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதைத் தனது கௌரவப் பிரச்சினையாகவே கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. ஏனெனில் ஆனையிறவு இழப்பை சிறீலங்கா அரசு இராணுவ ரீதியில் தனக்கு ஏற்பட்ட மிகப் பெரும் தலைகுனிவாகவே அது கருதுகின்றது.

இதே சமயம் விடுதலைப் புலிகள் அமைப்போ, ஆனையிறவுப் பிரதேசத்தை நீண்டதொரு முயற்சியின் பின்னரே மீட்டெடுத்ததோடு, அதற்கெனக் குறிப்பிடத்தக்க அளவில் விலையும் கொடுத்துள்ளது. அதற்கும் மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பு அரசு கூறுவது போலன்றி பலமாகவே உள்ளது என்பதை 'நிரூபிக்க வேண்டிய தேவையும் உள்ளது. மேலும் அதன் எதிர்காலப்

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தான் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# போருக்கான செயற்பாட்டில் தீவிரம் காட்டும் அரசு

## சிறீலங்காவின் உண்மை நோக்கம் என்ன?

வவுனியாவில் இருந்து
**மாணிக்கவாசகர்**

இலங்கையின் சமாதான முயற்சிகள் சர்வதேச அரங்கு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற முனைப்பு பல மட்டங்களிலும் இப்போது தீவிரம் பெறத் தொடங்கியிருக்கின்றது. இருப்பினும், இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி அல்லது ஒழித்துக் கட்டி, பிரச்சினையின் தாக்கத்தை மழுங்கடித்து இழுவல் நழுவாலன ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் தலையில் கட்டிவிட வேண்டும் என்ற சிறீலங்கா அரசின் போக்கில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்பட்டதாகத்



சந்திரிகா

தெரியவில்லை. விடுதலைப் புலிகளினதும், அரசாங்கத்தினதும் சம்மதத்துடன் சமாதான முயற்சிகளின் முதற்படியாக பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அமையக் கூடிய வகையில் நோர்வே முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரிப்பது பற்றி இணக்கம் கண்டிருந்தது. அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய படிப்படியான செயற்பாடுகளை மேற்கொண்டு, மோதல்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தி வழி நடத்திச் செல்வதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது நோர்வேயின் நோக்கமாக இருந்தது.

பேச்சுவார்த்தைக்கான ஒரு சுமுகமான சூழலை உருவாக்க வேண்டும். அதன் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கின்ற தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற எல்லையற்ற துன்ப துயரங்களுக்கு முதலில் முடிவுகட்டி, நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதுடன், தொடர்ந்து போர்நிறுத்தத்தை மேற்கொண்டு நிதானமான சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் வேண்டுகோள். இந்த நிலைமைக்கு ஓரளவு உடன்பட்ட சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் இக் காலகட்டத்தில் நாட்டின் தென்பகுதிகளில் தம்முடைய தாக்குதல் நடவடிக்கைகளை முதலில் நிறுத்த வேண்டும் எனக் கோரியிருந்தது. ஆனால், நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்குகின்ற ஒரு போர் நிறுத்தத்தையே இரு தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் வேண்டுகோளாக இருந்தது. இருப்பினும், அரசு போர் நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்து, நல்லெண்ணச் சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான தேவையும் இல்லை என சாதித்துவிட்டது. ஏனெனில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு அடிப்படையில் தேவையானவைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அப்பகுதிகளில் இயல்பான ஒரு சூழ்நிலை நிலவுவதாக அடித்துக் கூறிவிட்டது. ஆனால், அரசாங்கத்தின் இத்தகைய ஒத்துழையாத செயற்பாட்டையும் பொருட்படுத்தாமல், நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கம் தரும்வகையில் ஒருதலைப்பட்சமாக ஒரு மாத யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டதுடன், நிலைமைகளை அரசு தனது போர்முனைப்புச் செயற்பாடுகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட போதிலும், தமது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடித்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தார்கள்.

இலங்கையில் சுமார் இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்களுக்கான மேசைக்குக்கொண்டு வருவதற்குரிய அழுத்தங்களைக் கொடுத்து அவர்களை சமாதான வழிக்குத் திருப்ப வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததன் பேரில் நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. அந்த முயற்சிக்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஓரளவு முன்னேற்றத்தையும் கண்டிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த வேளையில் தான், யாழ். குடாநாட்டில் தீவிரமான இராணுவ நடவடிக்கைகளை கினிஹிர என்ற பெயரில் அரசு தொடர்ந்து மேற்கொண்டது. கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, தனங்கிளப்பு என்று பல பிரதேசங்களைக் கைப்பற்றியதுடன் நின்று விடாமல், எழுதுமட்டுவாள், முகமாலை ஆகிய பிரதேசங்களையும் அரசு தன்வசப் படுத்திக் கொண்டது. அத்துடன் அராசங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் நின்றுவிடவில்லை. வரலாற்றில் கறையாகப் படிந்துவிட்ட கேந்திர முக்கியத்துவம் மிக்க தளமாகிய ஆனையிறவுத் தோல்வியை ஈடுசெய்யும் வகையில் அப் பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிவிட வேண்டும் என்ற முனைப்போடு செயற்பட்டு வருகின்றது.

> படைக்கு ஆட்களைத் திரட்டுவது இந்த யுத்தத்தை முடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே என்று பிரதமர் அங்கு ஆள்திரட்டுவதற்கான காரணத்தை விளக்கினார்.

சிறீலங்கா அரசாங்கத்தையும், சிஹல உறுமய, ஜேவிபி போன்ற இனவாதக் கட்சிகளையும் தவிர அனைவருமே நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டுள்ளார்கள். தொடரும் யுத்தத்தினால் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகி பெரும் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் சர்வதேச நாடுகள் சமாதானத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் சிறீலங்கா அரசு போர் முனைப்பைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக அவசரமாக 20 ஆயிரம் பேரைப் படையில் சேர்க்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளதையடுத்து, பத்தாயிரம் பேரையாவது படைக்குத் திரட்டிவிட வேண்டும் என்பதற்காகக் கடந்த வாரம் ஆள் திரட்டும் நடவடிக்கை கதிர்காமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயகா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு யுத்தத்தைத் தொடர வேண்டியதன் அவசியம் குறித்து முழங்கினார். சமாதானத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த சங்கநாயக்கர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு போர் முழக்கத்திற்கு வேகமூட்டினார்கள். படைக்கு ஆட்களைத் திரட்டுவது இந்த யுத்தத்தை முடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே என்று பிரதமர் அங்கு ஆள்திரட்டுவதற்கான காரணத்தை விளக்கினார். வரலாற்றுக் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து சோழ மன்னர்கள் சிங்கள இராச்சியங்கள் மீது படையெடுத்தபோது கதிர்காமம் அமைந்துள்ள றுகுணு பிரதேசத்திலேயே சிங்கள மன்னர்கள் படைதிரட்டிப் போர் செய்தார்கள் என்பதை நினைவூட்டி, இன்றைய சிங்கள இளைஞர்கள் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுவதற்காக படைகளில் சேர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இனத்தின் மீது பற்றுகொண்டு சம்பளத்தையோ, வசதிகளையோ பொருட்டாகப் பாராமல் படையில் சிங்கள இளைஞர்கள் சேர்ந்துள்ளார்கள் எனச் சுட்டிக் காட்டி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியடைவதற்காக இராணுவத்தின் கரத்தைப் பலப்படுத்துவதற்காக சிங்கள இளைஞர்களைப் படையணிகளுக்குத் திரட்டித் தருவோம் என்று சூளுரைத்த பௌத்த பிக்குகளும் இந்த வைபவத்தில் இராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துகொண்டு படைக்கு ஆள்திரட்டும் நடவடிக்கைக்கு மெருகூட்டினார்கள். இதேவேளை, அலங்கார அணியாக அமைக்கப்பட்டிருந்த சிறீலங்காவின் வான்படை இப்பொழுது நவீன வசதிகளுடன் திகழ்வதாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கையில் முழு அளவில் செயற்படக் கூடிய வகையில் தயாராகியிருப்பதாகவும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 50ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள சிறீலங்காவின் விமானப்படை, தரை படையினருக்கு அவர்களின் இராணுவ முன்னேற்ற நடவடிக்கைகளில் பேருதவியாகச் செயற்பட்டு வந்ததாகவும், ஒரு கட்டத்தில் விமானப்படை முழுமையாகச் செயற்பட முடியாத அளவில் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல் செயற்பாடு அமைந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். 95ம் ஆண்டு முதல் தமது விமானப்படையை வளப்படுத்தி வலிமையுடைய தாக்கும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தற்போது விமானப்படை கொண்டுள்ள சூட்டு வலுவை முழு அளவில் தாங்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை என்றும், அவர் தெரிவித்துள்ளார். தற்போது விமானப் படைக்குக் கிடைத்துள்ள நவீன தாக்குதல் விமானங்கள், உலங்குவானூர்திகள் மற்றும் இராணுவ சாதனங்கள் என்பவற்றை முறையாகப் பயன்படுத்தும் ஆற்றல் மிக்கவர்களாக வான்படையினரைப் பயிற்றுவிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதே தமது இராணுவ வளங்களை முழுமையாக இராணுவ நடவடிக்கைகளில் இன்னும் பயன்படுத்தாமலிருப்பதற்கான காரணமெனவும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தியுள்ள விடுதலைப் புலிகள், சந்தர்ப்பம் நேர்ந்தால், மிகுந்த வலிமையோடு இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களைத் தொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பைத் தெரிவத்த அவர், எவ்விதமான நிலைமைகளையும் எதிர்கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்குத் துணையாகச் செயற்படுவதற்கு தாக்குதல் விமானங்கள், உலங்குவானூர்திகள் மற்றும் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்கள் போன்ற தாக்குதல் வளத்துடன் திகழும் விமானப்படை அவற்றைத் தகுந்த முறையில் பயன்



ரட்ணசிறீ

படுத்துவதற்கான பயிற்சியைப் பெற்று விமானப்படையினரும் தயாராகிவருவதாகவும் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் (?) பிரிட்டன் பயங்கரவாத அமைப்புக்ளைப் பிரகடனப்படுத்தி, அவற்றைத் தடைசெய்யும் நடவடிக்கையே இப்போதைய சமாதான முயற்சிகளின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது என்று சிறீலங்காவின் அரசியல் மற்றும் இராணுவ வட்டாரங்கள் திடமாக நம்புகின்றன. பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால், பயங்கரவாத இயக்கம் என்ற நிலையில் தடைசெய்யப்பட்ட சூழ்நிலையில், விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என்றும், அவ்வாறான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அரசுக்கு எதிராக முழு ,அளவிலான யுத்த நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவார்கள் எனவும் அந்த வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இந்தப் பின்னணியில் பிரிட்டன் நிச்சயமாக விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கம் எனப் பிரகடனப்படுத்தி, அவ்வியகத்தைத் தடை செய்வார்கள் என்பதனால், முழுமையான யுத்த நிலைக்கே நாடு இட்டுச் செல்லப்படவுள்ளது என்ற நிச்சயமான எதிர்பார்ப்பும், அந்த எதிர்பார்ப்பின் அடிப்படையிலான செயற்பாடுகளும் முழு அளவில் இங்கு காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

# நேயரொலி

## நேரடி ஒளிபரப்பு

*ஈழமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,*

*மீண்டும் யாழ், மண்ணில் பதிந்த 'எம் தடங்கள்' தொடரை தொடர்ந்து படித்து வருகிறேன். 'ஆனையிறவு போர்' தொடங்கி ஒவ்வொரு நிகழ்வாக 'நேரடி ஒளிபரப்பு' போல் தொடர்ந்து செல்கிறது. அந்தக் களக் காட்சியில் லெப். கேணல் இராஜசிங்கத்துடனான வீடியோ படக்காட்சியையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதையும் பார்த்துவிட்டு தொடரையும் படிக்கும் போது ஏதோ சண்டையில் நாங்களே பங்கு கொண்டது போல ஒரு உணர்வு வருகிறது. என் ஊகம் சரியானால், இத்தொடரை எழுதுபவர் புலிகளின் குரல் வானொலி பொறுப்பாளராக இப்போது உள்ள ஜவான் அண்ணனாக இருக்கும் என்று நினைக்கின்றேன். கட்டைக்காலோடு அவர் சண்டைக்களத்தில் சுற்றித் திரிவதைப் பார்க்க முடிந்தது. இவை என் மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.*

*— கி. ஆறுமுகம்*

★ ★ ★

## இலக்கிய ஆர்வலர்களை உள்வாங்கும்

*கடந்த சில வாரங்களாக ஈழமுரசு தாங்கிவரும் இரவி அருணாசலம் எழுதும் 'காலம் ஆகி வந்த கதை' மிகவும் அருமையாக உள்ளது. கடந்த கால நிகழ்வுகளை இலக்கிய நயத்தோடு மிகவும் எளிமையாக அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில் தருகின்றார். இது ஈழமுரசை வளம் சேர்க்கும் ஒரு பக்கம் மட்டுமல்ல, பல இலக்கிய ஆர்வலர்களையும் உள்வாங்கக்கூடியது. எனவே இவ்வாறான கட்டுரை வாரம் வாரம் இடம் பெறுவது வரவேற்கக்கூடியது. இரவி அருணாசலம் அவர்கள் தொடர்ந்து எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.*

*மேலும் ஈழமுரசில் அண்மைக் காலமாக அதிக மாறுதல்கள் காணப்படுகின்றன. முன்பக்கத்தில் இடம் பெறும் செய்தி அமைப்பு மாற்றப்பட்டது வரவேற்கக்கூடியதாக இல்லை என்பதே எனது கருத்து. எனினும் காலத்திற்கும் ஏற்றவாறு வடிவங்களை மாற்றி அமைப்பதின் அவசியத்தையும் உணர்ந்துகொள்கிறேன். அத்துடன் புகலிட இலக்கியத்திற்கான பக்கங்களை அதிகரித்து புதிய எழுத்தாளர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்க ஈழமுரசு முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.*

*— கே. ஜெயரமணன், பாசல், சுவிஸ்*




**உங்கள் முழுமையான எதிர்காலத்தைக் கூறுகிறேன்**



உங்களது துரதிர்ஷ்டத்தையும் கஷ்டங்களையும் நீக்கி எதிரிகளிடம் இருந்து உங்களை பாதுகாக்க நான் அனுபவங்களையும், தேர்ச்சியையும் கொண்டுள்ளேன்.


- ★ உறவுகள்
- ★ பொருளாதாரம்
- ★ தொழில்துறை
- ★ வீட்டு நலம்
- ★ திருமணம்
- ★ வர்த்தகம்
- ★ பொறாமை


போன்றவற்றில் உங்களுக்கு உதவ உத்தரவாதம் அளிக்கின்றேன்.

PROTECTION POUCHES AVAILABLE

285, DUDLEY ROAD, WOLVERHAMPTON, WV2 3JU, ENGLAND. TEL: 01902621182

Pub.Lon.



நீங்கள் பால்க் காவடி, பன்னீர்க்காவடி, பறவைக் காவடி பார்த்திருப்பீர்கள். ஆனால் இது வித்தியாசமான காவடி! மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற தைப்பூச விழாவில் புதிய வகையான பல்வேறு காவடிகளை பக்தர்கள் எடுத்தனர். இங்கே நீங்கள் காண்பது பக்தர்கள் எடுக்கும் தோடம்பழக் காவடி, அப்பிள் காவடிகளை!!

# உலகமும் பத்தும்

## 13 வயது சிறுவனுக்கு 40 ஆண்டுகள் சிறை

அமெரிக்காவில் இளைய தலைமுறையினர் கைகளில் துப்பாக்கிகள் பெருகி வருவது நாளும் அவர்கள் மேற்கொள்ளும் சம்பவங்களில் இருந்து வெளிவரும் செய்தி! அதுவும் அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலம் பற்றி சொல்லவே தேவையில்லை. அண்மையில் இவ்வாறுதான் துப்பாக்கியால் 13 வயது சிறுவன் ஒருவன் தனது தந்தையின் இரண்டாவது மனைவியை [சித்தி] சுட்டுக்கொன்றிருக்கிறான்.

அமெரிக்க ரெக்சாஸ் மாநிலத்தில் தனியாக வசித்து வந்த அச் சிறுவன் கடந்த சில மாதங்களின் முன்னர்தான் தனது தந்தையுடன் இணைந்து ஒரே வீட்டில் வாழ்ந்துவந்தான். ஆனால் திடீரென ஒருநாள் துப்பாக்கியை எடுத்துவந்து தந்தையையும் அவரது மனைவியையும் நோக்கி வேட்டுகளைத் தீர்த்துள்ளான். இதில் அப்பெண் பலியாக தகப்பன் காயங்களுடன் தப்பித்துக்கொண்டுள்ளார். வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. நீதிமன்றம் சிறுவனுக்கு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. 13 வயது சிறுவன் என்பதால் 16 வயதுவரை சீர்திருத்த சிறையில் வைக்கப்பட்டு பின்னர், அவரைச் சிறைக்கு அனுப்புமாறு நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

## மான் மோதி விமானம் தீப்பிடித்தது

ஐரோப்பாவின் பல கிராமிய நெடுஞ்சாலைகளில் மான்கள் குறுக்காகச் செல்லும் எனும் சைகைப் பலகைகளை காணலாம். இங்கு மான்கள் மீது மோதினால் வாகனச்சாரதி மீதுதான் குற்றம் சுமத்தப்படும். இது வீதிகளுக்குப் பொருத்தமானதுதான். ஆனால் விமான ஓடுபாதையில் எப்படி சைகைப் பலகையை வைக்கமுடியும்.

அண்மையில் அமெரிக்காவின் ஜக்சன் வில் பகுதியில் உள்ள நகரசபையின் விமான நிலையத்தில் இறங்க, ஒரு லியர் ஜெட் விமானம் தயாரானது. ஓடுபாதையில் இறங்கிய விமானி சிறிது தூரம் ஓடியபோதுதான் குறுக்காக மான்கள் செல்வதை கண்டுகொண்டார். எப்படியாவது விமானத்தை நிறுத்தி மிருகங்களைக் காப்பாற்றிவிட விமானி முயற்சித்தார், ஆனால் முடியவில்லை. மான்களுடன் மோதிய விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி ஓடி இரண்டாக வெடித்து தீப்பிடித்துக்கொண்டது. நல்லவேளை விமானத்தில் பயணிகள் இருக்கவில்லை. விமானியும் உதவி விமானியும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



## எமது விடிவிற்காக தமது உயிர்களை...

# மேஜர் கமல்

உள்ளத்தில் வேரோடி, எண்ணத்தில் விருட்சமாய் நின்றவர் கமல் அண்ணன். பலசாலிகள் பலரைப் பார்த்திருக்கிறேன். ஆனால், கமல் அண்ணனைப்போல், இரண்டு ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கியை, இரண்டு கைகளிலும் தூக்கி நேராகப் பிடிக்கக்கூடிய பலசாலிகளைப் பார்க்கவில்லை. பலரின் தோற்றத்தைக் கண்டு பயந்து வியந்திருக்கின்றேன். கமலண்ணனின் தோற்றத்தைக் கண்டு பயந்து, வியந்து நின்றதுபோல் எங்கும் நிற்கவில்லை. அன்பும், கருணையும் எல்லாரிடமும் இருந்தது; கமலண்ணனிடமே அவற்றை நான் அதிகமாகப் பெற்றிருக்கின்றேன்.

மணலாற்றுக் காட்டில் இவருடன் வாழ்ந்த நாட்களின் சில நிகழ்வுகளையும், அவரைப்பற்றி சகபோராளிகள் பேசிக் கொண்டவற்றையும் சில கணம் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அந்தச் சிந்தனையின் கோடுகள் ஓரிரண்டு வரிகளாய் எழுகின்றன.

அகன்ற மார்பு... திரண்டு முறுக்கேறிய தசைநார்கள், இரத்தம்போல் சிவந்திருக்கும் கண்கள்... சவரம் செய்யப்படாத தாடி... சீப்பினை அறியாத தலைமுடி... இருண்ட நிறம்... கமலண்ணையை இலகுவில் மறந்துவிட முடியுமா...? நினைவை விட்டு அகலாத தோற்றம் மட்டுமல்ல, உள்ளத்தில் ஆழப்பதிந்த நினைவுகள் கொஞ்சமா...?

மணலாற்றுக் காட்டில் நித்திகைக்குளப் பிரதேசத்தில், இந்தியப் படையின் மிகப்பெரிய முகாமொன்று அமைந்திருந்தது. வான்படை, 'கெலிக்கொப்ரர்களின்' இறங்குதள வசதிகளுடன் கூடிய இப் படைமுகாமில், தினமும் நான்குக்கு மேற்பட்ட 'கெலிக்கொப்ரர்கள்' தரித்துநிற்கும். இவற்றைத் தாக்கி அழிக்கின்ற பணி ஒப்படைக்கப்பட்டது. ஒன்பதுபேர் கொண்ட அணி...தற்கொலைப் படைக்கு ஒப்பான தாக்குதல்... தனது நம்பிக்கைமிக்க, பொறுப்புமிக்க வீரர்களையே தெரிந்தெடுத்து அனுப்பினார் தலைவர். கமலண்ணையின் தோளில் சிறுதடி போல் கிடந்தது ஆர்.பி.ஜி. சிறு தளம்பல் கூட இல்லாமல் ஆர்.பி.ஜி. இயக்கும் வலிமை, கமலண்ணையிடம் சாதாரணமாகவே இருந்தது. குறிதப்பாமல் செலுத்திய கமலண்ணையின் ஆர்.பி.ஜி. கணையில் 'கெலிக்கொப்ரர்கள்' தீப்பற்றி எரிந்தன. இன்றும் கண்முன்னே நிழலாய்த் தெரியும் அந்த நிகழ்வை மறந்துவிட முடியுமா....?



இந்திய மண்ணில் பயிற்சி முடித்த கமலண்ணன் பயிற்சியின் பின் தலைவரின் மெய்க்காப்பாளனாகவும், அவரது வாகனச் சாரதியாகவும் இருந்து, அவருடனேயே ஈழமண்ணில் கால்பதித்து, யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைக்கெதிரான களம்கண்டு, மணலாற்றுக்கு அவருடனேயே வந்தவர் என்று தோழர்கள் அவரைப் பற்றிச் சொல்லக் கேள்விப்பட்டேன். மணலாற்றில்தான் அவரோடு பழகும் பாக்கியம் கிடைத்தது.

மணலாற்றுக் காட்டில், பெண் போராளிகளுக்கான இரண்டாவது படைப்பயிற்சிப் பாசறையைப் பொறுப்பேற்று நடத்தி முடித்தவர். இவரை இழந்து, வேதனைகளைச் சுமந்து சுமைதாங்கியாய் நின்ற அந்த இறுதி நாட்களைப் பற்றி நினைக்காமலிருக்க முடியாது.

இந்தியப் படையின் காட்டு முற்றுகைத் தாக்குதலின் இரண்டாம் கட்ட நடவடிக்கையான 'செக்மேற் - 02' தொடங்கியது. நீண்ட நாட்கள் சவரம் செய்யப்படாத முடியையும், தாடியையும் சவரம் செய்திருந்தார். பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தது. அழகு பார்த்து சிரித்து மகிழ நேரமில்லை. சண்டை தொடங்கியது. சிலமணி நேரந்தான்.... மலையொன்று சரிந்தது... உரமேறிய அந்த நெஞ்சில் எப்படித்தான் குண்டு துளைத்துக்கொண்டதோ தெரியாது! குருதியாற்றில் குளித்துக் கிடந்தார் கமலண்ணன். நெஞ்செல்லாம் ஒருகணம் நின்று துடித்தது. அசையாத மலையொன்றினைக்கூட அவன் சாவு, ஒரு கணம் அசைத்துநின்றது!

*(மாவீரர் குறிப்பேட்டிலிருந்து)*



# மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்

## பாகம் - 33

எறிகணை வீச்சு சற்று ஓய்ந்ததும் நாம் மீண்டும் முகாமிற்குள் சென்றோம். அதற்கு முன் பழைய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களையும் பார்வையிட்டோம். 20ஆம் நூற்றாண்டின் உலக சரித்திரம் என்ற ஆங்கில நூலை முகாமிலிருந்து எடுத்துப் புரட்டியவாறு சென்றோம். இடையிலும் ஒரு வீடு இருந்தது. சுமார் 250 மீற்றர் தூரம் சென்று முகாமின் பின் பக்க நிலைகளைப் பார்வையிட்டோம். 50 கலிபர் நிலைகள் மீது ஆட்லறி ஷெல்கள் வீழ்ந்து வெடித்திருந்தன. துல்லியமான எறிகணை வீச்சுத்தான். நீளமான நகரும் பதுங்குகுழியினூடு நகர்ந்து தனங்கிளப்பு பிள்ளையார் கோவிலை அடைந்தோம். போகும் வழியெல்லாம் இம் முகாமின் மீதான தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்தது? எந்த வழியால் தாங்கள் இம் முகாமினுள் பிரவேசித்தோம் என்றெல்லாம் கஜன் என்ற போராளி எமக்கு விளக்கிக்கொண்டே வந்தார்.

பிள்ளையார் கோவிலின் உள்வீதியிலும் காவலரண்கள் தாராளமாக இருந்தன. ஐயரின் மடப்பள்ளியையும் இராணுவம் விட்டுவைக்கவில்லை. 'சர்வம் இராணுவ மயம்'.

கோவில் தாண்டியதும் இராணுவ வேலியில் ஒரு பொத்தல் வைத்து அதற்குச் சாக்கினால் திரை கட்டியிருந்தனர். இந்தத் திரையை அகற்றித்தான் போராளிகளின் நடமாட்டங்களை அவதானித்து வந்துள்ளனர். ஏற்கனவே நடாத்தப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதலில் 6 இராணுவத்தினர் காயமடைந்த இடத்தையும் திரு.குட்டி அவர்கள் எமக்குக் காட்டினார்.

ஆங்காங்கே குடங்களையும் சிறிய அளவில் சமையல் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் காண முடிந்தது. குடங்களில் அப் பகுதிக்குரிய குறியீட்டு எழுத்துக்கள் காணப்பட்டன. இந்த முகாம் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கு மிகவும் சாதகமற்ற ஒரு சூழலில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. முகாமைச் சுற்றிப்பார்த்தும் இம்முகாம் அவ்விடத்தில் அமைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள அழிவுகளை திரு.குட்டி அவர்கள் எமக்கு விளக்கினார். அவ்வாறு சென்றுகொண்டிருக்கையில், தான் மூன்று நாளாக பல் விளக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டார். இரவு பகலாக ஊண் உறக்கமின்றி பணியாற்றியதால் தான் அவரது முகத்திலும் உடலிலும் தளர்ச்சியைக் காணமுடிந்தது.

### களமுனையில் இருந்து

எனினும் இம் முகாம் எவ்வாறு புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது என்பதை அறிய விரும்பினோம். நாம் கேட்டதற்கிணங்க அவர் இது பற்றித் தெரிவித்தார்.

'இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கத்துடன் அறுகுவெளி முகாம் மீது தாக்குதல் நடத்தி அதனை நாம் கைப்பற்றினோம். எனினும் தனங்கிளப்பு முகாம் எமது கைகளில் விழவில்லை. அதற்குப் பின்னரும் நாம் இரு தடவை முயற்சித்தபோதும் அம் முயற்சிகள் எமக்குச் சாதகமாக அமையவில்லை. எமது தேசியத் தலைவரின் வழி நடத்தலின் பிரகாரம் ஒருங்கிணைப்புத் தளபதி தற்போதைய தாக்குதலுக்கான திட்டங்களையும் உத்திகளையும் வகுத்தார். இவ்விடத்தின் பூகோள அமைப்பைப் பார்த்திருப்பீர்கள். இது எதிரிக்கே சாதகமானது! அப்படி இருந்தும் இதை எப்படியும் வெற்றி கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்துடன் வேவுக்குழுக்களின் தரவுகளின் அடிப்படையில் இதற்கான உத்திகள் வகுக்கப்பட்டன.

போராளிகளைப் பொறுத்தவரை இம் முகாமின் தாக்குதலுக்கென வேவு பார்ப்பதற்குச் சென்று வீரச்சாவடைந்த போராளிகளை நினைத்துப் பார்த்துக்கொண்டார்கள். அவர்களின் இலட்சியத்தை, கனவுகளை நிறைவேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறும் சந்தர்ப்பம் இப்போதுதான் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது முயற்சி கைகூடியது எனினும் முதல்நாள் சமரில் 23 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இந்நிலையில் எமது திட்டங்களை மீள வடிவமைத்து மறுநாள் மின்னல் வேகத்தாக்குதல் மூலம் இம் முகாமைக் கைப்பற்றினோம். இரண்டாம் நாள் தாக்குதலின் போது பின்தள வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எல்லைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

இதேபோல கோயிலாக்கண்டி முகாமினுள்ளும் மூன்று தடவைகள் தடைகளைத் தாண்டியபோதும் முகாமின் உள்ளே செல்லமுடியாத நிலை இருந்தது. இந்த நிலையில் கடற்புலிகள் கடல்வழியாகத் தரையிறங்கி தாக்குதல் நடத்தி உட்பிரவேசித்ததும் நாம் எமது இலக்கை அடைந்தோம்.

மொத்தத்தில் எமது தலைமையின் திட்டமிடல், போராளிகளின் அர்ப்பணிப்பு என்பன இம் முகாமை வெற்றிகொள்ளக் காரணிகளாயின.'

இவ்வாறு அவர் கூறிமுடித்ததும், 'இம் முகாம் கைப்பற்றப்பட்டதும் உங்களது மன உணர்வு எவ்வாறு இருந்தது?' என்று கேட்டோம். 'எமது பல மாத உழைப்பின் பலன் இப்போதுதான் கிட்டியுள்ளது. அந்த வகையில் மகிழ்ச்சியே. இவ்விடத்தின் புவியமைப்பே எமது வெற்றியைத் தாமதமாக்கியது. அத்தோடு எமது எத்தனையோ போராளிகளின் வீரச்சாவிற்குக் காரணமாக இருந்த இம்முகாம் வெற்றிகொள்ளப்பட்டது ஒரு மனநிறைவைத் தருகிறது. இவ்வேளையிலும் அந்த மாவீரர்களையே மனதில் நினைக்கின்றேன்' எனப்பதிலளித்தார் குட்டி.

திரு.குட்டி அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வந்தோம். அதன் பின்னர் நீண்ட நாட்களாக நாம் காத்திருந்த சந்திப்பு நிகழ்ந்தது.

[தொடரும்]

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சுலக்ஷன் ஸ்ரீ, செல்வி சு.திவ்வியா, செல்வி தனுஷா விக்னராஜா ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



### ஆதவன் விக்னேஸ்வரன்

**இடம்:** 35688 Dillenburg - Germany.
**வயது:** 05 (11.04.1996)
**பாடசாலை:** தமிழாலயம் Dillenburg
**பொழுதுபோக்கு:** படம்வரைதல், முத்திரை சேகரித்தல்
**உறுப்பினர் எண்:** G134

நான் அறிந்தவை

1. நாய் நன்றியுள்ளது.
2. பசு சாதுவானது.
3. நரி தந்திரமுள்ளது.



### சபேசனா தேசிங்குராசா

**இடம்:** 77500 Chelles - பிரான்ஸ்.
**வயது:** 06 (07.02.1995)
**பொழுதுபோக்கு:** படம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல், பரதநாட்டியம் கற்றல்
**உறுப்பினர் எண்:** F126

நாய்

நாய் நன்றி உள்ள மிருகம்.
நாய் எங்கள் நண்பன்.
நாய் வீட்டு காவலன்.
நான் விரும்பும் மிருகம்.




இலையில் ஈரம் தாங்கும் – மரம்
தலையில் வெயிலைத் தாங்கும்
மலைமேல் போர்வை போல–மரங்கள்
வாய்ப்பாய் மூடும் சால!

மழைவேகத்தைத் தடுத்து – நம்
மண்ணுக்கு அதையே கொடுத்து,
தழைக்கச் செய்யும் தம்பி – வளம்
பிழைக்கும் மரத்தை நம்பி!

அழகுப்பூவும் பூத்துக் குலுங்கும்
அருமைக் காயுங்காய்த்துப்
பழங்கள் கொடுக்கும் மரமே – அடர்ந்து
நிழல் படைக்கும் மரமே!

பூஞ்சிட்டுக்கள் காகம் – இருக்கப்
பொருந்தும் விடுதியாகும்
ஊஞ்சல் கட்டியாடக் – கிளை
உதவும் மரமே வாழ்க!

- மின்னூர் சீனிவாசன் -




## கதை முற்றம்

### எதுவும் எப்பொழுதும் நடக்கலாம்!

முன்னொரு காலத்தில் லெலிகசு நாட்டை அனகாசு என்ற கொடியவன் ஆண்டுவந்தான்.

அவன் தன் அரண்மனையில் பெரிய திராட்சைத் தோட்டம் ஒன்றை அமைக்க முயற்சி செய்தான். அதற்காகத் தன் அடிமைகளை எல்லாம் கடுமையாக வேலை வாங்கினான்.

அவன் அடிமைகளில் முதியவனான ஒருவனுக்கு எதிர் காலத்தைச் சொல்லும் ஆற்றல் இருந்தது.

'இந்தத் திராட்சைத் தோட்டத்திலிருந்து ஒரு கிண்ணம் பழச் சாற்றைக் கூட அரசன் சுவை பார்க்க முடியாது. அதற்குள் அவன் இறந்துவிடுவான்' என்றான் அவன்.

இதைக் கேள்விப்பட்ட அரசன் கோபம் கொண்டான்.

தோட்டத்தில் திராட்சை குலை குலையாக நன்கு பழுத்தது. அரசன் குடிப்பதற்காக அதிலிருந்து ஒரு கிண்ணம் பழச்சாறு அரண்மனைக்கு வந்தது.

கிண்ணத்தைக் கையில் வாங்கினான் அரசன். தன் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லிய அந்த அடிமையை அங்கு வரவழைத்தான்.

'ஏ! அடிமையே! உனக்கு என்ன ஆணவம்? ஒரு கிண்ணம் பழச்சாறு பருகுவதற்குள் நான் இறந்துவிடுவேன் என்றாயே? இப்பொழுது என்ன சொல்கிறாய்?' என்று கிண்ணத்தைக் காட்டிக்கேட்டான்.

'இந்தப் பழச் சாற்றை நீங்கள் குடிப்பதற்கு முன் எதுவும் நடக்கலாம்' என்றான் அந்த அடிமை.

அப்பொழுது அங்கு ஓடி வந்தான் வீரன் ஒருவன். 'அரசே! திராட்சைத் தோட்டத்திற்குள் கரடி ஒன்று புகுந்து விட்டது. அது தோட்டத்தையே பாழ்படுத்திக்கொண்டிருக்கிறது' என்று அலறினான்.

'அப்படியா?' என்ற அரசன் பழச் சாற்றுக் கிண்ணத்தை அங்கேயே வைத்தான். ஈட்டியை எடுத்துக்கொண்டு திராட்சைத் தோட்டத்திற்குச் சென்றான்.

அங்கே பதுங்கியிருந்த கரடி அரசன் மேல் பாய்ந்து அவனைக்கொன்று போட்டது.

அந்த அடிமையின் சொற்கள் பலித்து விட்டன.

## கண்டுபிடியுங்கள்

### கடந்த வார விடைகள்

**முழக்கம் 316**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொ | சா | ம் | பி | க் | | |
| தெ | ன் | னா | பி | ரி | க் | கா |
| எ | த் | தி | யோ | ப் | பி | யா |
| எ | ரி | த் | தி | ரி | யா | |
| ம | ட | கா | ஸ் | கா | ர் | |
| உ | ரு | கு | வே | | | |
| தா | ன் | சா | னி | யா | | |
| சோ | மா | லி | யா | | | |

**முழக்கம் 317**

| | | | |
|---|---|---|---|
| சி | ம் | பா | வே |
| பொ | ஸ் | வா | னா |
| ச | ய | ர் | |
| ந | மீ | பி | யா |
| சா | ம் | பி | யா |
| கொ | ங் | கோ | |
| க | ம | ரூ | ன் |
| மா | லி | | |

## பழமொழி முற்றம்

★ கத்தும் பூனை எலி பிடிக்காது.
★ ரோஜாவையும் விரும்பு. அதன் முள்ளையும் விரும்பு.
★ ஒரு கையைத் தட்டினால் ஓசை எழாது.
★ உனக்குத் தெரியாத தேவதையை விட, தெரிந்த பிசாசே நல்லது.
★ பொய்யன் வீடு தீப்பற்றி எரிந்தாலும் அச் செய்தியும் பொய்யாகவே போய்விடும்.
★ ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால்தான் அதிக தீமை.
★ கோழையின் கண்ணுக்கு பூனையும் பூதம்போல் தோன்றும்.
★ பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம். நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்.
★ நீரில் மூழ்குபவன் அதன் நுரையைக்கூட பற்றிக்கொள்வான்.
★ பொன்னில் இழப்பதை விட, தவிட்டில் ஆகாயம் தேடு.

– ஆர்மேனியா –

## வினா-விடை முற்றம்

### கடந்தவார விடைகள்:

1. வில், அம்பு, கேடயம், ஈட்டி, வாள்.
2. உயிர்ச்சத்து 'B'
3. எப்பொழுதும் வெப்பத்தை கக்கிக்கொண்டிருக்கும். ஆனால் உலோகத்தில் ஏதும் குறைவு ஏற்படாது.
4. அமெரிக்கா.
5. அலெக்சாண்டர்.
6. சுறுசுறுப்பு, சேமிப்பு.

### இவ்வார வினாக்கள்

1. இலைகளுக்கு தண்டுகள் இருப்பது ஏன்?
2. தாமரை எப்போது மலரும்.
3. மரங்களின் வேர்களில் என்ன பயன்?
4. பனாமாக் கால்வாய் எங்கு உள்ளது?
5. கடற்கரைப் பகுதிகளில் தென்னை செழித்து வளர்வதற்குக் காரணம் என்ன?
6. ஐந்து உலோகங்கள் எவை?

*அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.*

# நந்தா...

## சிறு கதை

குடிசையின் மேலாக எழுந்த புகைமூட்டம் மதியநேர உணவிற்கான அறிவிப்பாக இருந்தது.

பூஞ்சிநோனா அரக்கப் பரக்க அடுப்பை ஊதிக்கொண்டிருந்தாள். அவளின் கண்கள் கசங்கி கண்ணீர் கண்டிருந்தது. ஈரப்பிலாக்காயின் இதமான வாசம் இரைப்பையில் நுண் அமிலங்களை சுரக்கச் செய்தன. விழி பிதுங்க வழிபார்த்து யாருக்காக அவர்கள்....?

விரிந்த மார்பு... குறுகிய உடல்... இடுப்பைச் சுற்றிய 'பெல்ட்'டை கழற்றி கைகால்களை அலம்பினான் கொடித்துவக்கு.

அப்பா வந்திட்டார்....

அனைவரின் குரலும் ஒருமித்து ஒலித்தன.

பசித்த உயிர்கள் பரிதவித்து தட்டுகளுக்கு முன் அமர்ந்துகொண்டனர். இருந்தும் இன்னுமொரு வெற்றிடம். எங்கை நந்தா? கொடித்துவக்கின் கேள்விக்குமிழி உடைய பூஞ்சிநோனா பதிலளித்தாள்.

'வேலை விடயமாக ரவுணுக்குப் போனவன் இன்னும் வரேல்லை' மனைவியின் பதிலுடன் கொடித்துவக்கு அமைதியாக, அனைவரும் சமபந்திப்போசனம்.

அந்த ஏழைக்குடும்பத்தின் தலைவன் கொடித்துவக்கு. மரக்காலை ஒன்றின் தினக்கூலியாக வேலை. மூத்த மகன் நந்தா. படித்தது பத்தாவது. தந்தையைப் படராமல் தனியாகத் தானாக முயற்சியில் இறங்கி மாதங்கள் மூன்று. பயன்தான் இல்லை. வேலை கிடைக்கவில்லை.

அடுத்தடுத்து மூன்று தங்கைகள் 20, 18, 16. தந்தைக்கு முண்டுகொடுத்து மூத்தவள் நெசவு ஆலையொன்றில் இரவு வேலையாக இயந்திரமாக.... மற்றும் இரு பெண்கள் அடுப்படியில் அம்மாவுக்கு அனுசரணையாக... புகைக்குள்... வாழ்க்கையில் புதிர்களுக்குள். தம்பிகள் இருவர் தவறாமல் பள்ளிக்குச் செல்லுகின்றனர். கல்விக்கு மேலாக காலை மாலை இலவச உணவிற்காக. குடும்பத்தின் மொத்தத்தொகை எட்டு, வாட்டும் வறுமைக்கு முகம்கொடுக்க முடியாமல் மூச்சுத்திணறுகின்றார்கள். எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், விரக்திகள், விரகதாபங்கள், பசி, பட்டினி இப்படிப் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நம்பிக்கை என்று ஒன்று உண்டு. அதுதான் நந்தாவிற்கு வேலை கிடைக்காதா? அதனால் குடும்பத்திற்கு ஒரு விடிவு ஏற்படாதா.... என்று.

தெருப்புழுதியைக் கிளப்பிவிட்டு, விரைந்து வந்துநின்றது அக் கிராமத்து பஸ்வண்டியொன்று. நந்தா அதிலிருந்து இறங்கவும், அவனின் தங்கையும் அவள் தோழி சுமணாவும் இரவு வேலைக்காய் அதில் ஏறவும் சரியாக இருந்தது.

'சுமணா நில்லு' நந்தாவின் குரல் சுமணாவை பஸ்சிற்குள் ஏறவிடாமல் தடுத்தது.

'நீ நின்று அடுத்த பஸ்சில் வா. நான் போறன்' அண்ணனை அர்த்தமுள்ள அசட்டுச் சிரிப்புடன் அளந்துவிட்டு தோழியிடம் விடைபெற்றாள். வினாக்குறியான இவர்களின் காதல் முற்றுப்புள்ளியில் முடியவேண்டுமென்று மனத்திற்குள் நினைத்தவாறு பஸ்சிற்குள் நுழைந்துகொண்டாள்.

சுமணா நந்தாவின் காதலி. குடிக்கு இரையான அப்பா. நோய்க்கு இரையான அம்மா. நூல் இழையில் ஆடும் குடும்பத்தை நெசவுஆலைக்குச் சென்று காப்பாற்றுகின்றாள்.

சுமணா, நந்தா... இருவருக்குமிடையில் சில மணித்துளி மௌனம். உடைத்தாள் சுமணா. 'உங்கள் வேலை என்னமாதிரி?'

'கிடைக்கவில்லை'

'நான் அடுத்த பஸ்சில் வேலைக்குப்போக?'

'வேண்டாம்..'

சுமணா மௌனமாக நந்தாவை பின்தொடர்ந்தாள்.

ஆறு அதையொட்டி அடர்ந்த புல்வெளி. அந்திசாயும் நேரம் அமைதி சூழ்ந்திருந்தது. அவர்களின் மனங்களைப்போல... மௌனக்குளத்தில் கல்லெறிந்தான் நந்தா.

'நான் வேறு ஒரு வேலைக்கு மனுப்போட்டுவிட்டு வந்திருக்கிறன்' அது நிச்சயம் கிடைக்கும்.

'என்ன வேலை?' ஆவலுடன் கேட்டாள் சுமணா

'இராணுவத்தில் சேர்வதற்கு...' தொடர்ந்து அவன் வார்த்தைகளை முடிக்குமுன் சுமணா அதிர்ந்துவிட்டாள்.

'நீயா நந்தா இப்படி?'

சோகம் அப்பிய அவளின் கேள்வி இருவருக்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறைத்தது.

'வேறு வழி எனக்குத் தெரியவில்லை... வீட்டின் நிலைமை உனக்குத் தெரியும். எத்தனை நாள் இப்படி வேலையில்லாமல் நான்...' வறுமை + தன்மான உணர்ச்சி = வெப்பவார்த்தைகளாக நந்தாவிடமிருந்து வெளியேறியது.

சுமணா தன்னைச் சுதாகரித்துக்கொண்டு 'அவர்கள் போராட்டம் நியாயமானது என்றாயே? இப்போது அவர்களுக்கு எதிராக அவர்கள் பகுதிக்கே...'

நந்தா பல தரப்பட்ட உணர்ச்சிகளின் கலவை. அதுவே அவனது குணச்சித்திரம். 'வறுமையின் வாட்டம் தத்துவத்தின் அத்திவாரம்' என்பதுபோல, வறுமையின் தாக்குதலுக்குத் தப்பி அவன் ஒளிந்தது கிராமத்தின் நூல்நிலையங்கள்தான். அங்கு சிவப்புமட்டைப் புத்தகங்களின் சித்தாத்தங்களில் நுனிப்புல்மேய்ந்து வெளியேறியவன். எனினும் நாட்டு நடப்பு, நடைபெறும் யுத்தத்தின் தார்மீக உண்மை, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, விடுதலைப் போராட்டத்தின் நியாயம் யாவும் அறிவான். இதுபற்றி ஏதுமறியாத பேதை சுமணாவிடம் ஒரு போதையையே ஏற்படுத்தியிருந்தான். இன்று அவள் இப்படி அதிர்ந்ததில் வியப்பேதும் இல்லை. தனது முயற்சியில் சற்றும் மனந்தளராத ஒரு பறவை தனிக் கூடு அமைக்க கடும் முயற்சியில் ஈடுபட்டு கூடு ஒன்றைக் கட்டுவதை மரத்தை வெறித்துப் பார்த்த நந்தாவை சுமணாவின் கேள்வி சுயநினைவுக்கு அழைத்தது.

'நந்தா உனது முடிவில் மாற்றமேதும் இல்லையா?'

'முடியாது சுமணா. இது தவிர்ந்த எந்தமுடிவிற்கும் வரமுடியாது என்ற நிலையில் தெரிந்தெடுத்த முடிவு. தவறான முடிவுதான்.' என்று தன்னிலை விளக்கம்கொடுத்தான்.

தவித்தவன் வார்த்தைகள் தடம்புரண்டு வந்தது. 'வழி தவறு. ஆனால் ஒரு வாரத்தில் பதில் வரும். வேலை நிச்சயம். நேரம் அப்படி.' பூடகமான அவன் பதிலைப் புரிந்துகொள்ள அவளாலும் முடிந்தது. மீண்டும். மௌனம். உள்ளத்தில் இருவருக்கும் போராட்டம். மன ஆழத்தில் இருந்து உயிர் நாதமாக எழுந்த வார்த்தைக் குமிழிகளை நந்தாவின் வாய் உடைத்தது.


'எனக்காகக் காத்திருப்பாயா? சுமணா...?' வார்த்தையை முடிக்குமுன் அவனின் வாய்பொத்தினாள் சுமணா. கரத்தை இழுத்து இடை சேர்த்து நிறுத்திக்கூறினான் நந்தா. ' அப்படி நான் வராவிடினும் அவர்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாதே. அவர்கள் அவர்களது உரிமைக்காக. நாங்கள் நமது உழைப்புக்காக' கூறிமுடித்தவனை வாரியணைத்தாள் சுமணா. அவளின் விம்மிய மார்புகளுக்கிடையில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுதான் நந்தா. இனிய மாலைப்பொழுது இருள் சூழ்ந்துகொண்டது.

நந்தா எடுத்திருந்த முடிவு அவன் குடும்பத்திற்குள் வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. 'என்னோட மரக்காலையில ஏதாவது வேலை செய்யிறதுதானே' அதிகாரத்துடன் அதட்டிக்கேட்டார் தந்தை. 'எனக்கு விருப்பமில்லை' அலட்சியமாக நந்தாவிடமிருந்து பதில் வந்தது. 'அநியாயமாகச் சாகப்போறியா?'

'பறவாயில்லை வீட்டிற்குக் காசு வரும். நானும் வேலை செய்தனான் என்று சந்தோஷப்படுங்கள்.' தந்தை அமைதியாக தாய் தொடர்ந்தாள்.

'வறுமைக்காக உன்னை இழக்கத் தயார் இல்லை' கண்கள் அழ வார்த்தைகள் வெளிவந்தன. தங்கைகள் மூவரும் திகைப்பில் நின்றிருந்தனர்.

'அண்ணே வேலைக்குப் போகப் போகிறாயா? எனக்குப் புதுப்பேனா....', 'எனக்குப் பள்ளிக்கூட பாக்' தம்பிகள் இருவரும். ஒருவர் மாறி ஒருவராக... தந்தையின் கோபம்... தாயின் கண்ணீர், தங்கைகளின் திகைப்பு, தம்பிகளின் விண்ணப்பம் இவற்றிற்கு மத்தியில்




நந்தாவின் தொலைப்பயணம் எந்தவித மாற்றமுமின்றித் நடந்தது.

கவர்ச்சிகரமான விளம்பரங்கள் இராணுவத்திற்கு ஆட்சேர்க்க. நேர்முகப் பரீட்சைக்கு வரிசையில் நின்றுகொண்டிருந்தான் நந்தா. 'பொறியத் தீனி வைப்பது எலியின் பசியைப் போக்க அல்ல, புலிக்கு இரையாக்கவே' நந்தா நினைத்தான். சிரித்தான். அவசரத் தெரிவுகள், அவசர அவசர பயிற்சிகள் எதிலும் வேகம். மூன்று மாதத்தில் எல்லாம் முடிய நந்தா களத்திற்கு அனுப்பப்பட்டான்.

தாக்குதல் ஒன்றுக்கு ஒரு குழு தயார் நிலையில் நந்தாவும் அதில் இருந்தான். தாக்குதல் பற்றிய விளக்கம், உணவுக்காக சிலர் வரிசையில், இராணுவ வாகனங்களில் தொற்றி விரைந்து செல்பவர்கள், ஆயுதங்களின் ஆயத்தங்கள், இராணுவ முகாம் கலகலப்பாக இருந்தது. ஒரு ஓரத்தில் சாப்பாட்டுத் தட்டுடன் அமர்ந்திருந்த நந்தா, சட்டைப் பையைத் துழைத்து 'பர்சை' எடுத்துத் திறந்தான்...

சுமணா புன் சிரிப்புடன்...

'என்ன பயமாய் இருக்கா?' அருகில் இருந்தவன் கேட்டான்.

புன்னகை ஒன்றை பதிலாக்கினான் நந்தா. 'இந்த யுத்தத்தில் நாம் வெற்றிபெறுவோமா...?' மீண்டும் அவன்.

அவனது கேள்வி வித்தியாசமாக இருந்தது. 'முடியாது அப்ப எதற்காக நாம் இந்த யுத்தத்தில்' நந்தாவின் சீருடையைப் பிடித்து உலுக்கியவன் சினம் கொண்டவன் போல் காணப்பட்டான்.

சிலர் ஓடிவந்து அவனைப்பிடிக்க நந்தா நழுவிக்கொண்டான்.

தொலைவில் எங்கோ துப்பாக்கிவேட்டு கேட்டு அடங்கியது. தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலைசெய்து கொண்டான் நந்தாவுடன் கதைத்துக்கொண்டிருந்த அந்த இராணுவச்சிப்பாய். அவசர அப்புறப்படுத்தல் எதுவும் நடக்காததுபோல மீண்டும் இயல்பு நிலை. களம்நோக்கி நகர்ந்தனர்.

வடபகுதியின் அடர்ந்த காடு ஒன்றில் நந்தாவின் குழு நிலையெடுத்தது. பல மணிநேரக் காத்திருப்பின் பின்பு விடியலின் முற்பகுதி. புற்களின் நுனியில் பனித்துளியின் ஈரம். நந்தாவின் நினைவுகள் தனது கிராமத்தை நோக்கி...

அமைதியான ஆறு, சுமணா, அந்தக் கடைசி அரவணைப்பு, மூச்சுப் பனியில் புகையைக் கிளப்ப நந்தாவின் கனவு கலைந்தது. திடீரென எதிர்ப்புறத்தில் இருந்து எதிர்பாராத தாக்குதல். நிஜத்துக்கு வந்தான்.

சரமாரியாக இருபக்கத்திலும் யுத்தம். எல்லா நிலைகளும் குழம்பி குளறுபடியாகின. தாக்குதலுக்கு உதவியாக மேலே விமானங்கள் பறந்துகொண்டிருந்தன.

எதிர்த்தரப்பிற்கு ஈடுகொள்ள முடியாது நந்தா தரப்பில் பலர் மடிந்துகொண்டிருந்தனர். திடீரென நந்தாவின் கால்களுக்குள் ஏதோ ஒன்று நுழைந்து வெளியேறியது. கைகள் தன்னிச்சையாக காலைத்தடவ இரத்தம் நனைந்தது. நந்தா மயக்கமுற்றான்.

தினவெடுத்த தோள்கள். புன்சிரிப்புகள். புகைபரப்பும் அந்த வெண்பனி காலத்தில் புரவிகளில் வரும் ராஜகுமாரர்கள் போல புலிவீரர்கள்...

நந்தாவின் மயக்கம் கலைந்தது. அவர்களது பாசறையில் நந்தா இறக்கப்பட்டான். அவனது சக தோழர்கள் பலர் அங்கிருப்பதை அவன் கண்டான்.

'உனது பெயர்?'

'நந்தா'

'இடம், வயது?'

'...'

'வேலைக்குச் சேர்ந்து எத்தனைகாலம்?'

'...'

தடையின்றி நந்தாவின் தாய்மொழியில் விசாரணை செய்தவன் உடனடியாக அவனை சந்திரசிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பிவைத்தான்.

'என்ன முயற்சி செய்தும் பலனில்லை' வரிப்புலி உடையில் இருந்தவன் மற்றவனிடம் கூறினான்.

'காலை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை, எதுக்கும் பொறுப்பாளரிடம் ஒருமுறை கேட்டுவிட்டு...' அவசரமாக ஓடியவன் நிதானமாகத் திரும்பிவந்தான்.

'காலை எடுத்துவிடு'

மயக்கம் தெளிந்த நந்தாவின் முன் அந்தப் பயிற்சி முகாமின் பொறுப்பாளர் நின்றுகொண்டிருந்தார். 'எவ்வளவு முயற்சி செய்தும் முடியவில்லை' அவனது தலையைத் தடவியபடி கூறினார். அந்த அரவணைப்பில் பூஞ்சிநோனா ஒருமுறை அவன் மனக்கண்முன் வந்துபோனாள். கால் பயங்கரமாக வலித்தது. நந்தா முனகினான்.

காலம் இரண்டு வருடங்களைக் கடந்திருந்தது. நந்தா தலைமையில் அன்று உண்ணாவிரதம் ஆரம்பிக்க யுத்தக் கைதிகள் தயாராகி இருந்தனர். காரணத்தை அறிய முகாம் பொறுப்பாளர் வந்தார்.

(தொடர்ச்சி 28-ம் பக்கம்)

யோ. பீற்றர் - ஜேர்மனி

# பொருளாதார நெருக்கடியும் சமாதானப் பேச்சுக்கான குரலும்

கொழும்பிலிருந்து **ரி.தேவராஜ்**

சிறீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக எழுந்துள்ள முட்டுக்கட்டையைப் போக்குமுகமாக புரிந்துணர்வு இணக்கப்பாட்டு யோசனைகளை (MEMORANDUM OF UNDERSTANDING) சிறீலங்கா அரசின் முன் சமர்ப்பித்து நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் பேச்சு வார்த்தை நடத்திவிட்டுச் சென்றுள்ளார். சிறீலங்கா அரசுடன் அவர் நடத்திய பேச்சுக்கள் குறித்து விபரங்கள் எதுவும் வெளிவரவில்லையாயினும், திருப்பங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது. சமாதானத் தூதுவரின் புரிந்துணர்வு யோசனைகளாக

1. **தமிழ் பகுதிகள் மீதான அனைத்துப் பொருளாதாரத் தடைகளையும் அரசு முதலில் நீக்க வேண்டும்.**
2. **அதற்குப் பதிலாகப் புலிகள் வடக்குக் கிழக்குக்கு வெளியே சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தங்களது தாக்குதலை நிறுத்த வேண்டும்.**
3. **இவ்விரு நிபந்தனைகளையும் இரு தரப்பினரும் எவ்வாறு நிறைவேற்றுகின்றனர் என்பதைக் கண்காணிக்க இருதரப்பும் ஏற்றுக் கொள்ளும் சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்தல்.**

இப் புரிந்துணர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் முன்னோடியாகச் செயற்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் தமது பண்டிகைக் கால ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த காலகட்டத்திலும் சரி, தற்போது போர் நிறுத்த கால நீடிப்பிலும் சரி தெற்கில் எவ்விதத் தாக்குதல்ளையும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போதைய நிலையில் சிறீலங்கா அரசு தனது போக்கைச் சிறிது தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவேதான் சிறீலங்கா அரசுடனான பேச்சுக்கள் சற்று முன்னேற்றகரமாக இருந்ததென நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது. உண்மையில் இந்த முன்னேற்றம் என்பது இலங்கை அரசின் மன மாற்றத்தின் பிரதிபலிப்பல்ல.

பாரிய பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியிருப்பதால் சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைத் தளர்த்த வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் விலைவாசி உயர்வு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றின் அரசாங்கத்திற்கு எதிரான பரப்புரையும் தொடர் ஆர்ப்பாட்டங்களும் அரசுக்கு ஒரு இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் எதிராக அரசு பிரசாரப் போரில் ஈடுபட்ட போதும் பொருளாதாரச் சுமைக்குள் அமிழ்ந்து கிடக்கும் மக்களைச் சமாதானப் படுத்துவதற்கு இது போதுமானதாக அமையவில்லை. இந் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாத யாத்திரை மக்கள் எழுச்சியாகத் தெற்கில் எழுந்து விடும் என அரசு அஞ்சுகின்றது. ஏற்கனவே வடக்குக் கிழக்கில் அரசின் இராணுவ இரும்புக் கவசத்தையும் மீறி பொங்குதமிழ் நிகழ்வைப் பல்கலைக்கழகச் சமுகம் பொது மக்களின் ஆதரவுடன் நடத்தி வருகின்றது. இராணுவக் கவச மறைப்பையும் மீறி பீறிட்டெழும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலினாலேயே நடைபெறுவதாக அரசு குற்றம் சுமத்தி வருகின்றது. இதேநேரம் மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற கொலைச் சம்பவங்களுக்காக பகிரங்கமாக மன்னிப்புக் கோரிப் பிரசுரமொன்றையும் படையினர் மட்டக்களப்பில் வெளியிட்டுள்ளனர்.



சந்திரிகா

அந்தப் பிரசுரத்தில், தமிழ் மக்களுக்கான உண்மையான அரசியல் தீர்வினை அரசினால் மாத்திரமே வழங்க முடியும் என்பது சகல தமிழர்களுக்கும் தெளிவாகியுள்ளது. போரில் தோற்று வரும் பயங்கரவாதிகள் விரக்தியின் விழிம்புக்குச் சென்றுள்ளனர். மக்களும் படையினரும் நெருங்குவதை புலிகள் விரும்பாதனாலேயே படையினருக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனவே படையினராகிய நாம் உண்மையைச் சொல்வது எமது கடமை. கடந்த 20 வருடங்களாக சண்டை நடைபெறும் பிரதேசத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனர். இவையாவற்றுக்கும் இராணுவமே காரணமென விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். இது புதிதல்ல. கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது உண்மைதான். ஆனால் புலிகள் கூறுவதைப் போன்று இன அழிப்பு நோக்கில் இவை இடம் பெறவில்லை. 1990 யூன் மாதத்தில் ஒரு நாள் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் விசேட அதிரடிப்படையினரால் பெரிய கல்லாறு கடற்கரையில் வைத்துக் கொல்லப்பட்டனர். படையினர் இவர்களைத் திட்டமிட்டுக் கொல்லவில்லை. இப்பகுதிகளில் புலிகள் மறைந்துள்ளார்கள் எனக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற போதே தவறுதலாக இச்சம்பவம் நடைபெற்றது. இதனாலேயே கவலைக்குரிய இக்கொலைகள் நடந்தன. இவற்றைப் பெரிது படுத்தும் புலிகள் பிள்ளையாரடியில் ஏன் பயணிகள் பஸ்சைத் தாக்கினார்கள். தமிழர் நலன் பற்றி பேச அவர்களுக்கு யோக்கியதை இல்லை. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில உயரதிகாரிகளின் கட்டளை காரணமாகவே மக்களைக் கொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வெசாக் கொண்டாட்டங்களின் போது மட்டக்களப்பில் இராணுவத்தினர் மக்களைச் சுட்டுக் கொன்றனர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த புலிகளுக்கு இது வாய்ப்பாக அமைந்தது. வெசாக் படுகொலையை படையினர் தாமாகத் திட்டமிட்டுச் செய்யவில்லை. பௌத்தர்கள் தமது புனித தினத்தில் கொலை செய்ய மாட்டார்கள். அன்று குடிபோதையிலிருந்த ஒரு அதிகாரியின் பொறுப்பற்ற கட்டளைக்கு இணங்கவே மக்களை இராணுவத்தினர் சுடவேண்டி ஏற்பட்டது. இவ்வாறான சம்பவங்களுக்கு மன்னிப்புக் கோருகின்றோம். எனக் அதில் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு ஒரே நேரத்தில் வடக்குக் கிழக்கிலும் எதிர்ப்பலைக்குக்கு முகம் கொடுக்க வேண்டிய அரசு தெற்கில் பொருளாதார நெருக்கடியால் உருவாகுமென எதிர்பார்க்கும் எதிர்ப்பலைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவேதான், எரிக் சொல்ஹெய்மின் வருகையானது சமாதானப் பேச்சு வார்த்தை குறித்து புதிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. உண்மையில் கூறப்போனால் சிறீலங்கா அரசு எதிர்கொள்ளப்போகும் பாரிய பொருளாதார நெருக்கடியும் வடக்குக் கிழக்கு மற்றும் தென் பகுதியில் இடம்பெறும் அரசுக்கு எதிரான உணர்வலைகளும் சிறீலங்கா அரசை பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன என்று கூறுவதே பொருந்தும். எனினும் சமாதானப் பேச்சு வார்த்தை குறித்து சடுதியான திருப்பம் ஏற்படுமென்று உடனடியாக எதிர்பார்ப்பது முடியாததாகும். இந்தப் பேச்சுவார்த்தையை சிறீலங்கா அரசு ஒரு போர் நிறுத்த நல்லெண்ண சூழலுடன் நடத்த முன்வருமென்று எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் அரசு, விடுதலைப் புலிகளைப் பிரிட்டன் தடை செய்வது பற்றிய செய்திக்காகக் காத்திருக்கின்றது. பிரிட்டன் புலிகளைத் தடைசெய்யுமாயின் புலிகளுக்கு எதிரான தடை குறித்து சர்வதேச ரீதியில் வெற்றிகரமாக பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் மற்றைய நாடுகளைத் தடை செய்யுமாறு கோரும் தனது நடவடிக்கையை தீவிரப்படுத்த அது வாய்ப்பாக அமையும் என்றே அரசு மனக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் பொருளாதார நெருக்கடியின் அழுத்தம் சற்று கீழிறங்கிவர வைத்துள்ளது.

இவ்வேளையில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமூக நிலையை ஏற்படுத்த யாழ். ஆயர் சிறீலங்கா அரசுக்கு ஐந்து யோசனைகளை முன் வைத்துக் கடிதம் எழுதியுள்ளார்.

1. **கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் உணவு மருந்து ஆகிய அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதித்தல்.**
2. **வன்னிக்கு அனுப்பப்படும் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் என்பனவற்றின் கோட்டாவை அதிகரித்தல்.**
3. **வன்னிக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதித்தல்.**
4. **வன்னி மக்கள் இலகுவாக வெளியிடங்களுக்குப் பயணம் மேற்கொள்ளத் தக்க வகையில் உயிலங்குளம் ஊடான பாதையைத் திறத்தல்.**
5. **இராணுவ நடவடிக்கையின் தீவிரத்தை மட்டுப்படுத்தி சில பிரதேசங்களில் மாத்திரம் அதைத் தொடர்வது.**

வன்னிக்கு அடிக்கடி விஜயம் செய்பவன் என்ற வகையிலும் அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்தவன் என்ற முறையிலும் இந்த யோசனைகளை முன்வைக்கின்றேன் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். யாழ். ஆயரின் யோசனைகளை அரசு கவனத்தில் எடுக்குமா அல்லது ஆயரின் யோசனைகளைப் புலிகளின் யோசனைகள் என்று தட்டிக்கழிக்குமா என்பது விரைவில் தெரியவரும். மொத்தத்தில் எரிக் சொல்ஹெய்மின் வருகை சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த ஒளிக்கீற்றைத் தோற்றுவித்துள்ளது. இந்த ஒளிக்கீற்றை சிறீலங்கா அரசின் யுத்த முனைப்புக் காரிருள் கௌவாமல் இருந்தால் சரி. ஆனால், போர் தொடரும் நிலையிலேயே சமாதானப் பேச்சு வார்த்தையும் நடக்கும் என்ற அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்பில்லை.

*வெசாக் படுகொலையை படையினர் தாமாகத் திட்டமிட்டுச் செய்யவில்லை. பௌத்தர்கள் தமது புனித தினத்தில் கொலை செய்ய மாட்டார்கள். அன்று குடிபோதையிலிருந்த ஒரு அதிகாரியின் பொறுப்பற்ற கட்டளைக்கு இணங்கவே மக்களை இராணுவத்தினர் சுடவேண்டி ஏற்பட்டதாம்.*

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM

முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.
OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tel: 020 8423 9666/ 020 8864 3636

ஈழமுரசு

Eelamurasu Weekly

# சிறுவர் முற்றம்

## உறுப்பினர் படிவம்

ஈழமுரசு சிறுவர்முற்றம் பகுதியில் உங்கள் பிள்ளைகளை இணைத்துக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். கீழே உள்ள படிவத்தினை பூரணப்படுத்தி உங்கள் பிள்ளைகளின் ஆக்கத்துடன், அவர்களது நிழற்படத்தையும் இணைத்து ஈழமுரசு முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

முழுப்பெயர்:- ..............................................................

முகவரி:- ..............................................................

..............................................................

பிறந்த நாள்:- ..............................................................

கல்வி கற்கும்

தமிழ்ப்பாடசாலை:- ..............................................................

பொழுது போக்கு:- ..............................................................

இங்கே உங்கள் பிள்ளையின் நிழற்படத்தை ஒட்டுங்கள்

நாள்:........................ கையொப்பம் பெற்றோர் அல்லது பிள்ளைகள்

..............................................................

செயலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

உறுப்பினர். எண்:- ................................

EELAMURASU 22, Rue Perdonnet 75010 PARIS FRANCE

ஈழமுரசு சந்தா

சந்தா தொடர்புகளுக்கு:

**EELAMURASU S.A.R.L,**
**22 Rue Perdonnet,**
**75010 Paris, France.**
**Tel:00 33 1 40 37 63 63**
**Fax:00 33 1 40 37 64 64**

## விண்ணப்பப் படிவம்

பிரித்தானியாவுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

12 மாதம் → £ 160 ☐

06 மாதம் → £ 32 ☐

பெயர்: ..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

தொலைபேசி எண்: ..............................................................




உரிமையாளர் - சேகர்

பட்டுப்புடவைகள்,
ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள்,
சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள்,
எவர்சில்வர் பாத்திரங்கள்,
மளிகைப் பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
பதப்படுத்திய மீன் வகைகள்...
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**Sikaram**

**சிகரம்** Schoenegg Str-15
8004.Z.H

(இலங்கை) கொழும்பு வவுனியா - திருகோணமலை - மட்டக்களப்பு - மன்னார் கனடா - சகல ஐரோப்பிய நாடுகள் - சிங்கப்பூர் தாய்லாந்து - ஹொங்கொங்- அவுஸ்திரேலியா - இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் 1மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்று எமது பணமாற்றுச் சேவையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களிற்கு: T.P: 01 2912862
01 2913951
Rest: 01 2422718
H.P: 079-3008759
079-6225077
Fax: 01 2913534

**Singapore Conduct N°:** 0065 - 96171175 Tel&Fax: 0065 7430644

எங்களிற்கு வேறு கிளை ஸ்தாபனங்கள் கிடையாது.

(13ம் பக்கத் தொடர்ச்சி)

இனங்களும், நசுக்கப்பட்ட மக்களும் அரச அடக்குமுறை அநீதிகளுக்கு எதிராக, இறுதிக்கட்டமாக ஆயுதமேந்திப் போராடி வருவதும் ஆங்கிலேயர் அறிந்ததே. அப்படியான பரந்த அறிவையும், ஆழமான அனுபவத்தையும் கொண்ட ஆங்கில நாடு ஒடுக்கப்படும் மனித வர்க்கத்தின் அவலங்களை உதாசீனம் செய்து, அவ் வர்க்கத்தினரின் ஆயுதப் போராட்டங்களை பயங்கர வாதமாக உருவகப்படுத்தியிருப்பது எமக்கு கவலையை தருகிறது. இச் சட்டமானது அடக்கு முறை அரசுகளின் அநீதிகளுக்கு ஒரு கவசமாக, நியாயப்பாடாக அமைகிறது. அரச அந்தஸ்தைப் பெறாத மக்கள் சமூகத்தினர் தமது இருப்பிற்கும் சுய பாதுகாப்பிற்குமாக வன்முறை வடிவில் போராட்டங்கள் நடத்துவதற்கு இச்சட்டம் ஆப்பும் வைக்கிறது. சட்டரீதியானதும், தார்மீகத் தகைமையுடையதுமாக எமது அரசியல் இலட்சியம் அமையப் பெற்ற போதும் இந்தப் பயங்கரவாதச் சட்டத்தின் அடிப்படைகளின் கீழ் எமது இயக்கமும் பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யப்படும் வாய்ப்பும் உண்டு. இதன் காரணமாகவே கதிர்காமர் அபார நம்பிக்கையுடன் இருக்கிறார்.

## எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டால் சிறீலங்கா அரசின் விட்டுக்கொடாத கடும்போக்கிற்கும் இராணுவவாதக் கொள்கைக்கும் ஊக்கம் அளிப்பதாகவே அமையும்.

எமது இயக்கத்தை தடைசெய்ய முடிவெடுக்கும் சிறப்புரிமை பிரித்தானிய அரசுடையது இந்த நாட்டின் சட்டத்திற்கு நாம் சவால் விட முடியாது. இலங்கையில் சமாதானமும் இன ஒத்திசைவும் நிலவ வேண்டுமாயின் எமது விடுதலை அமைப்பை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்க வேண்டாமென நாம் பிரித்தானிய அரசிடம் வேண்டுகோளை விடுக்கலாம். ஒரு முக்கியமான ஐரோப்பிய வல்லரசு இப்போதைய சூழ்நிலையில் எமது இயக்கம் மீது தடையை விதிக்குமானால் நோர்வேயின் நடுநிலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் கடுமையாக பாதிக்கப்படுமென நாம் பிரித்தானிய உயர் அதிகாரபீடத்திற்கு எடுத்துரைத்து வருகிறோம். நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக பக்க பலமாக நிற்கும் பிரித்தானியா இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சு மூலம் பிரச்சினையை தீர்க்க ஊக்குவிக்க வேண்டும். ஆனால் அதேவேளை, ஒருசாரார் மீது அபாண்டமான பழியைப் போட்டு அவர்கள் மீது பயங்கரவாத குற்றத்தை பிரித்தானிய அரசு சுமத்துமானால், அது தமிழரின் இனப்பிரச்சினையில் பாரபட்சமாக நிகழ்த்தப்பட்ட ஒருதலையீடாகவே கருத இடமுண்டு. அத்தோடு நோர்வேயின் நடுநிலையில் எமக்குள்ள நம்பிக்கையையும் அது தகர்த்துவிடும். பிரித்தானியா எமது இயக்கம் மீது தடையை விதிக்குமானால் அது எமது மக்களின் நலன்களுக்கும் அபிலாசைகளுக்கும் பாதகமாக அமைவதோடு, தமிழரின் பேரம்பேசும் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் சிறுமைப் படுத்திவிடும். அது மட்டுமன்றி எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டால் சிறீலங்கா அரசின் விட்டுக்கொடாத கடும்போக்கிற்கும் இராணுவவாதக் கொள்கைக்கும் ஊக்கம் அளிப்பதாகவே அமையும். இதனையெல்லாம் நாம் பிரித்தானிய உயர் அதிகாரப்பீடத்திற்கு தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிறோம்.

இது ஒருபுறமிருக்க, இங்கிலாந்திலும், இலங்கையிலும், உலகடங்கிலும் தமிழ் மக்கள் இந்த உத்தேசத் தடைக்கு எதிராக போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராடி வரும் உண்மையான மக்கள் இயக்கம் என்பதை வலியுறுத்தி, எமது இயக்கத்தை தடைசெய்யக் கூடாதென பிரித்தானிய அரசிடம் கோரிக்கைகளை விடுத்து வருகிறார்கள்.

**தமிழ் கார்டியன்:** விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய அரசு தடை விதித்தால் பேச்சுக்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்றும், மாறாக பேச்சுக்கள் துரித வேகத்தில் முன்னேறிச்செல்லும் என்றும் திரு. கதிர்காமர் சமீபத்தில் கூறியிருக்கிறார். ஏனென்றால் வன்முறைப் பாதையைத் துறந்து சனநாயக நீரோட்டத்தில் இறங்கியவர்களின் நிலைப்பாட்டை இத் தடை பலப்படுத்தும் என்று தெரிவித்திருக்கிறார். இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**திரு.பாலசிங்கம்:** விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாதப் பூதமாக உருவகித்து, பயங்கரவாதச் சிலுவையில் அவர்களை அறைந்துவிடவேண்டுமென வெறிபிடித்து அலைகிறார் கதிர்காமர். அவருக்கு சமாதானத்திலோ இன ஒருமைப்பாட்டிலோ எவ்வித அக்கறையுமில்லை. தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை பயங்கரவாதமாக இழிவுபடுத்தி சிங்கள—பௌத்த பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்துவது தான் கதிர்காமரின் ஒரே நோக்கம். வன்முறையைத் துறந்து சனநாயக நீரோட்டத்தில் இறங்கியுள்ள பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் புலிகள் தடைசெய்யப்படுவதை எதிர்த்து ராஜதந்திர வட்டாரங்களில் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையில் நிலவும் அரசியல் யதார்த்த நிலைமை பற்றி கதிர்காமருக்கு அறவே புரியாது. அதோடு, தமிழ்த் தேசிய இனத்தின் உணர்வுகள், அபிலாசைகள், மனநிலைபற்றியும் அவருக்கு எதுவுமே தெரியாது.

**தமிழ் கார்டியன்:** பிரித்தானிய அரசு புலிகள் இயக்கத்தை தடை செய்யவிருப்பது குறித்து நோர்வேயின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி குறிப்பிடுவீர்களா? பிரித்தானியாவின் நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்பதால், நோர்வே அரசு உங்கள் சார்பில் ஆங்கில அரசு மீது செல்வாக்கைப் பிரயோகித்து இத் தடையை நிறுத்த முயற்சி செய்யுமா?

**திரு.பாலசிங்கம்:** இந்த விவகாரத்தில் நடுநிலமை வகிக்கவே நோர்வே அரசு விரும்புகிறது. பிரித்தானிய அரசாங்கத்தின் எந்த முடிவிலும் தாம் தலையிடப்போவதில்லை என நோர்வே அரச பிரதிநிதிகள் என்னிடம் கூறினார்கள். ஆயினும் தடை பற்றி எமது கருத்துக்களையும் கவலைகளையும் பிரித்தானிய அரசுக்கு தெரிவிப்பதாகச் சொன்னார்கள். பிரித்தானிய அரசு புலிகள் மீது தடைவிதித்தால் நிச்சயமாக சமாதான முயற்சிகள் முறிவடையுமென நான் நோர்வேயின் விசேட தூதுவர் திருஎரிக் சொல்ஹைமிடம் எடுத்துச் சொன்னேன். இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் அழுத்தத்தின் கீழ் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக நான் லண்டனில் சுதந்திரமாகச் செயற்படுவது கடினமாக இருக்கும். எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்படும் கணத்திலிருந்து நான் மக்களின் பிரதிநிதி என்ற தகமையை இழந்து ஒரு பயங்கரவாத தலைவராக மாற்றப்படுவேன். அத்தோடு எனது அரசியற் சுதந்திரங்களையும் இந்தச் சட்டம் நசுக்க முற்படும்.

எமது மக்களின் விடுதலைக்காக நான் குரல் எழுப்பினாலும் இச் சட்டத்தின் படி அது பயங்கரவாதப் பிரச்சாரமாக அமையும். சட்டபூர்வமான ஒரு அரசுக்கு எதிராகச் செய்யப்படும் சதியாகவும் கருதப்படும். இப்படியான பயங்கரவாத சட்டத்தின் கோரப்பிடியிலிருந்து நான் செயற்படுவது கடினம். எனவே நான் தலைமறைவாக நேரிடலாம், அல்லது இந் நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படலாமென நான் நோர்வே பிரதிநிதிகளுக்கு தெரிவித்திருக்கிறேன்.

பிரிட்டன் எம் மீது தடை விதித்தால் அது சமாதான முயற்சியை கடுமையாகப் பாதிக்கும் என்பதால் சிங்கள அரசு, பிரித்தானியா மீது அழுத்தம் போட்டு வருவது அபத்தமான செயல். நோர்வே தூதுவர் திரு. சொல்ஹைம் இதனை சிறிலங்கா அரசிடம் குறிப்பாக திரு.கதிர்காமரிடம் எடுத்துக்கூறுவது அவசியமென நான் கருதுகின்றேன். அது மட்டுமன்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னராக இலங்கை அரசும் எம்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது அவசியம் என்றும் சிங்கள ஆட்சியாளருக்கும் நோர்வே பிரதிநிதிகள் ஊடாக நாம் தெரிவித்திருக்கிறோம்.

தமிழரின் இனப் பிரச்சனையின் மூலவேர்கள் அந்நிய காலனித்துவ வரலாற்றிலேயே ஆழமாகப் பதிந்து கிடக்கின்றன. தமிழினம் தனது இறையாண்மையை இழக்க நேரிட்டதற்கு ஐரோப்பிய காலனித்துவ அரசுகளின் ஊடுருவல்களே காரணம். எனவே தமிழ் மக்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக் கொடுக்கும் தார்மீகக் கடப்பாடு பிரிட்டனுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் உண்டு. தமிழர்களுக்கு எவ்விதத்திலும் பாதகமிழைக்காமல் பார்த்துக்கொள்ளவும் இந் நாடுகளுக்கு கடமையுண்டு.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 – 02 – 1928



உதிர்வு: 09 – 02 – 1999

**அமரர் இராமநாதர் செல்வரத்தினம்**

(8ம் வட்டாரம், புங்குடுதீவு)

திதி: 16.02.2001

**என் ஆருயிர் தந்தையே**
**அன்புமிகு துணைவனாய்**
**பாசமிகு தந்தையாய்**
**நேசமிகு மாமனாய்**
**நெஞ்சமிகு பேரனாய்**
**நல்லதொரு சம்பந்தியாய்**
**எல்லோருக்கும் பண்பாளனாய்**
**பூவுலகில் வாழ்ந்தவரே!**
**உங்கள் ஆத்மா சாந்தி பெற**
**இறைவனை பிராத்திக்கிறோம்.**

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:
*கண்ணன் (மகன் -சுவிஸ்) 0041 81 651 60 46*




# NÆRKØB TRAVELS Ltd
# MONEY & TRANSFER



- Colombo
- Madras
- Singepor
- Canada
- London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ **NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark**
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42



| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூர்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

## உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

# புத்திசிகாமணி? பதில்கள்

## பாலஸ்தீனப் பிரச்சினைக்கு விடிவே இல்லையா?

*கி.அகிலன் - சுக், சுவிஸ்*

★ காதலர் தினத்தன்று சிறீலங்காப்படையினரை சிங்கள யுவதிகள் ஒவ்வொருவரும் காதலிக்க வேண்டுமென சிறீலங்கா பிரதமர் ரட்ணசிறீ விக்கிரம நாயக்க கூறியுள்ளாரே. எதற்காக?

❢ சிறீலங்கா அரசின் படைக்கு ஆட்சேர்க்கும் முயற்சி தொடர்ந்து வெற்றியளிக்காத நிலையில், சிங்களப் பெண்களை விளம்பரப் பண்டமாக்கி தனது ஆட்சேர்ப்பு முயற்சியை தற்போது தொடர்கிறது அரசு. சிறீலங்காவின் ஊடகங்கள் அனைத்திலும் இப்போது சிங்கள இளம் பெண்கள்தான் இராணுவ ஆட்சேர்ப்புக்கான கருவியாகியுள்ளனர்.

*க.தங்கராணி - ரொறன்டோ, கனடா*

★ ஜனாதிபதி சந்திரிகா, குமாரதுங்கா தனது சுதந்திர தின உரையில் இனப்பிரச்சினைக்கு ஒளிச்சுடர் தெரிவதாகக் கூறியுள்ளாரே. பிரச்சினையைத் தீர்க்க முன்வருவாரா?

❢ அதே சுதந்திரதின உரையில் அவருடைய அதே நாக்கு புலிகளின் அர்த்தமில்லாத போர் நிறுத்தத்திற்கு அரசு தயாரில்லை எனவும், வடகிழக்கில் அல்லல்படும் தமிழர்களை தனது படையினர் மீட்பார்கள் எனவும் கூறியுள்ளாரே! அப்படியென்றால் போரின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு கட்டிவிடலாம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கனவு காண்கிறார். அந்தநாள் அவருக்கு ஒளிச்சுடராகத் தெரிகிறதுபோலும்.

*க.கலையழகன் - கேளின், ஜேர்மனி*

★ பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து பா.ம.கட்சி விலகியுள்ளதே. இனி எந்தக் கட்சியுடன் சேரப்போகிறது?

❢ சேருதல் - விலகுதல் என்பதெல்லாம் தமிழக அரசியலின் பரம்பரைச் சொத்து. விலகுதல் அறிவிப்பு வெளியானவுடனேயே சேருதலுக்கான பாசக்கரத்தினை அ.தி.மு.க. நீட்டியுள்ளதே.

*ச. சர்வேஸ் - ஒஸ்லோ, நோர்வே.*

★ தற்போது தமிழ் இலக்கியப் பரப்பில் தந்தை பெரியார் அதிகம் பேசப்படுகிறாரே. என்ன காரணம்?

❢ மாநிட விடுதலைக்காய் வியாபகமாகச் சிந்தித்த ஒரு மிகப்பெரும் தமிழகத்தின் சிந்தனையாளனை தமிழ் இலக்கிய உலகம் காலம் கடந்தாயினும் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளது. அடுத்து தற்போதைய தமிழ் இலக்கியப் பரப்பில் முக்கிய பேசுபொருளாகிவிட்ட 'தலித்' என்பதன் ஊற்றாகவும் முக்கியமாக சாதியத்திற்கெதிரான நெருப்பாகவும் மிளிர்ந்தவர் பெரியார்.

*சி. அஜந்தா - வெம்பிளி, பிரித்தானியா.*

★ ஈழமுரசில் நீண்ட நாட்களாக 'பேம்பி'யை காணவில்லையே. எங்கே போய்விட்டார்?

❢ உங்கள் கேள்வியை அவரிடமே தேடிப்பிடித்துக் காண்டினேன். ஒய்வில்லாத வேலை, அடுத்தவாரம் உங்கள் ஆவலை நிறைவேற்றுவதாகக் கூறியுள்ளார்.

*இ.லங்கன் - ரூட்டிங், லண்டன்.*

★ புலம் பெயர்ந்த நாடுகளில் நம்மவர்கள் தமது பிள்ளைகளுக்கு பரதநாட்டியம் பயிற்றுவிப்பது ஒரு வழமையாகி விட்டதே. இதனால் என்ன பயன்?

❢ ஒரு கலை வடிவம் பற்றி தெரிந்து கொள்வதும் அதனைப் பயில்வதென்பதும் நல்லதுதானே. அதனைச் சமூகத் தேவைக்காக பயன்படுத்தும்போது அது மேலும் சிறப்புறும். ஆனால் வருடக்கணக்காக பயி-ன்ற ஒரு கலைக்கு அரங்கேற்றம் என்ற நிகழ்வுடன் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள் பலர். இதுதான் வேதனைக்குரியது.

*இ.றங்கன் - செங்காளான், சுவிஸ்.*

★ பாலஸ்தீனப் பிரச்சினைக்கு விடிவே இல்லையா?

❢ 'இன்ரிபாடா' என்று கூறிக்கொண்டு இன்னும் கவணில் கல் ஏந்தி எதிரியைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள் பாலஸ்தீனர்கள். நவீன ஆயுதங்களுடன் வலம் வரும் எதிரியை எதிர்கொள்ளக்கூடிய மக்கள் படையை பாலஸ்தீனத் தலைமைகள் இதுவரை கட்டி எழுப்ப முடியவில்லை. ஆனாலும் நியாயம் இவர்கள் பக்கம் இருப்பதால் விடிவு கிட்டும் என்று எதிர்பார்ப்போம்.

**கேள்விகளை அனுப்ப விரும்புபவர்கள்**

புத்திசிகாமணி பதில்கள்

**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris - France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**

**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**

# TWA-ஐ வாங்க புதிய நிறுவனம் தயாராகிறது

அமெரிக்காவின் மிகப்பெரும் விமானசேவை நிறுவனங்களில் ஒன்றான TWA ஐ வாங்கிக்கொள்ள விமானத்துறை ஆய்வாளர்கள், முதலீட்டாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய புதிய நிறுவனம் ஒன்று முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

TWA நிறுவனம் நட்டத்தில் இயங்கிவரும் நிலையில் அதனை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கிக்கொள்ள ஜெட் நிறுவனம் எனும் அமைப்பு நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. TWA நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளும் அதேவேளை நிறுவனத்தை விரிவுபடுத்தவும் வசதிகளை நவீனமயப்படுத்தவும் தாம் தயாராக இருப்பதாயும் தனித்து இயங்கும் மிகப்பெரும் நிறுவனமாக கட்டியெழுப்ப விரும்புவதாயும் ஜெட் நிறுவனத்தின் பேச்சாளர் மிசேல் டஸ்மான் கூறியுள்ளார்.




TWA நிறுவனத்தை வாங்கிக் கொள்வதற்கு அமெரிக்கன் எயார் லைன்ஸ் ஆர்வமாக இருப்பதாக கடந்தவாரம் தெரிவித்திருந்தது. கடந்த மாதம் அமெரிக்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் யூ.எஸ். எயார் வேய்ஸ் நிறுவனத்தின் பங்குகளையும் வாங்க முயற்சி மேற்கொண்டது. இதன்மூலம் அமெரிக்காவில் புதியதொரு பாரிய விமானசேவை நிறுவனம் ஒன்றை நிறுவ அமெரிக்கன் எயார் லைன்ஸ் தயாராகியது. TWA நிறுவனத்தின் 190 விமானங்களையும் St.Louis தளத்தையும் வாங்க 500 பில்லியனை தான் செலுத்த தயாராக உள்ளதாக கூறியிருந்தது. இந்த நேரத்தில்தான் அமெரிக்காவின் விமான சேவை ஆய்வாளர்களைக் கொண்டு புதிய ஜெட் நிறுவனம் அமைக்கப்பட்டு, மூடப்பட இரு-ந்த TWA நிறுவனத்தை மீண்டும் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

TWA நிறுவனம் ஜனவரி 10ம் திகதி 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இயங்க முடியாது இருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றத்தில் தெரிவித்தது.

## நாணயமாற்று விகிதம்

| . | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 2.11 | 0.69 | 7.09 | 1.66 |
| பிராங்பேட் | 0.47 | – | 0.32 | 3.35 | 0.78 |
| லண்டன் | 1.44 | 3.06 | – | 10.26 | 2.39 |
| பாரிஸ் | 0.14 | 0.29 | 0.09 | – | 0.23 |
| சூரிச் | 0.60 | 1.27 | 0.41 | 4.27 | – |
| பம்பாய் | 46.45 | 21.96 | 67.10 | 6.55 | 27.93 |
| கொழும்பு | 87.00 | 40.66 | 124.22 | 12.12 | 51.71 |

# மோட்டோரோலாவில் பாரிய ஆட்குறைப்பு

உலகின் இரண்டாவது கைத்தொலைபேசி தயாரிப்பு நிறுவனமான மோட்டோரோலா தனது தொழிற்சாலைகளில் இருந்து 4000 வேலையாட்களை குறைக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதற்கிடையே ஹார்வாட்டில் உள்ள தயாரிப்பு மையத்தை தாம் மூடிவிடப் போவதாயும் கடந்தவாரம் மோட்டோரோலாவின் இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதமும் இந்நிறுவனம் அயர்லாந்து, புளோரிடா போன்ற பகுதிகளில் இயங்கும் தனது தொழிற்சாலைகளில் இருந்து 2870 பேரை வேலை நீக்கம் செய்தது.

கடந்த சில மாதங்களாக மோட்டோரோலா தொலைபேசிகளுக்கும் அதன் ஏனைய தயாரிப்புக்களுக்குமான விற்பனையும் கேள்வியும் குறைந்ததால் நிதி நெருக்கடிகளை அந் நிறுவனம் சந்தித்துள்ளது. ஆனால் விற்பனை அதிகரித்துள்ளதாக கூறும் விநியோகத்தர்கள்'; ஏற்றுமதி கேள்விகள் 19 விகிதத்தால் குறைந்துள்ளதாயும் கூறியுள்ளனர். ஆட்குறைப்பு என்பது தலையிடியை தரும் ஒரு விடயம் எனக் கூறும் அதன் தலைவர் பிரெட் ஸ்லாபாக்';எமக்கு தற்போதைய தேவையாக அடிப்படைச் செலவுக்குறைப்பு உள்ளது. ஆகையால் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலையில் நிறுவனம் உள்ளது என்றுள்ளார்.

# சிறியகாருக்கு பெரிய கிராக்கி

மிக அண்மைக் காலத்தில் பாவனைக்கு வந்திருக்கும் இருவர் பயணிக்கக்கூடிய 'Smart' காரானது பாவனையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பாக பிரான்சில் இக் காரின் பாவனையானது 99ம் ஆண்டிலிருந்து 2000 க்கு 60.1 வீதத்தால் பெரும் அதிகரிப்பை எடுத்துள்ளது. அதைவிட ஏனைய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு மாற்றத்தையும் அட்டவணையூடாக நோக்கலாம்.

| நாடு | 2000ம் ஆண்டில் தொகை | 1999ம் ஆண்டில் தொகை | அதிகரித்த வீதம் |
|---|---|---|---|
| ஜேர்மனி | 47419 | 39770 | 19.2 |
| இத்தாலி | 25877 | 19100 | 35.5 |
| பிரான்ஸ் | 8085 | 5050 | 60.1 |
| சுவிஸ் | 6111 | 5100 | 19.8 |
| ஸ்பெயின் | 4632 | 3160 | 46.6 |
| பெல்ஜியம்/லக்சம்பேர்க் | 3279 | 2280 | 43.8 |
| நெதர்லாந்து | 3145 | 4100 | -23.3 |
| ஒஸ்திரியா | 3198 | 930 | 50.3 |
| பிரித்தானியா | 968 | ------ | |
| ஜப்பான் | 674 | ------ | |
| ஏனையவை | 525 | ------ | |

# கிழக்கில் திட்டமிட்டு இடம்பெறும் குடியேற்றம் முஸ்லீம் கிராமங்களாகும் தமிழ் கிராமங்கள்

(மட்டக்களப்பிலிருந்து எஸ். ஜெயானந்தமூர்த்தி)

வடக்குக் கிழக்கின் தாயகபூமியில் கடந்த அறுபதுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிங்களப் பேரினவாதிகளின் திட்டமிட்ட குடியேற்றங்களால், தமிழ்ப்பிரதேசங்கள் துண்டாடப்பட்டு வந்துள்ளன. இத் திட்டமிட்ட குடியேற்றங்கள் மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை ஆகிய பகுதிகளிலேயே அதிகம் இடம் பெற்றன. அதாவது தமிழ்ப்பிரதேசத்தைத் துண்டாடி அப்பகுதியின் நிலப்பரப்பைக் குறைப்பதும், தமிழ்ப்பகுதிகளில் சிங்கள இனத்தின் வீதத்தைக் கணிசமானளவு கொண்டிருப்பதுமே இதன் உள் நோக்கமாக இருந்தது. சிங்களப் பேரினவாதிகளின் இத் திட்டமிட்ட குடியேற்றங்களைத் தொடர்ந்து, தற்போது சந்தர்ப்பம் பார்த்து வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களும் திட்டமிட்ட குடியேற்றங்களை நடத்தி தமிழ் பகுதிகளைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

**90ம் ஆண்டுக்குப் பின் அப்பகுதியில் ஏற்பட்ட அச்சநிலையும், மைலந்தனைப் படுகொலையையும் அடுத்து இப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சொந்த இடங்களைவிட்டு வெளியேறி இன்று அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்களைச் செய்ய முற்படுவது எவ்வாறான நிலையை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் என்பதைச் சகல தரப்பினரும் சிந்திக்க வேண்டும்.**

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரை இரண்டாவது இனமாக முஸ்லிம்கள் உள்ளனர். அதிலும் மக்கள் தொகையில் கால்வாசி தொகையை மாத்திரமே முஸ்லிம்கள் கொண்டுள்ளனர். ஆனால் 94ம் ஆண்டிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைத்ததிலிருந்து, தமது அரசியல் செல்வாக்கை பல வழிகளிலும் அவர்கள் செலுத்தி வருகின்றனர். இதைவிட மூன்றாவது இனமாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள், ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் செல்லப்பிள்ளையாக இருந்து கொண்டு தமது காரியத்தைச் சாதித்தும் வந்துள்ளனர். இவர்களைத் தம்வசம் வைத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு அரசாங்கமும் இவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, செய்தும் வந்துள்ளன.

இரண்டாம் கட்ட ஈழப் போர் மட்டக்களப்பில் ஆரம்பமானது. இதையடுத்து தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலும் சிறு இனமோதல்கள் வெடித்தன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரச படைகள் முஸ்லிம் இளைஞர்களைத் தட்டிக் கொடுத்ததுடன் அவர்களை ஊர்காவல் படையில் இணைத்து தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டி விட்டன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அப்போதைய முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது பிரதேசங்களுக்கென ஒவ்வொரு பிரதேச சபைகளை உருவாக்கவும் அதன் அடியொற்றியதாக பிரதேச செயலகங்களை உருவாக்கி அதிகாரங்களை தம்வசப் படுத்திக் கொள்ளவும் திட்டமிட்டன. அதன் பயனாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் நிர்வாகத்தின் கீழிருந்த காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் தனித்தனியாக மூன்று பிரதேச செயலகங்கள் தற்காலிகமாக உருவாக்கப்பட்டன. பின்னர் இப்பிரதேச செயலகங்கள் தனி அந்தஸ்துள்ள நிரந்தரமான பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இந்த வரலாற்று உண்மையை ஏன் நான் கூறுகின்றேன் என்றால், தற்போது எந்தவித இன முரண்பாடும் இல்லாமல் வாழ்ந்து வரும் மட்டக்களப்பு மாவட்டத்தில், மற்றுமொரு முஸ்லிம் பிரதேச செயலகம் எந்தவொரு காரணமுமின்றி உருவாக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி மந்திரி சபையிலும் வழங்கப்பட்டு, வர்த்தமானியிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச செயலகம் வாழைச்சேனை மத்தி என்ற பெயரில் வாழைச்சேனையில் உள்ள முஸ்லிம்களுக்காக அமைக்கப்படவுள்ளது. இதில் வாழைச்சேனை பிரதேச சபைக்குள் உள்ள வாழைச்சேனை முஸ்லிம் பிரிவுகளான 4ம், 5ம் குறிச்சி, பிறைந்துறைச்சேனை தெற்கு, வடக்கு, வாழைச்சேனை தெற்கு, மாவடிச்சேனை, செம்மண்ணோடை ஆகிய ஏழு கிராமங்களுடன் 92ம் ஆண்டில் வாழைச்சேனை பிரதேசத்திலிருந்து பிரித்து ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேசத்துடன் இணைக்கப்பட்ட தமிழ் கிராமமான தியாவட்டவான் மற்றும் வாகரைப் பிரதேசத்திலுள்ள புனாணைக் கிழக்கு ஆகிய பகுதிகளைக் கொண்டு அமைக்கப்படவுள்ளதுடன் மற்றுமொரு திட்டமிட்ட குடியேற்றத்திற்காக தனித் தமிழ் பிரதேசமொன்றும் இந்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனையிலுள்ள முஸ்லிம்களுக்குக் கட்டாயம் தனி பிரதேச செயலகம் ஒன்று அவசியமில்லை. இக்கிராமங்கள் தற்போது வாழைச்சேனை பிரதேச சபைக்குள் உள்ளன. இதனால் இவர்கள் வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் கீழ் இருக்க வேண்டியவர்கள் ஆனால் தற்போது ஓட்டமாவடி பிரதேச செயலகத்திற்குக் கீழ் நிருவாகங்கள் ஒப்படைக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வருகின்றனர். எனவே ஓட்டமாவடி ஒரு தனி முஸ்லிம் பிரதேச செயலகமாக இருப்பதால் இவர்களுக்கு எந்த வித பிரச்சினையுமில்லை. ஆனால் தமிழ் பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தைச் செய்ய வேண்டும் என்பதால் பூகோள ரீதியில் எந்தவிதத் தொடர்பும் இல்லாத வாகரைப் பிரதேசத்தில் உள்ள புனாணைக் கிழக்கு என்ற தமிழ் பிரதேசம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த புனாணைக் கிழக்குப் பகுதிக்குள் மயிலங்கரச்சி, தியாவட்டவான், ஆலங்குளம், தேக்கஞ்சேனை, கரடி உரிச்சகுளம், புனாணை, இலுக்குப்பண்ணை ஆகிய தமிழ் கிராமங்கள் உள்ளன. மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் நாவலடிச் சந்தி என்ற இடத்திலிருந்து கடவந்தமடு வரையுள்ள சுமார் 15 கிலோ மீற்றர் நீளமுள்ளதும் சுமார் 5 கிலோ மீற்றர் அகலமுள்ளதுமான விசாலமான பகுதியில் இக்கிராமங்கள் பரந்து விரிந்து கிடப்பதுடன் இப்பகுதியில் இரு நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேட்டு நிலமும் உள்ளன.

ஓட்டமாவடி கிராமத்திற்கு அடுத்ததாக உள்ள இப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டால் ஓட்டமாவடியிலிருந்து தொடர்ச்சியாக பொலனறுவை மாவட்ட எல்லைவரையான கடவத்தமடு வரையும் குடியேற்றம் செய்து அதை நீண்ட முஸ்லிம் பகுதியாக மாற்றுவதுடன், போக்குவரத்துக்கும் இலகுவான பகுதியாகவும் அமையும் என்பதே அரசியல் வாதிகளின் பிரதான நோக்கமாக உள்ளது. அத்துடன் இது ஒரு நீண்டகாலத்திற்கான திட்டமிட்ட நடவடிக்கையாகவும் உள்ளது. புனாணைக் கிழக்குப் பகுதியைத் தவிர்ந்து ஏனைய ஏழு கிராமசேவகர் பகுதியை மாத்திரம் வைத்துக் கொண்டு தனிப் பிரதேச செயலகம் உருவாக்க நிலப்பரப்புக் காணாது. மேலும் நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்கு இப்பகுதியும் பொருத்தமானதாக இருந்ததும் இதை சுவீகரிப்பதற்குக் காரணமாக உள்ளது. வாழைச்சேனை முஸ்லிம்களுக்கும் ஒரு தனிப் பிரதேச செயலகம் அமைக்க வேண்டும் என்பதற்காகவும் தமது அரசியல் பலத்தை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்காகவும் முன்னாள் பிரதி அமைச்சராக இருந்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமே இதுவாகும்.

இதைவிட புனாணைக் கிழக்குப் பகுதியில் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு ஜயந்தியாய என்ற பெயரில் ஒரு குடியேற்றமும் செய்யப்பட்டுள்ளது. இங்கு நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு நிரந்தர வீடுகள் மற்றும் பாடசாலை, பள்ளிவாசல் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு அமைக்கப்பட்டுள்ள பாடசாலைக்கு ஹிஸ்புல்லாவின் மகனின் பெயரான மொகமட் ஹிராஸ் என்ற நாமம் சூட்டப்பட்டும் உள்ளது. தமது அரசியல் பலத்தையும் இன்றைய சூழ்நிலையையும் வைத்துக்கொண்டு முஸ்லிம் அரசியல் வாதிகள் தமது அரசியல் இலாபத்திற்காக எரியும் வீட்டில் நெருப்பு எடுப்பதுபோல் திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகளைக் கச்சிதமாகச் செய்து வருகின்றனர். புலிகளையும் தமது ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டும் தமிழ் பகுதிகளிலும் அபிவிருத்தி செய்வதாகக் காட்டிக் கொண்டும் கடந்த காலங்களில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா செய்த நடவடிக்கைகள் மறைமுகமாகத் தமிழர்களைப் பாதிப்பதாக உள்ளதுடன் புலிகளின் உன்னதமான போராட்டத்தையும் கொச்சைப் படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளன.

உண்மையில் விடுதலைப் புலிகள் இன்று இத்தனை உயிர் உடமை இழப்புகளுக்கு மத்தியில் போராட்டத்தை நடத்தி வருவதே உண்மையான வடக்குக் கிழக்கின் தாயகப்பூமிக்காகவே. ஆனால் எந்தவொரு முஸ்லிம் இளைஞர்களும் இரத்தம் சிந்தாமல் அரசியல் தலைமைகளின் திட்டமிட்ட செயலினாலும் சந்தர்ப்பவாத அரசியலாலும் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்து வருவதுடன் தமக்கென நிர்வாக எல்லைகளையும் நிர்ணயித்தும் தென்கிழக்கு மாகாணம் என்ற உத்தேசத் திட்டத்தை அமுல் படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக உள்ளனர். இந்த புனாணைக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று வாழைச்சேனை அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றனர். 90ம் ஆண்டுக்குப் பின் அப்பகுதியில் ஏற்பட்ட அச்சநிலையும், மைலந்தனைப் படுகொலையையும் அடுத்து இப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சொந்த இடங்களைவிட்டு வெளியேறி இன்று அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்களைச் செய்ய முற்படுவது எவ்வாறான நிலையை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் என்பதைச் சகல தரப்பினரும் சிந்திக்க வேண்டும்.

வாகரைப் பிரதேசத்திலுள்ள புனாணைக் கிழக்கைப் பிரித்து புதிதாக அமைக்கப்படவுள்ள வாழைச்சேனை மத்தி என்ற முஸ்லிம் பிரதேசத்துடன் இணைப்பதற்கு வாழைச்சேனை தமிழ் மக்களும் வாகரைப் பிரதேச மக்களும் கடும் எதிர்ப்பைக் காட்டியிருந்தனர். அத்துடன் தமிழ் அரசியல் வாதிகளும் காட்டிய கடும் எதிர்ப்புக் காரணமாக இந்த புதிய பிரதேச செயலகப் பிரிவு அமைப்பது சிறிது காலம் தடைப்பட்டிருந்த போதிலும் தற்போது அமுலாக்கப்பட்டுள்ளது. இதற்கு தற்போது பிரதி அமைச்சராகத் தெரிவாகியுள்ள ஓட்டமாவடியைச் சேர்ந்த எம்.பி.எம்.அப்துல்காதரின் முயற்சியே காரணமாகும். எனினும் இத்திட்டத்தைக் கைவிட வேண்டுமென தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது அமைப்புகளும் ஜனாதிபதி மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோருக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனால் இது எந்தளவுக்குச் சாத்தியப்படப் போகின்றது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.



ரதி ஜுவலர்ஸ்

28, Ealing Road, Wembley, Middx HA0 4TL
Tel: 0181-9033063-Fax: 0181-9039711
'எப்பொழுதுமே மலிவு விலை'
OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.
Pub

# தமிழைக் காக்க என்னை அர்ப்பணிப்பேன்

## - ரஷ்ய நாட்டு பேராசிரியர் அலெக்ஸாண்டர் -

தாய்மொழியாம் தமிழ்மொழியை மறந்து வேற்றுமொழி நாட்டத்தில் மூழ்கிக்கொண்டிருக்கும் இன்றைய புலம் பெயர் சமூகத்தினதும், தமிழக மக்களினதும் ஒரு பகுதியினர் இருக்க, தமிழ் மொழியைக் காக்க தன்னையே அர்ப்பணிப்பேன் என கூறியிருக்கிறார் ரஷ்ய நாட்டு பேராசிரியரான அலெக்ஸாண்டர் துபி யான்ஸ்கி.

அண்மையில் இந்தியா வந்த பேராசிரியர் அலெக்ஸாண்டர் தமிழ்மொழி மீது இவ்வளவு நேசிப்பு ஏற்படக் காரணமாக அமைந்த விடயம் பற்றிக் கூறிய இவர், தமிழ் மொழியை சமஸ்கிருதம் எவ்வாறு ஆக்கிரமித்தது என்பது பற்றியும் ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

கோவையில் விஜயா பதிப்பகம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் கடந்தவாரம் கலந்துகொண்டு உரையாற்றினார். மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் கடந்த 15 வருடங்களாக தமிழ்த்துறையின் தலைவராக இருக்கும் இவர் தமிழிலேயே ஆற்றிய உரையையும், இச் சந்திப்பின்போது பார்வையாளர்கள் கேட்ட கேள்விக்கு இவர் அளித்த பதில்களையும் சாளரம் ஊடாக உங்களுக்குத் தருகின்றோம்.

நான் 1965ம் ஆண்டு தமிழ் படிக்க ஆரம்பித்தேன். தற்போது என்னிடம் 6 மாணவர்கள் தமிழ் பயின்று வருகின்றனர். நான் சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்துள்ளேன். தமிழ் மொழி பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிசெய்து வருகிறேன். தமிழ் என்றால் எனக்கு உயிர். எனது வாழ்வில் தமிழ் ஒரு அங்கம் ஆகிவிட்டது. இந்திய இலக்கியங்களில், ஏன் உலக இலக்கியங்களில் தமிழ் மொழிக்கு தனிச் சிறப்பு உண்டு. தமிழ் மொழியை இன்னும் நன்கு ஆராயவேண்டும். சமஸ்கிருதம் தமிழ் மொழியை பாதித்து உள்ளது. இது எப்படி தமிழை ஆக்கிரமித்தது? என ஆராய்ச்சி செய்து வருகிறேன். நான் தமிழை ரஷ்யமொழி மூலம் கற்றுக்கொண்டேன். தமிழ்நாட்டில் வசிப்போருக்கு தமிழ் எளிதாகத் தெரியும். ஆனால் தமிழில் உள்ள நூல்களை படிப்பது கடினம். நான் இதை எளிதாக்கி மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து வருகிறேன். இதன்மூலம் சில சமயம் நானே எழுத்தாளனாகி விடுகிறேன்.

ரஷ்யாவில் தமிழ்மொழி பாட நூல் எழுத ஆர்வமாக உள்ளேன். ஆனால் நேரம் கிடைப்பது இல்லை. தமிழ் பத்திரிகைகள் ரஷ்யாவுக்கு வருவதில்லை. அப்படி வரும் பட்சத்தில் தமிழ் படிக்க இன்னும் அதிக நேரம் கிடைக்கும். சில ஆண்டுகளுக்கு தமிழில் சிறந்த எழுத்தாளர் யார்? என்று சொல்ல முடிந்தது. தற்போது அப்படி யாரையும் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. ரஷ்யாவிலும், மொஸ்கோவிலும் தமிழ் இலக்கியம் வளர்க்க ஆசைப்படுகிறேன். இந்திய அறிஞர்கள் மூலம் ரஷ்யாவில் தமிழை வளர்ப்பேன். தமிழ் மொழியை காக்க என்னையே அர்ப்பணிப்பேன். தமிழைக் காக்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கை என்னிடம் உள்ளது. தமிழ்நாட்டை எனது சொந்தக் கண்ணால் பார்க்க வேண்டும் என்பதால் இங்கு வந்துள்ளேன். எனக் கூறினார்.

தொடர்ந்து பார்வையாளர்கள் அவர்மீது கேள்விகளை தொடுப்பதற்கு 'நேருக்கு நேர்' என்ற நிகழ்ச்சி இடம்பெற்றது.

அதில் பார்வையாளர்கள் தொடுத்த சில கேள்வியும், அதற்கு பேராசிரியர் அளித்த பதில்களும் கீழே வருகின்றன.

**✪ சோவியத் ரஷ்யா இப்போது எப்படி உள்ளது?**

➡ சோவியத் ரஷ்யா ஆட்சி வர்க்கத்தின் சுய நலம் காரணமாக சிதறுண்டு போனது. இப்போது ரஷ்யாவில் காட்டு மிராண்டித்தனமான முதலாளித்துவம் தலை தூக்கி வருகிறது. இதனால் 1 சதவீத மக்கள் மட்டுமே வசதியாக உள்ளனர். மற்றவர்கள் சிரமப்படுகின்றனர். நாட்டில் என்ன மாற்றம் ஏற்படும் என்று சொல்ல முடியாது. எதிர் காலத்தில் மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. மக்கள் மனதில் ஒருவித தளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**✪ செச்சினியா விடுதலை பற்றி தங்கள் கருத்து என்ன?**

➡ அது ரஷ்யாவில் உள்ள ஒரு சிறிய குடியரசு. அங்கு முஸ்லிம் மக்கள் நிறைய வசிக்கின்றனர். அவர்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என நினைக்கின்றனர். ஆனால் ஆட்சியாளர்கள் அவர்களை அடக்கியே ஆக வேண்டும் என்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது நியாயமா? அநியாயமா? என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை இது அநியாயம்.

**✪ நீங்கள் தமிழ் கற்றது எப்படி?**

➡ ரஷ்ய மொழி மூலம் கற்றுக்கொண்டேன்.

**✪ தமிழில் நூல் எழுதி உள்ளீர்களா?**

➡ இதுவரை எழுதவில்லை. மன்னிக்கவும்.

**✪ உலகில் எத்தனையோ மொழி உள்ளது. அதில் தமிழை மட்டும் கற்க காரணம் என்ன?**

➡ தற்செயலாக கற்றேன். பிறகு உண்மையான அக்கறை ஏற்பட்டது. ஒரு நண்பரது தூண்டுதலால் கற்றேன்.

**✪ உங்கள் பெற்றோர் பற்றி?**

➡ எங்கள் குடும்பம் சாதாரண குடும்பம். எனது தந்தை இராணுவத்தில் அதிகாரியாக பணி புரிந்தார். போர்க் களத்தில் அல்ல. இராணுவத்துக்கு ஜேர்மன் மொழி பெயர்ப்பாளராக இருந்தார். எனது தாயார் நூலக ஊழியராக இருந்தார்.

**✪ உங்களுக்கு வேறு என்னென்ன மொழிகள் தெரியும்?**

➡ ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, மலையாளம். இதுதவிர சமஸ்கிருதம் ஓரளவுக்குத் தெரியும்.

---

*நான் சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்துள்ளேன். தமிழ் மொழி பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிசெய்து வருகிறேன். தமிழ் என்றால் எனக்கு உயிர். எனது வாழ்வில் தமிழ் ஒரு அங்கம் ஆகிவிட்டது.*

---

**✪ பழைய தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வுசெய்து வருகிறீர்கள். தமிழ் இலக்கியம் என்ன சொல்கிறது?**

➡ இயற்கையையும், உலகையும் காக்க வேண்டும் என்று கூறுகிறது.

**✪ அமெரிக்க நாடு பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

➡ சிலருக்கு அமெரிக்கா கடவுள் மாதிரி உள்ளது. அமெரிக்காவில் கட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சி, அதிக உற்பத்தி போன்ற பல நல்ல பழக்கங்கள் உள்ளன. அதே நேரத்தில் தேவையில்லாமல் அடுத்த நாட்டு பிரச்சினையில் தலையிடுகிறது. இது எனக்கு பிடிப்பதில்லை.

## 📖 கிடைக்கப் பெற்றோம் 📖

### தூரத்து விடியல்




ஜேர்மனியில் இருந்து விக்னா பாக்கியநாதன் எழுதி வெளியிட்டிருக்கும் 'தூரத்து விடியல்' என்னும் கவிதைத் தொகுதி கிடைக்கப்பெற்றோம். புலம்பெயர் இடர்படு வாழ்வியலுக்குள் இருந்துகொண்டு இலக்கியப் பணி புரிதல் என்பது எளிதல்ல. அந்த வகையில் திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்களின் 'தூரத்து விடியல்' முயற்சி பாராட்டுதலுக்குரியது. கவிதைகள், குறளின் நிழல்கள் என இரு பகுதிகளை உள்ளடக்கியிருக்கும் இவரது நூல் தாயக, மற்றும் புலம் பெயர்ந்த வாழ்வின் அனுபவ வெளிப்பாடுகளையும், தாயக விடிவை அவாவி நிற்பனவாகவும் அமைந்து காணப்படுகின்றன. இவரது எழுத்து முயற்சிகள் மேலும் தொடரவேண்டுகிறோம்.

---

(14ம் பக்கத் தொடர்ச்சி)

### 'சமாதானத்திற்காக...

போர் திட்டங்களுக்கு அவசியமானதாகவும் அது உண்டு.

இந்த நிலையில் யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டு யுத்தம் ஒன்று மூழுமேயாயின் அது முழு அளவிலானதாக பெரும் யுத்தமாக நிச்சயம் இருக்கும். இதனால் பெருமளவு இரத்தம் சிந்தவேண்டியும் வரும். இதனைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எச்சரிக்கவும் தவறவில்லை. 'எமது பாதுகாப்பு அரண்களை ஊடறுத்து ஆனையிறவு நோக்கி நகரும் ஒரு பாரிய தாக்குதல் திட்டம் வரையப்பட்டிருக்கின்றது. இப்பாரிய தாக்குதலை நடத்த சிறீலங்கா முற்படுமானால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும். இது எதிரிக்குப் பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்லாமல் போர் என்றுமில்லாத அளவிற்கு விரிவடையும் சாத்தியம் இருக்கின்றது என அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வாறாக யுத்தம் முழு அளவில் நிகழ்வது பெரும் அழிவிற்கு வழிவகுக்கும் என்பதினால் அதனைத் தவிர்க்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் முயற்சியை அர்த்தம் அற்றது எனத் தவிர்ப்பது யதார்த்தத்தைப் புறக்கணிப்பதாகவே அமையக்கூடியதாகும்.

அடுத்ததாக சர்வதேச சமூகம் இன்று இனப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு ஒன்றைக் காணுமாறு சிறீலங்கா அரசையும் விடுதலைப் புலிகளையும் கோரி வருகின்றது என்பதும் - நோர்வே அரசு மேற்குலகின் அனுசரணையுடன் இச் சமரச முயற்சியில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது என்பதும் வெளிப்படையானதொன்று.

இதனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண உளப்பூர்வமாகவிழையும் எவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் அவசியமானதாகும். ஆகையினால் சமரச முயற்சியில் ஈடுபடுவோருக்கு ஒத்துழைப்பதென்பது மக்கள் நலனில் அக்கறையுள்ள போராடும் அமைப்பு ஒன்றிற்கு அவசியமானதாகும்.

ஆகையினால் இழப்புக்கள், பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் கூட சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பு வழங்குதல் அவசியமானதும், பொறுப்பும் ஆகின்றது. இவற்றைக் கருத்திற் கொண்டே விடுதலைப் புலிகள் அமைப்பும் மேற்கொண்ட ஒரு தலைப் பட்ச யுத்த நிறுத்தத்தினால் குறிப்பிடத்தக்க பாதகமான நிலை இருக்கின்ற போதிலும் - மீண்டும் ஒருகால நீடிப்பை மேற்கொண்டது.

ஆனால், சிறீலங்கா அரசோ விடுதலைப் புலிகளின் நியாயப்பாடான இந்நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ளவோ அன்றி புரிந்துகொள்ளவோ தயாராக இல்லை. இது விடுதலைப் புலிகளின் பலவீனம் எனச்சாதிக்க முனைகின்றது. ஆகையினால், புலிகள் சமாதானத்திற்காக தம்மால் இயன்ற ஒத்துழைப்பு அனைத்தையும் வழங்கிவிட்ட நிலையிலும், சமாதான விதிமுறையை அரசு புறம்தள்ளுகின்றது. இந்நிலையில் எதிர்காலத்தில் முழு அளவில் யுத்தம் ஒன்று வெடிக்குமானால் அதனால் ஏற்படும் முழு அழிவிற்கும் நெருக்கடிகளுக்கும் சந்திரிகா அரசே பொறுப்பேற்கவேண்டும்.

**- ஜெயராஜ்**

Book a Flight
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
Siva Travel
Worldwide Travel Service
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN
Pub

# உலக வரலாற்றில் பதிவானவர்கள்

## மயக்க மருந்தை கண்டுபிடித்த வில்லியம் டி.ஜி. மோர்ட்டோன்



**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் வெறச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப் பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.**

வில்லியம் தாமஸ் கிரீன் மோர்ட்டோன் என்ற பெயரை பெரும்பாலான வாசகர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். எனினும், வேறு பல புகழ்பெற்ற மனிதர்களை விட மிகப் பெருமளவுக்குச் செல்வாக்குப் பெற்றவராக அவர் விளங்கினார். ஏனெனில், அறுவை சிகிச்சையில் நோவை உணரா வண்ணம் உணர்ச்சி மயக்கமூட்டுகிற முறையை (Anaesthesia) பயன்படுத்துவதைப் புகுத்துவதற்கு மூலகாரணமாக விளங்கியவர் மோர்ட்டோன் ஆவார்.

வரலாறு முழுவதிலுமே, உணர்வின்மையை ஊட்டும் மயக்க மருந்தினைப் போல் தனி மனிதர்களால் மிக உயர்வாக மதிக்கப்படும் கண்டுபிடிப்புகள் மிகச் சிலவே உண்டு. அது மட்டுமன்றி, இதைப் போன்று மனிதரின் உணர்ச்சி நிலையில் ஆழ்ந்த மாற்றத்தை உண்டாக்கிய வேறு க்ண்டுபிடிப்பு எதுவுமில்லை எனலாம். ஒரு காலத்தில் ஒரு நோயாளி விழித்திருக்கும்போதே, அறுவைச்சிகிச்சை மருத்துவர் அவரது எலும்புகளில் இரம்பத்தைப் பாய்ச்சி அறுப்பார் என்பதை நினைத்துப் பார்க்கும்போதே நமக்குப் பெருந் திகில் உண்டாகிறது. இது போன்ற கொடிய வேதனைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிந்தது என்பதே, எந்த ஒரு மனிதனும் தனது உடனொத்த மனிதர்களுக்கு அளிக்கும் மிகச் சிறந்த நன்கொடை என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் சார்ல்ட்டன் நகரில் 1819ஆம் ஆண்டில் மோர்ட்டோன் பிறந்தார். இளமைப் பருவத்தில் பால்டிமோர் பல்மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். 1824ஆம் ஆண்டில் இவர் பல் மருத்துவத்தில் தொழில் நடத்தினார். 1842 மற்றும் 1843 ஆம் ஆண்டுகளில் சிறிது காலம், ஹோரேஸ் வேல்ஸ் என்ற பல் மருத்துவ அறிஞருடன் கூட்டாண்மைத் தொழில் நடத்தினார். வேல்ஸ் இவரைவிடச் சற்று மூத்தவர். உணர்ச்சி மயக்க முறையில் வேல்சும் ஆர்வம் கொண்டிருந்தார். இவர்களுடைய கூட்டாண்மை லாபகரமாக இல்லை எனத் தோன்றுகிறது. 1843 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்தக் கூட்டாண்மை முடிவுற்றது.

இதற்கு ஓராண்டுக்குப் பின்னர், வேல்ஸ், 'சிரிப்பூட்டும் வாயு' (Laughing gas) என அழைக்கப்படும் நைட்ரஸ் ஆக்சைடை வலி நீக்கும் மயக்க மருந்தாய்ப் பயன்படுத்திப் பரிசோதனைகள் நடத்தலானார். கனக்டிக்கட் மாநிலத்தில் ஹார்ட்ஃபோர்டில் மருத்துவ தொழிலாற்றும்போது நைட்ரஸ் ஆக்சைடைப் பல் நோய் சிகிச்சையில் வேல்ஸ் பயன்படுத்தினார். ஆனால், பாஸ்டனில் இந்த முறையைப் பொதுமக்களுக்குச் செயல் விளக்கம் செய்து காட்ட இவர் முயன்றபோது இந்த முறை வெற்றியடையாமல் போயிற்று.

மோர்ட்டோன் தமது மருத்துவத் தொழிலில், செயற்கைப் பற்களைப் பொருத்துவதில் தனித் திறமை பெற்றவராக விளங்கினார். செயற்கைப் பற்களைத் தக்க முறையில் பொருத்துவதற்கு முதலில் பழைய பல்லின் வேரை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. நோவு நீக்கும் மயக்க மருந்து கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னர், பல்லின் வேர்களைப் பிடுங்குவது மிகுந்த வேதனையைத் தந்தது. இதற்கு ஏதேனுமொருவகை மயக்க மருந்து கண்டுபிடிப்பது இன்றியமையாததாயிற்று. தமது நோக்கங்களுக்கு நைட்ரஸ் ஆக்சைடு போதிய அளவுக்குப் பயனுடையதாக இராது என்பதை மோர்ட்டோன் உணர்ந்தார். அதைவிட ஆற்றல் வாய்ந்த ஒரு மருந்தைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார்.

சார்லஸ் டி.ஜேக்சன் என்பவர் ஒரு மருத்துவ வல்லுநராகவும் விஞ்ஞானியாகவும் விளங்கியவர். அவர் மோர்ட்டோனிடம் ஈதரை (Ether) மயக்க மருந்தாகப் பயன்படுத்திப் பார்க்கும்படி ஆலோசனை கூறினார். ஈதருக்கு உணர்ச்சி மயக்கமூட்டுகிற பண்பு உண்டு என்பது 300 ஆண்டுகளுக்கு முன்னரே பாராசெல்சஸ் (Paracelsus) என்ற புகழ் பெற்ற சுவிஸ் மருத்துவரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இது பற்றிய ஓரிரு அறிக்கைகள் வெளியாகியிருந்தன. ஆனால், ஈதர் பற்றி எழுதிய ஜேக்சனோ வேறு எவருமோ இந்த வேதிப் பொருளை அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தியதில்லை.

ஈதர் ஒரு வெற்றிகரமான மயக்க மருந்தாக அமையலாமென மோர்ட்டோனும் கருதினார். அதைக்கொண்டு அவர் பரிசோதனைகள் நடத்தலானார். முதலில் தமது செல்லப் பிராணி நாய் உட்பட விலங்குகளிடம் அதைப் பயன்படுத்தினார். பின்னர் தம்மிடமே சோதனை செய்து பார்த்தார். இறுதியில் 1846 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள் ஒரு நோயாளிக்கு ஈதரைப் பயன்படுத்திச் சோதனை செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது. ஈபன் பிராஸ்ட் என்ற நபர், கடுமையான பல் வலியால் துடித்துக்கொண்டு மோர்ட்டோனிடம் வந்தார். தொல்லை கொடுத்த பல்லைப் பிடுங்கி தம் வலியைப் போக்கும் எந்தச் சிகிச்சைக்கும் தாம் தயாராக இருப்பதாகக் கூறினார். அவருக்கு மோர்ட்டோன் ஈதரை மயக்க மருந்தாகக் கொடுத்து, அவருடைய பல்லைப் பிடுங்கினார். பிராஸ்ட் மயக்கம் தெளிந்து உணர்வு பெற்றபோது, பல்லைப் பிடுங்குகையில் தமக்கு வலியே தெரியவில்லை என்று கூறினார். இந்த முடிவுக்குத்தான் மோர்ட்டோன் காத்திருந்தார். வெற்றியும், புகழும், பொருளும் அவர் முன் காட்சியளித்தன.

இந்த அறுவை சிகிச்சையைப் பலர் முன்னிலையில் மோர்ட்டோன் செய்துகாட்டினார். அடுத்த நாளன்றே செய்தியிதழ்களில் அந்தச் செய்தி வெளிவந்தது. ஆயினும், இது பரவலாகக் கவனத்தைக் கவரவில்லை. இந்த முறையை இன்னும் வியப்புத் தருகிற வகையில் செயல் விளக்கம் செய்துகாட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வலி நீக்கும் தமது முறையை ஒரு மருத்துவர் குழுவின் முன்னிலையில் நடைமுறையில் செயல்விளக்கம் செய்து காட்டுவதற்கு ஒரு வாய்ப்பளிக்கும்படி பாஸ்டனிலுள்ள மாசாசூசெட்ஸ் அரசு மருத்துவமனையின் மூத்த அறுவைச் சிகிச்சை வல்லுநராகிய டாக்டர் ஜான் லாரனிடம் மோர்ட்டோன் வேண்டினார். இதற்கு டாக்டர் லாரன் இசைந்தார். அந்த மருத்துவமனையிலேயே செயல் விளக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு 1846 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ஆம் நாளன்று, கணிசமான எண்ணிக்கையில் குழுமியிருந்த மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் முன்னிலையில் கில்பர்ட் அப்பாட் என்ற அறுவை சிகிச்சை நோயாளிக்கு மோர்ட்டோன் ஈதரை மயக்க மருந்தாகக் கொடுத்தார். பின்னர், அப்பாட்டின் கழுத்திலிருந்து ஒரு கழலையை டாக்டர் லாரன் அறுவை சிகிச்சை செய்து அகற்றினார். மோர்ட்டோனின் மயக்க மருந்து முறை முழு அளவில் செயல் விளைவுடையதாக இருந்தது. அவருடைய செயல் விளக்கம் மகத்தான வெற்றியாக அமைந்தது. இது பற்றிய பல செய்தியிதழ்கள் விரிவாகச் செய்தி வெளியிட்டன. இதன் பின்பு, அடுத்த சில ஆண்டுகளிலேயே அறுவை சிகிச்சைகளில் மயக்க மருந்தினைப் பயன்படுத்தும் முறை மிகப் பரவலாகக் கையாளப்படலாயிற்று.

[தொடர்ச்சி 31—ம் பக்கம்]

# வைரமாகும் வன்னி மண் 7

கடந்த வாரம் மனப்பாதிப்புற்ற பெண்களுக்காக இயங்கும் வெற்றிமனையைப் பற்றியும், அதனது தேவைகளையும் அறிந்தீர்கள். இவ் வாரம் நாம் காணப்போவது நம் மூத்தோர்களை.

பிள்ளைகள் இருந்தும் இல்லாமலும் என அநாதைகளாக தவித்த இந்த முதியவர்களை அரவணைத்து, ஆறுதல்ப்படுத்தி அந்த நெஞ்சங்களுக்கு அமைதிகொடுத்து பராமரித்து வருகின்றது, கிளிநொச்சியில் உள்ள யோகர் சுமாமிகள் திருவடி நிலையம் முதியோர் இல்லம். இங்குள்ள முதியவர்களை அவசர தேவைகளுக்காக வைத்தியசாலைகொண்டு செல்வதற்கு ஒரு 'ஆட்டோ' சொந்தமாக இருக்கவேண்டும் என கேட்டபோது, அதற்கு பிரான்சில் உள்ள சில மனித நேயங்கள் முன்வந்து வழங்கிய பண உதவியால் இன்று ஆட்டோ வழங்கப்பட்டு முதியவர்களை வைத்தியசாலைக்குக்கொண்டு செல்வதற்கு இலகுவாக இருப்பதாகவும் அந் நிதியுதவி வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள அந் நிறுவனம்; மேலும் புகலிட மக்களிடம் இருந்து உதவி கோரி நிற்கின்றது.

இதோ....! அவர்கள் உங்களிடம் விடுக்கும் வேண்டுகோள்

## ஒரு பயணத் தொடர்...

*புலம் பெயர்ந்து வாழ்கின்ற அன்புத் தமிழ் உள்ளங்களுக்கு,*
*பேரன்புடையீர்,*
*முதியோர் வாழ உதவுவீர்*

*'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்ற தாரக மத்திரத்துடன் வாழ்ந்து வந்த ஈழத்தமிழ் மக்கள் புலம் பெயர்வு காரணத்தினால் தமது தாய் தந்தையரை அநாதைகளாக வீதிகள் தோறும் அலைந்து திரியவிட்ட சோக நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில் பலர் வீதிகளிலும் இறந்த பரிதாபக் காட்சியினை நினைவூட்ட விரும்புகின்றோம்.*

*இப் பின்னணியினை நன்கு உணர்ந்த யோகர் சுவாமிகள் அடியார்கள்; வன்னிப்பெருநிலப்பரப்பில் ஓர் முதியோர் இல்லத்தை 07.07.1997ல் ஐயனார்புரம் வன்னேரிக்குளம் கிளிநொச்சியில் ஆரம்பித்தனர்.*



முதியோர் இல்ல மூன்றாவது ஆண்டு விழாவில்

*தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் உருவான இம் முதியோர் இல்லம்; முதல் மூன்ற மாதங்கள் அவர்களின் முழு உதவியுடன் இயங்கிய பின்னர் நிர்வாக சபையினரின் பொறுப்பில் கையளிக்கப்பட்டது.*

*தற்போது 96 பயனாளிகள் இங்கு பராமரிக்கப்படுகிறார்கள். மேலும் பல முதியோர்கள் இவ் இல்லத்தில் பயன்பெற விண்ணப்பித்துள்ளனர்.*

*இன மத வேறுபாடுகளின்றித் தொண்டாற்றும் எமது இல்லத்திற்கு நிரந்தர நிதியோ, நிலமோ கிடையாது. மாதம் ஒன்றிற்கு உணவு, பராமரிப்பு, நிர்வாகச் செலவுகள் என ரூபா 1,40,000 வரையில் தேவைப்படுகிறது. இத்துடன் எமது இல்லத்தை மேற்கொண்டு நடாத்துவதற்கு இடவசதி என பல தேவைகள் இனம் காணப்பட்டுள்ளது.*

*எமது சமூகத்தொண்டினை எடுத்துச் செல்ல தாராள மனம் படைத்த தங்களது உதவிக்கரங்களை நாடி நிற்கின்றோம்.*

*எமது இல்லத்தின் சார்பில் அறநெறிப்பாடசாலை ஒன்றையும் நடாத்தி வருகின்றோம். அத்துடன் 60 மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இல்லத்தில் வருவாய்க்காக பயிர்ச்செய்கை நடவடிக்கைகள், கால்நடைப் பண்ணைகள் முதலியவற்றையும் நடாத்தி வருகின்றோம்.*

*எமது இல்லம் வாழ தாராளமாக உதவும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.*

*பொருள் உதவிகள் செய்ய விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யலாம்.*

*யோகர் சுவாமிகள் திருவடி நிலைய கணக்குகள்:*

1. *மக்கள் வங்கி கிளிநொச்சி - 2692*
2. *தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சி - 1297*

தொடர்புகளுக்கு: Yogar Swamigal Thiruvadi Nilayam
Iyanarpuram Vannerikulam
Kilinochchi - Sri Lanka.

[பயணம் தொடரும்...]

# புலம் நிகழ்வுகள்



'நோர்வேயின் சமாதான முன்னெடுப்பிற்கு' ஆதரவு தெரிவித்து இலண்டன் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த சந்திப்பில், 9 பிரித்தானிய



பாராளுமன்ற உறுப்பினர்களும், 150 வரையான தமிழ் மக்களும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வு கடந்த மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.



## நெல்சன் மண்டேலா ஆரம்பித்து வைக்கும் தமிழ் மாநாடு

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது மாநாட்டின்போது உலகத் தமிழர் மேம்பாட்டு வங்கி ஆரம்பித்துவைக்கப்படும். இதன்போது உலகத் தமிழரின் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்படுவதுடன், தேசிய கீதமும் முதன் முறையாக இசைக்கப்படும்.

தென்னாபிரிக்க முன்னால் ஜனாதிபதி திரு.நெல்சன் மண்டேலாவினால் ஆரம்பித்து வைக்கப்படும் இம் மாநாடு டேர்பன் நகரில் இவ்வருடம் டிசம்பர் 14ம் திகதி முதல் 16ம் திகதிவரை நடைபெறவுள்ளது. இம்மாநாட்டிற்கு தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பலநாடுகளின் தமிழ்த் தலைவர்கள், தென்னாபிரிக்கத் தலைவர்கள், தமிழ்ப்பிரமுகர்கள் ஆகியோர் அழைக்கப்படவுள்ளனர்.

உலகத் தமிழரின் மேம்பாடு கருதி இம்மாநாட்டின்போது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தலைவர் திரு. சி.செல்லையா, பொதுச் செயலாளர் திரு.கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். தென்னாபிரிக்க கூட்டிணைப்புக்கழகம் இம் மாநாடு சிறப்புற நடைபெற தமது ஒத்துழைப்பைத் தெரிவித்துள்ளது.

## இளம் கலைஞர்கள் தமிழ்விழா

காரைநகர் பொதுநலச் சங்கம் நடாத்திய 'இளம் கலைஞர்கள் தமிழ்விழா' கடந்த ஜனவரி 20ல் இலண்டன் வெம்பிலியில் உள்ள உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மாலை 6.45 மணியளவில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ் விழா







வில் 60 இற்கு மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர்.

நடனங்கள், பாடல்கள், பேச்சுக்கள், கவிதைகள் என பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் இவ் விழாவில் இடம்பெற்றன. இறுதியாக காரைநகர் பொதுநலச் சங்கத் தலைவர் இவ் விழாவில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை வழங்கிய அனைத்து மாணவக் கலைஞர்களையும் வாழ்த்திப் பேசினார்.

## பூவரசு 10ம் ஆண்டு விழா

ஜேர்மனியின் பிறேமன் நகரிலிருந்து வெளிவரும் பூவரசு தமிழ் ஏட்டின் பத்தாவது ஆண்டு நிறைவு 'கலை இலக்கியவிழா' மார்ச் மாதம் 3ம் திகதி சனியன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. மழலையர் முதல் வளர்ந்தோர் வரை வண்ணத்தமிழாய் அள்ளித்தரும் முத்தான பல கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறும்.

பிறேமன் Burger Und Sozia Ltentrum huchting மண்டபத்தில் நடைபெறவுள்ள பத்தாண்டு நிறைவில் எங்கள் இளம் தளிர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள் முதலில் இடம்பெறும். மேலும் பரதநாட்டியம், 'எங்கள் எதிர்காலம் எவரிடம்?' (விவாத அரங்கு), இருட்டு மனங்கள்(சிறுகதை நாடகம்) ஆகியவற்றுடன், பூவரசு பத்தாவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடும், பரிசளிப்பும் நடைபெறும். பிரபல பத்திரிகையாளர்கள், சஞ்சிகையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இவ்விழாவை சிறப்பிக்கவுள்ளார்கள்.

## யாழ். சம்பத்திரிசியார் பொதுக்கூட்டம்

யாழ்.சம்பத்திரிசியார் (சென். பற்றிக்) கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் வருடாந்த பொதுக்கூட்டம்

**காலம்:** 18.02.2001 ஞாயிறு
**நேரம்:** பிற்பகல் 4 மணி
**இடம்:** 157, Bld. de Belleville இல் அமைந்துள்ள Notre Dame de Réconciatrice ஆலய மண்டபம்.

சகல பழைய மாணவர்களையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

— பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ்

## மஹா சிவராத்திரி விரதம்

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 21.02.2001 புதன்கிழமை மஹாசிவராத்திரியை முன்னிட்டு நான்கு சாமங்களும் விஷேட அபிஷேக பூஜைகள் நடைபெற்று கலைநிகழ்ச்சிகள் விஷேடமாக இடம்பெறவுள்ளதால் அம்பிகை அடியார்கள் வருகைதந்து அருட்கடாட்சம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மறுதினம் வியாழன் காலை அன்னதானம் இடம்பெறும்.

— ஆலய பரிபாலனசபை

# கவிக்களம்

## முளைவிடும் விதைகள்

மாரிக்காலத்தில்
மழை பொழிந்த பின்னும்....
எங்கள் விளைநிலங்கள் மட்டும்...
ஏன் முளைக்க மறந்தன....?
நாங்கள்....
விதைத்த விதையெல்லாம்
உயிர் விதைகள் அன்றோ.....?

விதையோடு
செடியையும்...
பூவையும்....பிஞ்சையும்...
சேர்த்தே புதைத்து விட்டோம்
எத்தனை என்று
எண்ணில் அடங்காது....

எங்கள் கல்லறைகள்
முளைவிடும் காலம்
எப்போது வரும்....?

ஏர்பூட்டி
நிலம் உழுதால்
மரவள்ளிக் கிழங்காய்....
மனித எலும்புகள்
செம்மணியின் நிலமெங்கும்
தமிழனை புதைத்தது யார்...?

எங்கள் நாய்க்கு கூட
பங்கரின் வழி தெரியும்...!
மாடுகள் கூட
பொம்மரின் ஒலியறியும்...!
காட்டுப் ப்ன்றியும்
மிதிவெடியின் தடமறியும்....!
எம் மண்ணில் மட்டும்
ஏன் இப்படி....?

எம் தேசத்தின்
பூக்கள் மட்டும்
எப்போதும்...
சிவப்பாகவே பூப்பது ஏன்....?

எம் கூக்குரல் மட்டும்
உலகத்தின் காதுகளை
செவிடாக்கியது ஏன்...?

எம் வானத்தில் மட்டும்
எப்போதும்...
இருள் கவிழ்ந்து கிடப்பது
ஏன்...?

'பறாலைற்' வெளிச்சம் போல்
சூரியன் கூட
அவ்வப்போது
வந்து போவது ஏன்...?

நல்லூர் கோவிலில்
நாங்கள் மணியடிக்க
அலரி மாளிகையில்
அனுமதி கேட்கவோ...!

எங்கள் பூக்கள்
வண்ணமாய் மலரவும்....
எங்கள் வானவில்
வண்ணமாய் ஒளிரவும்...
எங்கள் காணியில்
செங்கதிர் ஆடவும்...
எங்கள் பனைகள்
வானை முட்டவும்...
எங்கள் தெருக்களில்
நாங்கள் ஆடவும்...
எங்கள் வாழ்க்கை
மகிழ்ச்சியில் திளைக்கவும்...

சாகின்ற கிழத்தோடும்...
அழுகின்ற குழந்தையோடும்..
அணி திரள்வோம் –
தலைவனின்
பின்னால்...

– கி. ஆறுமுகம்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

# நந்தா...

'இதில் எவரது தலையீடோ, நிர்ப்பந்தமோ இல்லை. எம்மில் எமது அரசாங்கம் எவ்வித அக்கறையும் இல்லை. இன்னும் சில காரணங்களை முன்வைத்துள்ளோம். உங்கள் அனுமதியும் வேண்டும்' நந்தா கூறினான்.

'உங்கள் விருப்பம்' கூறிவிட்டுப் பொறுப்பாளர் இறுகிய புன்னகையுடன் சென்றுவிட்டார். நாட்கள் நாலைக் கடந்தன. கைதிகள் உறுதியாக இருந்தனர். செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக செய்திகள் அனுப்பப்பட்டன. அரசின் தரப்பில் பதிலுக்குக் காத்திருந்தனர். பதிலில்லை, பயனில்லை. நாட்கள் நகர்ந்தன... அவர்களது உடல்நிலை மோசமடைய மீண்டும் தகவல் அனுப்பப்பட்டது. அதே அசமந்தப்போக்கும் அலட்சியமும் அரசிடம் இருந்தது.

'எம் பிள்ளைகளை காப்பாற்றவும்'

'எம் கணவர்மாரைக் காப்பாற்றவும்'

கருணை மனுக்கொடுத்தவரின் காலை வாரிவிட்டது பாதுகாப்பு அமைச்சு. யுத்தக் கைதிகளில் ஒருவன் மூர்ச்சையாகிவிட்டான். தலைவனுக்குச் செய்திபோக... 'எவ்வித நிபந்தனையுமின்றி அனைவரையும் விடுதலை செய்யுங்கள்'

எம் மண்ணில் அகிம்சைப் போராட்டம் தோற்றதாக இருக்கக் கூடாது'

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் யுத்தக் கைதிகள் அனைவரும் ஒப்படைக்கப் பட்டனர். அவர்களை ஏற்றிச் செல்லக்கப்பலும் வந்தது. ஒவ்வொருவரையும் கைகுலுக்கி வழியனுப்பி வைக்கிறார் அம்முகாம் பொறுப்பாளர். நந்தாவின் முறையும் வந்தது.'

கையைக் குலுக்கும்போது நந்தாவின் கண்ணீர் மடைதிறந்த வெள்ளம்போல பொலு.... பொலு....என்று...

கை குலுக்கிய கொறுப்பாளர் 'கால் கவனம்' என்று கூற நந்தா வெடித்துவிட்டான். அந்த அழுகையினூடும் எப்படி... எப்படி உங்கள் தலைவனுக்கு.... உங்களுக்கு நன்றி சொல்வேன்... வார்த்தை வரவில்லை... 'பரவாய் இல்லை சுகமாய் போய் வாருங்கள்' வீரிட்ட அழுகையை கைபொத்தி அடைக்க கைத்தடியுடன் கப்பல் ஏறினான் நந்தா....

நந்தாவின் குடும்பத்தினர் அனைவரும் பஸ் நிலையத்தில் அவனுக்காகக் காத்திருந்தனர். சுமணா.... ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றிருந்தாள். நந்தா தனியாகத்தான் வந்திறங்கினான். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. தந்தையின் முகம் மட்டும் இறுகியிருந்தது...

எல்லோருடனும் கதைத்துக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்த நந்தாவை தந்தையின் வார்த்தை இடிபோல் தாக்கியது.

'சும்மாவே பாரம்'

'அதுக்க இப்ப இப்படியும் வந்தா'

'இப்படி வருவாய் எண்டு தெரியாது, இவரைப் பார்க்க இவ்வளவு பேர்...' கூட்டம் கலைந்தது.

நந்தா நிலைகுலைந்து போனான், தந்தைக்குக் கீழ்படிந்த குடும் படம் அவர் பின் தொடர்ந்தது... ஒதுங்கி நின்ற சுமணாவின் விழிகள் அவனைத் தேடியது.

நந்தா கையிடுக்குகளில் இருந்த கைத்தடியை தூரவீசி எறிந்தான். சுமணாவின் தோளைப் பற்றிக்கொண்டான். தனியொரு பாதையில் புதுத் தெம்புடன் இருவரும் நடந்து கொண்டிருந்தனர்.

நந்தாவின் கைகள் மீண்டும் ஒரு முறை 'பர்சை' துளாவித் திறந்தது...

'புனர் ஜென்மம் கொடுத்தவன் புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்தான்' ★

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – (டிகோல் தொடர் - 31)

'கட்டுப்பாடு இருக்கவேண்டும். பிரான்சுக்குக் கெட்ட பெயர் உண்டாக்கக் கூடாது. தவறுகளைத் தொடர்ந்து செய்யாதீர் - கடற்படைத் தளபதி என்ற முறையில் ஒரு உதாரணமாகத் திகழுங்கள். பிரான்சைக் காப் பாற்றவேண்டிய கடமையை மறவாதீர்'

தலைவன் ஆனாலும், மனிதன் மனிதன்தான் - அதாவது குறைஉள்ளவன். டிகோல் எல்லாவற்றிலும் தானே, தனியே, முடிவெடுத்தார். எல்லாவற்றையும் சரிபார்த்தார், எல்லாவற்றையும் கண்காணித்தார் - பொதுவாக, இராணுவத்தினர் இதனை ஏற்றுக்கொண்டனர். பலருக்கு, அவரது சுதந்திர பிரான்சு இயக்கம் ஒரு தனி மனிதரின் நாடகமாகத் தெரிந்தது. [One man show] ஆனால், சிவிலியர்கள், பல சமயங்களில், முணுமுணுத்தனர். உதாரணமாக, அவரே உருவாக்கிய தேசிய பாதுகாப்பு மன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசியாமலேயே, இராணுவம் சம்பந்தப்பட்ட பல முடிவுகளை அவர் எடுத்ததும், அதனை அவர்களுக்குத் தெரிவிக்காததையும் பற்றி அவர்கள் குறைப் பட்டனர்.



டிகோல் நிச்சயமாக ஒரு சர்வாதிகாரி அல்ல- அவர் நிச்சயம் ஒரு சனநாயகவாதி. பல சமயங்களிலும், பலரையுங்கூட்டி, ஆலோசித்து, விவாதித்து முடிவெடுப்பது அவருக்குப் பழக்கமில்லை, அவருக்கு நேரமில்லை.

இச் சிறிய குறைகள் பெரிதுபடுத்தப்பட்டன. ஒரு சிறு எண்ணிக்கையில் ஆனவர்களே அவரைக் குறைகூறிக்கொண்டிருந்தவேளையில், மிகப் பெரும்பான்மையான அவரது உதவியாளர்கள் அவரின் தேசப்பற்று, அவரின் கடமை உணர்வு, அவரது முன்னுதாரணம், அவரது மனித நேயம், அவரது சிக்கனம், அவரது சரியான முடிவுகள், பிரான்சின் இறையாமையை விட்டுக்கொடுக்காத பண்பு, அவரது நாணயம் இவற்றை முன்வைத்து, இவ்வளவு நற்பண்புகளுக்கு அருகில், அவரது சிறு குறைகளைப் பொருட்படுத்தக்கூடாது என்றனர்.

சர்ச்சில், சில சமயங்களில் ஜெனரல் டிகோல் ஆங்கிலேயர்களை வெறுப்பவர் என்றும், அகங்காரம் பிடித்தவர் என்றும் சம்பந்தப்பட்டவரிடமே கூறுவார். அப்போதெல்லாம், டிகோல், 'நான் ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. நீங்கள் எப்படி உங்கள் நாட்டை நேசிக்கிறீர்களோ, அப்படியே நானும் என் நாட்டை நேசிக்கிறேன். எப்படி நீங்கள் உங்கள் நாட்டின் நலன்களைப் பாதுகாக்கிறீர்களோ, அப்படியே நானும் என் நாட்டின் நலன்களைப் பாதுகாக்கிறேன் - இது தவறா?

எனக்கு ஒரே ஒரு கவலைதான் உண்டு. போர் முடிவில், பிரான்சு போருக்கு முன்பு எப்படி இருந்ததோ, அப்படியே நானும் எனது நண்பர்களும் பிரான்சை உருவாக்கவேண்டும்; அதன் காலனி நாடுகள் எங்கெங்கு இருந்தனவோ அவற்றை எல்லாம் அப்படி, அப்படியே பிரான்சுக்குத் திருப்பி சேர்க்க வேண்டும்.

இந்த இரு கடமைகளையுஞ்செய்து முடிப்பது எளிதான செயல் அல்ல. ஆனால், நான் செய்து முடிக்கவேண்டும். இப்போதெல்லாம் எனக்கு ஒரே கவலைதான். பிரான்சின் இன்றைய பலவீனத்தைப் பயன்படுத்தி, காலனி நாடுகளைக் கழற்றிவிடவும், அல்லது அபகரித்துக்கொள்ளவும் இங்கிலாந்து முயற்சிக்கலாம் என்று அஞ்சுகிறேன் - அதனால் தான், நான் கடுமையாக நடந்துகொள்ள வேண்டி நேரிடுகிறது.

எனக்கு உங்கள் மீதோ, அல்லது உங்கள் அமைச்சர்கள் மீதோ ஒரு கோபமும் இல்லை. நான் பிரான்சின் நலன்களைப் பாதுகாக்கிறேன். அவ்வளவுதான்.'

ஒவ்வொரு முறையும், சர்ச்சிலும் - டிகோலும் மோதிக்கொள்ளும்போதும், சர்ச்சில் கோபப்படுவார்: 'உங்களைச் சிறையில் அடைத்து விடுவேன்' என்றும், 'உங்கள் இடத்தில் வேறொருவரை நியமிக்க முடியும்' என்றும், 'இந்த நாற்காலியை இப்போது உடைத்தெறிந்ததுபோல், உங்களை இருக்கும் இடம் தெரியாமல் ஒழித்துவிடுவேன்' என்று மிரட்டியும் இருக்கிறார். அப்போதெல்லாம், டிகோல் உணர்ச்சிவயப்படாது, தனக்கு மூத்தவரான ஆங்கிலப் பிரதமரை மதி-த்து நடந்தார். இரு நாடுகளின் நலன்களுக்காக மோதிக்கொண்டாலும், ஆங்கிலப் பிரதமர் உறுதியான மனிதர் என்பதும், போரை நல்ல முறையில் நடத்துகிறார் என்பதும் டிகோலுக்குப் ப்ரிந்தே இருந்தது.

சிறு பிள்ளைகளைப் போல, இரு தலைவர்களும் மோதிக்கொண்டாலும், மோதலைத் தாண்டி, இருவரும் ஒருவரை ஒருவர் மதித்தனர். கோபம் மறைந்ததும், ஒருவர் மற்றவர் மீது அன்பு காட்டத் தவறவில்லை.

*சர்ச்சில் கோபப்படுவார்: 'உங்களைச் சிறையில் அடைத்து விடுவேன்' என்றும், 'உங்கள் இடத்தில் வேறொருவரை நியமிக்க முடியும்' என்றும், 'இந்த நாற்காலியை இப்போது உடைத்தெறிந்ததுபோல், உங்களை இருக்கும் இடம் தெரியாமல் ஒழித்துவிடுவேன்' என்று மிரட்டியும் இருக்கிறார்.*

சர்ச்சிலும், அட்மிரல் Muselier வுங் கூடி சிந்தித்து, ஒரு பிரஞ்சுக் குழுவை உருவாக்கி, அக்குழு மூலம் டிகோலைச் சிறிது அடக்கிவைக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

முய்செலியே இந்த 'சுதந்திர பிரான்சின் நிறைவேற்று அதிகாரங்கொண்ட குழு' (Comité exécutif de la France libre) வுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, தானே தலைவர் என்றும், ஜெனரல் டிகோல் கவுரவத் தலைவர் ஆக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

டிகோல் இதனை ஏற்கவில்லை.

மேற்கண்ட அதே பெயருடன், அவரே ஒரு குழுவை உருவாக்கினார். இப்படியாக, சுதந்திர பிரான்சுக்கு, ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்ட ஒரு குழு பிறந்தது. இந்தக்குழுவில், தலைவருடன் 8 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும், அமைச்சர்களுக்குச் சமமானவர்களாக எண்ணப்பட்டனர். இந்தக் குழுவுக்கு, சட்டஞ்செய்யும் அதிகாரமும், சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரமும் வழங்கப்பட்டது [1943 ஆரம்பத்தில், நியமிக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் இயங்கத்தொடங்கும்]

[தொடரும்]

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

# காலம் ஆகி வந்த கதை



காலம் பின்னி இழைந்து, நம் கண்களுக்கு அப்பால் மறைந்து போகின்றது. எல்லோரிற்கும் உண்டான சோகம் நமக்கும் உண்டாகின்றது. மகிழ்வும் அவ்வாறே. சோகமென்றால் அது சின்னத்துக்கம். 'சொன்னாப் போலை அயத்துப் போனன்.' என்கிற மாதிரியான துக்கம்.

நெஞ்சம் கிளர்ந்து நினைவு தளிர்க்கிற துக்கம். மற்றும்படிக்கு குதூகலித்துப் பொழுதைத் துப்பிய கணம் அதிகம்.

ஆகச் சின்ன வயதில் ஆரும் குழப்படி விட்டால் துப்புவேன். எப்போதும் சுரந்து கொண்டேயிருக்கும் எச்சில்.

இடைப்பட்ட பருவம் இருக்கிறதே. அப்போதில் துப்புவதை நான் நிறுத்தினேன். நான் துப்புவதற்கான தேவையிருக்கவில்லை. எனக்குத் துப்புவதற்குச் சிலர் இருந்தனர். என் குழப்படி கூடி விட்டது. ரகு துரத்தித் துரத்தித் துப்பினான். அடிபடுகிறவனுடன் அடிபடலாம். துப்புகிறவனுடன் என்ன செய்வது?

பள்ளிக்கூடம் விட்டு வருகிற போது ரகுவின் புத்தகப் பையைப் பறித்து ஐயற்றை வளவுக்குள் எறிந்துவிட்டேன். அந்தக் காணிக்குள் புளியமரம், மாமரம், பலாமரம், கொய்யாமரம், எல்லாம் இருந்தாலும் பாம்புகளும் இருக்கின்றன. அதுகூடப் பரவாயில்லை. பேய்களும் இருக்கின்றன. சாமத்தில் புளிய மரத்தில் முனி இருந்த கதை இருக்கிறது. இருண்ட குகை மாதிரியான வளவு அது.

ரகுவின் புத்தகப் பையைப் பறித்து எறிந்திருக்கலாம். ஆனால் அந்தக் காணிக்குள் எறிந்திருக்கக்கூடாது. ஏன் தான் மூளை இப்படித் தறிகெட்டுக் போகிறதோ!

விளையாடிவிட்டு பொழுதுபட வீட்டை போகிற நேரம் சிவசம்பு வாத்தியார் வீட்டில் நிற்கிறார். ரகுவின் அப்பா அவர்.

இப்படித்தான் பாலமுரளியின் அப்பா குமரகுரு அண்ணை, மதனனின் அப்பா கனகசபையண்ணை அடிக்கடி வீட்டை வந்து நிற்பார்கள். விக்கிக்கு அப்பா இல்லாததால், விக்கியின் அம்மா அம்மாள் கோவிலில் எனது அம்மாவைக் கண்டு சொல்வார்.

அது என்னவோ தெரியவில்லை. ஏதும் பிரச்சினை என்றால் வாய் கதைக்க முன்னம் கை கதைக்குது.

வீடு வருகிறபோது படலையடியில் நிற்கிற சைக்கிளைப் பார்த்தவுடன் வீட்டினுள் நிற்பது யாரென்று தெரிந்துவிட்டது.

சின்னமாமாவின் சைக்கிள் எனக்குத் தெரியாதா? 'பார்'இல் நீல வயர் சுற்றியிருக்கும். அம்மாவிற்கு பொயிலையும், நாறல் பாக்கும் அக்காவிற்கும் எனக்கும் அன்னாசிப் பழமும் வாங்கிக்கொண்டு வந்திருப்பார். இது சின்னமாமா அல்ல.

இது சிவசம்பு வாத்தியாரின் சைக்கிள்.

வளவுக்குள் கால் வைக்காமல் சுற்றி அப்படியே சரவண முத்தண்ணரின் வீட்டுப் பக்கம் போனேன். கடிநாய் நிற்கிறது. கடித்தாலும் பரவாயில்லை. வீட்டை போனால் அப்பா என்னைக் கூப்பிடுவார். அடிக்க மாட்டார், காதை முறுக்க மாட்டார். அப்படிச்செய்தால் அது பரவாயில்லை. சைக்கிளில் ஏத்தி ஐயற்றை வளவுக்குக் கூட்டிக்கொண்டு போவார். இருட்டென்றும் பார்க்க மாட்டார். ரகுவின் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு வரச் சொல்வார்.

ஐயற்றை வளவுக்கை சிங்கம் இருந்தாலும் நான் அவ்வளவு பயப்பிட மாட்டேன். ஏதோ செய்யலாம். எதிர்த்துச் சண்டை பிடிக்கலாம். அல்லது அதனால் சாப்பிடப் படலாம். அது பாதகமில்லை. இந்தப் பாம்பு இருக்கிறதே. அது இருக்கிறதும் தெரியாது. சருகுக்குள்ளாலை வாறதும் தெரியாது. போறதும் தெரியாது. நசுக்கிடாமல் கொத்திவிடும்.

அதுகூடப் பரவாயில்லை. திடுமுட்டா ஏதும் வந்து தாக்கினால் அதைத் தாங்கலாம். ஆனால் வருமென்று தெரிந்து, வந்து தாக்கினால் நான் காற்சட்டையுடன் மூத்திரம் பெய்கிறசாதி. சிவக்கொழுந்து வாத்தியார் பிரம்புடன் எனக்கு அடிக்க வந்தபோது இப்படித்தான் மூத்திரம் போனது. ஆனால் செல்லர் திடுமுட்டா அடிப்பர்.

ஐயற்றை வளவுக்கை பேய்கள் உலவுறதும் தெரியும். பேய்கள் கட்டாயம் வரும். அதற்குப் பிறகு எப்படிப் போகமுடியும்?

இல்லை, இப்ப வீட்டை போறேல்லை. சரவண முத்தண்ணர் வீட்டுப் பக்கம் போனேன். நாய் கட்டியிருக்கோ, என்னவோ தெரியாது. ஆனால் நாதனண்ணையும், நிர்மதியக்காவும் பத்தைகள் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். பத்தைகள் எரியிற வெளிச்சத்திலை நிர்மதியக்காவின் முகம் நல்ல வடிவாய் இருந்தது.

நானும் சேர்ந்து கொளுத்தினன். நெருப்புக்குக் கிட்டக் கிட்டப்போய் கொளுத்தினேன். அது வெடித்துச் சீறி எரிந்தது.

'கிட்டப் போகாதை, சுடும், சாரத்திலை நெருப்பு பட்டுதெண்டால் அவ்வளவும் தான்' நிர்மதியக்கா சொன்னார்.

நான் வீரம் காட்டினேன். நெருப்பு சுடும் என்கிற பயம் இல்லாமல் நெருப்புக்கு மேல் பத்தைகளை கையாலை அள்ளிப்போட்டன். நாதனண்ணை குப்பை விறாண்டியாலை அதைச் செய்தார்.

எனக்கு கள்ள யோசினையும் இருந்தது. சிவசம்பு வாத்தியார் வீட்டாலை வெளிக்கிடுறாரோ என்று வீட்டையும் அடிக்கடி பார்த்தன்.

எனக்கு இன்னொரு கள்ள யோசினையும் வந்தது. நெருப்புக்கு நெருங்கி நெருங்கி நின்றேன்.

நிர்மதியக்கா 'இஞ்சாலை வா இஞ்சாலை வா' என்று கத்தினார். எனக்கு நிர்மதியக்கா என்றால் விருப்பம். அவா கிளிச்சொண்டான் மாங்காய் குத்தி உப்போடை தருவா.

நான் நெருப்புக்கு நெருங்கி நெருங்கி நின்றேன். நிர்மதியக்கா என்னைப் பிடித்து இழுத்தா.

சிவசம்பு வாத்தியார் சைக்கிள் ஏறிப் போவது தெரிந்தது. இன்னும் கொஞ்சம் நெருப்பைச் சுற்றி வந்தேன். காற்றிற்கு நெருப்புச் சுவாலை சாயும் பக்கம் போய் நின்றேன்.

போதும். அக்கம் பக்கம் பாராமல் குளிர்காற்று மேலைத் தடவாமல் நேரே வீடு போனேன்.

கிழக்குவாசல் திறந்து அம்மா கோழிக்கு குறுணல் போட்டா. அம்மாவிடம் போய் நின்றேன்.

'அம்மா எனக்குக் காய்ச்சல் போல இருக்கு' என்று சோர்ந்து நின்றேன்.

'கிட்ட வா' என்று அம்மா என் நெற்றியையும் நெஞ்சையும் தொட்டுப் பார்த்தா.

## ஐயற்றை வளவுக்கை பேய்கள் உலாவுது

'முகம் நல்லா வாடியிருக்கு' என்றா.

வேகமாக வந்த அப்பாவிடம் 'இப்ப ஒண்டும் கதையாதையுங்கோ. ராசாக்கு உடம்பு சரியில்லை' என்றா.

'ராசாதான்' என்று அப்பா முணுமுணுத்தார்.

அம்மா படலையடியில் வேப்பமிலை, உப்பு, செத்தல்மிளகாய் எடுத்து மூன்றுதரம் தலையைச் சுற்றி, என்னையும் துப்பச் சொன்னார். துப்பினேன். அதனை எரித்தார். எரித்ததை என் நெற்றியில் பூசினார். போய்ப் படுக்கச்சொன்னார் படுத்தேன்.

'இப்ப என்ன செய்யுது ராசா' என்று அடிக்கடி வந்தார். இடியப்பமும் இஞ்சிச் சம்பலும் தந்தார்.

இன்னும் இரவு நீண்டுபோக அப்பா பக்கத்தில் வந்திருந்து தலையைத் தடவினார். 'நாளைக்குக் காய்ச்சல் நிற்காட்டி நான் பள்ளிக்கூடத்தாலை வந்தவுடனை டாக்குத்தரிட்டைப் போவம்!' என்றார்.

அப்பாவின் தலை தடவலில் நித்திரையாகிப்போனேன்.

காலையில் எழுந்தபோது எனக்கு உண்மையில காய்ச்சல் வந்திருக்குமாப்போலதான் பட்டது. கொஞ்சம் குளிர்ந்தது.

அப்பா பள்ளிக்கூடம் போகமுன்னர் நெற்றியை, நெஞ்சை, கழுத்தை, கன்னத்தைத் தொட்டுப் பார்த்தார்.

'காய்ச்சல் இன்னும் விடேல்லை. நாங்கள் பின்னேரம் டாக்குத்தரிட்டைப் போவம்' என்றார். பள்ளிக்கூடம் போனார்.

இதன் இரண்டாவது நன்மையையும் காலையில்தான் உணர்ந்தேன். இரண்டு மூன்று நாட்களுக்கு நான் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை. இந்தக் கிழமையை இப்படியே சமாளித்துவிடலாம்.

பின்னேரம் பண்டத்தரிப்பிற்கு டொக்டர் அல்போன்சிடம் போனோம். மருந்துகள் தந்தார். கசக்கிற றோஸ்நிறக் கலவை ஒன்று குடித்து வாயில் சீனி அள்ளிப் போட்டன்.

அம்மா சங்கக்கடையில் நெஸ்ரோமோல்ற் வாங்கிக்கொண்டு வந்தார். அக்காவின் பின்னேர உலாத்தலில் நிர்மதியக்கா நான் நெருப்புக்குள் நின்ற கதைசொல்லிவிடுவாரோ என்ற சாடையான பயமாக இருந்தது. காய்ச்சல் நின்று மூன்றாம் நாள் ஆகிவிட்டது. நாளைக்கு மாத்திரம் பள்ளிக்கூடம். பிறகு சனி, ஞாயிறு. நாளைக்குச் சமாளித்தால் பிறகு ஆற அமர திங்கட்கிழமை பள்ளிக்கூடம் போகலாம்.

'இண்டைக்கும் ஏலாமல் இருக்கு. வாய் கசக்குது' என்றேன்.

நெற்றியைத் தொட்டுப் பார்க்கலாம். நெஞ்சைத் தொட்டுப் பார்க்கலாம். கன்னத்தையும், கழுத்தையும் கைவைத்துப் பார்க்கலாம். வாய்க் கச்சலை எப்படி அவர்களால் அறியமுடியும்? கண்களையும் சாடையான மயக்கச் சரிவில் வைத்திருந்தேன்.

அம்மா கைவைத்துப் பார்த்து பிறகு 'உள்ளுக்கை காயுது' என்றார்.

இரவி. அருணாசலம்.

பின்னேரம் திரும்பவும் டொக்டர் அல்போன்சிடம் போனோம். டொக்டர் அல்போன்சும் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, 'ஒரு காய்ச்சலுமில்லை. இது வேறை காய்ச்சல், நாளைக்கு மாத்திரம்தானே பள்ளிக்கூடம். ஆளை திங்கட்கிழமை பள்ளிக்கூடம் அனுப்புங்கோ' என்றார். அப்பா சிரித்தார். எனக்கு வெக்கமாப்போச்சு.

எனினும் வீட்டை வருகிறபோது குதூகலமாய் இருந்தது. நாளைக்குப் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை. குதூகலம் சடாரென வற்ற ஒரு காரணம் வந்து சேர்ந்தது. சனி, ஞாயிறிலை பின்னேரம் விளையாடப் போகேலாதே!

வெள்ளி மதியத்திற்குச் சற்றுப் பின்பாக நான் கொஞ்சம் உசாறாக இருக்கத் தொடங்கினேன். மீன் தின்று அலுத்த வாய்க்கு, வெள்ளியின் மரக்கறி அமிர்தம். தென்பு அதிலிருந்து கிட்டியது. காய்ச்சல் என்கிற கதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் தன்பாட்டிலேயே போயிற்று. சனி பின்னேரம் விளையாடப் போவதற்கு அப்பாவிடம் கேட்டேன். 'காய்ச்சல் வடிவாய் மாறேல்லை இப்ப போகவேண்டாம்' என்றார்.

'எனக்கு இப்ப காய்ச்சல் நல்ல சுகம்' நான் வில்லங்கப்படுத்தினேன்.

'எனக்குத் தெரியாது. அம்மாவிட்டைக் கேட்டிட்டுப் போ' என்றார் அப்பா.

அம்மாவிடம் போனேன். 'அப்பா ஓமெண்டால் போ' என்றார் அம்மா.

எனக்கு சினம் பிடித்தது. அப்பாவிடம்போய் 'அம்மா ஓமாம்' என்றேன்.

'அப்ப போ'

போனேன். இலகடி நோக்கி ஓடினேன்.

கலட்டுத் தறையில் விக்கற் நட்டிருக்கிறது. நான்போய் ஒரு சயிட்டில் நின்றேன்.

நான் கிறிக்கற் மட்டையால் விளாசுவேன். அதில் விண்ணன். பந்து வீசுவதில் எனக்குச் சில சிக்கல்கள் இருக்கின்றன.

பந்தைப் பிடிக்கிற விதமும், ஓடிவருகிற விதமும், வீசுகிற விதமும் எல்லாம் சரிதான். ஆனால் ஒரு சீராக ஒருபோதும் பந்து போவதில்லை. ஒரு சில சந்தர்ப்பங்களின் மாத்திரம் விக்கற்றுக்கு முன்னால் சரியாகப் பந்து நிலத்தைத் தொடும். அநேகமான சந்தர்ப்பங்களில் வீசிய பந்து அரைப்பனை அளவு உயரத்திற்குப் போய் விக்கற்றுக்கு அப்பால் நிலத்தைத் தொடும். அல்லது வீசிய எனக்குப் பக்கத்திலேயே பந்து நிலத்தைத் தொட்டு பிறகும் ஆயிரத்தெட்டுத் தடவை நிலத்தைத் தொட்டு ஆறுதலாக சில சமயம் உருண்டும் பந்துபோய்ச் சேரும். மட்டை வைத்திருப்பவன் விளாசுவான். என் கை சொத்தியல்ல; ஆனால் என்னவோ நடக்கிறது.

சின்னதொரு அசுமாத்தம் சூழலில் தெரிகிறது. பந்து விளாசுவது என்முறை. மட்டையை நிலத்தில் ஊன்றி நிமிர்ந்து பார்க்கிறேன். எதிர்த்தாற்போல வெள்ளை சேட், வெள்ளைச் சாரம் அணிந்த ஒருவர் நாங்கள் கிறிக்கற் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றார். ஒருநாளும் அவரை நான் கண்டதில்லை.

முன்னால் உள்ள ஆனந்தண்ணை வீட்டிலிருந்துதான் வந்திருக்கிறார் போலை. எங்கள் விளையாட்டை புன்முறுவலுடன் பார்க்கிறார். ஒருபோதும் கண்டறியாத முகம். ஒருபோதும் கேட்டிராத குரல். இடையில் ஒருமுறை பந்தை வாங்கி தான் வீசினார். ஓடிவந்து வீசவில்லை. கையை இரண்டு, மூன்று முறை சுற்றி எறியவில்லை. ஒரு வீசல். ஓர் எறி. நான் மட்டையை விசுக்கினேன். கிளீன் போல்ட். விக்கற்றுக்கள் சரிந்தன. இந்தப் பந்தில் என்ன மந்திரம். அவர் கையில் என்ன மாயம்?

'வாறன்' என்றுவிட்டுச் சிரித்துக்கொண்டு ஆனந்தண்ணை வீட்டினுள் புகுந்தார்.

விளையாட்டு முடிய ஓடிப்போய் சோதியக்காவிடம் கேட்டேன். 'ஆர் இவர்?'

'அது சுரேஸ். தம்பி ஆனந்தன்ரை சினேகிதன். சுரேஸ் நிற்கிறதை ஒருத்தருக்கும் சொல்லவேண்டாம்'

ஓம் என்றேன்.

ஒவ்வொரு நாளும் விளையாட வந்தார். பந்து வீசுவது மாத்திரம், சனி, ஞாயிறு தினங்களில் அம்பயராக நின்றார்.

நம்மூரில் ஒருமாதம் நின்றாரா? தெரியாது. பிறகு காணவில்லை.

அதன் பிறகு கண்டோம். கண்ட இடம் விசித்திரமான இடம்.

பத்திரிகையில் இளமையான ஒருவரின் படம் போட்டிருந்தது. கைக்குண்டு வீசியவர் என்னும் தலைப்பில், ஜீவா என்கிற பெயரில் இளமையான ஒருவரின் படம் பத்திரிகையில் வந்திருந்தது.

உற்றுப் பார்த்தால், அட, அது நம் சுரேஸ் அண்ணை.


பந்து வீசி எங்களிடம் பழகியிருக்கிறார். இலக்கைக் குறிவைத்து எங்களிடம் எறிந்திருக்கிறார். நின்ற நிலையில், நிமிர்ந்தவாக்கில், பந்துபடும் இடம் சரியா என்று எங்களிடம் பார்த்திருக்கிறார், எங்களுக்குப் பந்துவீசிய கைகள் யாருக்கோ கைக்குண்டு வீசியிருக்கிறதா? விக்கற்றுக்கள் சரிந்தாற்போல யார் தலை சரிந்திருக்கிறது? ஒன்றுமாய்த் தெரியவில்லை.

# கால் இறுதியை நோக்கியுள்ள டேவிஸ் கிண்ண போட்டிகள்

டெனிஸ் போட்டிகளின் தனி நபர் திறமைகளை ஒன்று திரட்டி ஆடும் நாடுகளுக்கிடையிலான ஆண்கள் பிரிவுப் போட்டிகளில் மிக முக்கியமானது டேவிஸ் கிண்ணம். 2001ம் ஆண்டு வெற்றியாளரை இனங்காணும் வகையில் கடந்த பெப்ரவரி 9ம் திகதி முதல் 11ம் திகதிவரையான 3 நாட்களும் 8 போட்டிகள் நடைபெற்றன. 16 நாடுகள் 8 வெவ்வேறு நகரங்களில் பங்குகொண்டு 8 வெற்றியாளர்கள் தெரிவாகி கால் இறுதிக்



குள் புகுந்துள்ளனர். அவுஸ்திரேலியா, பிரேசில், சுவீடன், ரஷ்யா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஜேர் மனி, நெதர்லாந்து ஆகியனவே தெரிவான நாடுகளாகும். டெனிஸ் விளையாட்டின் திறமையாளர்கள் பலரைக் கொண்டுள்ள அமெரிக்கா, சுவிற்சர்லாந்திடம் 3:2 என தோற்றது எதிர்பார்த்திராத முடிவாகும். இதேவகையில் எதிர்பார்க்கப்பட்ட ஸ்பெயின், நெதர்லாந்திடம் 4:1 என தோல்வியை தழுவியது. டேவிஸ் கிண்ணப்போட்டிகள் 4 தனிநபர் ஆட்டங்களையும 1 இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டுள்ள 5 ஆட்டங்கள் ஆகும். டேவிஸ் கிண்ணத்திற்கான கால் இறுதியாட்டங்கள் எதிர்வரும் ஏப்பிரல் 6ம் திகதி முதல் 8ம் திகதி வரையும் அரை இறுதியாட்டங்கள் எதிர்வரும் செப்டம்பர் 21ம் திகதிமுதல் 23ம் திகதியும் இறுதியாட்டம் எதிர்வரும் நவம்பர் 30ம் திகதிமுதல் டிசம்பர் 2ம் திகதிவரையும் நடைபெறவுள்ளன. வரவிருக்கும் போட்டிகளை அட்டவணை மூலம் விபரமாக அறிந்துகொள்ளலாம்.




**பொன். தாமோதரம்**

## உலகதரத்தை எட்டும் கபடி

இந்திய பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான கபடி உலக தரத்துக்கு உயர்ந்து செல்லும் பெருமையை அடைந்துள்ளது. ஏற்கனவே ஆசிய தரத்தை அதாவது ஆசியப் போட்டிகளில் இடம்பிடித்துவிட்டபோதிலும், உலகத் தரத்தை பிடிக்கவில்லையே என்ற ஆதங்கம் காணப்பட்டது. ஆனால் இந்தக்குறை நீங்கி எதிர்வரும் நவம்பர் மாதம் 12 நாடுகள் கலந்துகொள்ளும் கபடி உலகக்கிண்ணப்போட்டிகள் பெங்களூரில் நடைபெறவுள்ளன. கலந்துகொள்ளும் 12 நாடுகளில் இந்தியா மிகவும் வலுவாக இருப்பதால் அறிமுகமாகும் முதலாவது உலகக்கிண்ணத்தை இதுவே கைப்பற்றலாம் என பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஐ.நா. அமைதித் தூதராகிய டெனிஸ் வீரர்

டெனிஸ் விளையாட்டு வீரரான விஜய் அமிர்தராஜ் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதித் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னையைச் சேர்ந்த இவர், சர்வதேச நாடுகளில் நடைபெற்ற



பல டெனிஸ் போட்டிகளில் பங்குபற்றி இருந்தவர். தற்போது தொலைக்காட்சிகளில் விளையாட்டு செய்திகளைத் தொகுத்து வழங்கும் விஜய் அமிர்தராஜை ஐக்கிய நாடுகள் சபை தனது அமைதி தூதராக நியமித்து உள்ளது. இதற்கான அறிவிப்பை ஐநா. பொதுச்செயலாளர் கோபி அனான் வெளியிட்டார். நியூயோர்க் நகரில் உள்ள ஐநா. சபையின் தலைமை அலுவலகத்தில் நடந்த விழா ஒன்றில் பொதுச் செயலாளர் கோபி அனான், விஜய் அமிர்தராஜை அறிமுகப் படுத்தி அவர் ஐ.நா. சபையின் அமைதி தூதராக நியமிக்கப் பட்டு இருப்பதை அறிவித்தார். உலகில் அமைதியை ஏற்படுத்த ஐ.நா. சபையின் சார்பில் விஜய் அமிர்தராஜ் சமாதான பணிகளில் ஈடுபடுவார்.

ஐ.நா. சபையின் சார்பில் ஏற்கனவே முன்னாள் குத்துச் சண்டை வீரர் முகமது அலி, பிரபல கூடைப்பந்து விளையாட்டு வீரர் மைக்கல் ஜோன்சன், நடிகர் மைக்கேல் டக்ளஸ் உள்பட 7 பேர் அமைதி தூதராக நியமிக்கப்பட்டு உள்ளனர். இப்போது அந்தக் குழுவில் 8வது உறுப்பினராக விஜய் அமிர்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய சிறந்த கிரிக்கட்வீரர்கள்



அண்மையில் வெளியான அவுஸ்திரேலியா சிறந்த கிரிக்கட் வீரர்கள் தெரிவில் இரட்டையர்களான மார்க் வோவ், ஸ்ரிவ்வோவ் இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. உலகின் அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்கள் பெற்ற அலன்போடர் நினைவான கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதில் சகோதரர்கள் போட்டி அமைந்த போதும் ஒரே ஒரு புள்ளியால் ஸ்ரிவ்வோவ் வென்றார். ஸ்ரிவ்வோவ் 63 புள்ளிகளையும் மார்க்வோவ் 62 புள்ளிகளையும் பெற்றனர். சிறந்த டெஸ்ட்போட்டிகளின் வீரனான கொலின் மில்லர் தெரிவானார். சிறந்த ஒருநாள் பந்தய வீரனாக வேகப் பந்து வீச்சாளர் மக்கிறாத் தெரிவுசெய்யப்பட்டார்.

# பத்தாம் ஆண்டு நினைவு



**சங்கீத வித்தகி**
**திருமதி கலாநாயகி சூரியகுமாரன்**

பிறப்பு:- 27.04.1951 இறப்பு:-12.02.1991

புலம்பெயர் மண்ணில்.....

தாய்மண் நினைவோடும்
தமிழ் இன உணர்வோடும்
விடுதலை மேடையெங்கும்
இசைமழை பொழிந்த
விடுதலைக்குயிலே... ! உன்
இனியகுரலை இழந்து
பத்து ஆண்டுகள் சென்றாலும்
நீ இசைத்த கானங்கள் இன்னும்
ஒலித்துக் கொண்டு இருக்கின்றன...
களம்வென்று வழம்பெறும் தமிழ் ஈழம்
உன் பணியை என்றும் நினைவில்
நிறுத்தும்.

*– தமிழர் கலைபண்பாட்டுக் கழகம்*
*யேர்மனிப் பணியகம்.*

Pub.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு: 29 – 11 – 1934



இறப்பு: 08 – 01 – 2001

## சுப்பிரமணியம் மயில்வாகனம்

08.01.2001ல் இறைவனடியில் அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரிகைகளும் 18.02.2001 ஞாயிறன்று மதியம் பாரிஸ் முத்து மாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் இதில் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மனைவி ராணி

| பிள்ளைகள்: | மருமக்கள்: |
|---|---|
| கலேந்திரநாதன் (இலங்கை) | நவலக்ஷ்மி |
| றஜினி (பிரான்ஸ்) | செல்வரோதயம் (பிரான்ஸ்) |
| குமுதினி (பிரான்ஸ்) | கணேசராசா (சிறீ) - (பிரான்ஸ்) |
| மாலினி (இலங்கை) | |
| நந்தினி (இலங்கை) | செல்வகுமார் (பிரான்ஸ்) |
| சுகந்தினி (பிரான்ஸ்) | விஜயகுமார் (பிரான்ஸ்) |
| விக்னேஸ்வரன் (ஜேர்மனி) | |
| சுபாஜினி (இலங்கை) | |

பேரப்பிள்ளைகள்:

சிந்துஜா, அனோஜா, காயத்திரி, டினோஜன், அபிரா, ஆதவன், ஜெனகன், கஜனிகா, ஸ்ரீபன், ஜனார்த்தனன், கலியுகன், பதுமன், விதுர்சிகா, ஆரணி.

தொடர்புகளுக்கு:
01 43 04 47 26 / 01 48 45 36 28 / 01 42 38 02 74

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளை...

றும் வேறுபாடுகாட்டவும் முடியாது. அடுத்த இரு வாரத்தில் இலங்கைக்குச் செல்லும் சமயம் யாழ்ப்பாணத்திற்கும் செல்லவுள்ளேன். விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை வரவேற்கின்றோம். அந்த யுத்தநிறுத்தத்தை சிறீலங்கா அரசு நிராகரித்ததைக் கண்டிக்கின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் தடைசெய்யும் என வதந்திகள் பரப்பப்படுகின்றன. அவ்வாறு செய்யக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். அந்த அமைப்பை பிரிட்டன் தடைசெய்தால் நோர்வேயின் சமாதான முயற்சியில் பாதிப்பு ஏற்படும். சிறீலங்கா அரசு போர் முனைப்புக்களைக் கைவிட்டு உண்மையான சமாதானத்தைக் கொண்டு வர முயற்சி செய்யவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### பெரும் போருக்கு...

கட்டளையகத்தை வழி நடத்தும் மூத்த தளபதிகளுள் முக்கியமானவர் இவர் எனக் கூறப்படுகின்றது.

தற்போது சிறீலங்கா இராணுவத்திற்கு அமெரிக்கா வழங்கும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்தி, நவீனமயப்படுத்துவது குறித்து, சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரி ஜெனரல் றொஹான் தளுவத்த, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் முப்படைகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உயரதிகாரிகளுடனும் இவர் கொழும்பில் ஆலோசனைகளை நடாத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

### வானொலி...

அப்பாட்டுக்கு அறுவைச் சிகிச்சை நடந்த பல நாட்களுக்குப் பின்பு, மோர்ட்டோனும், ஜேக்சனும் புத்தாக்க உரிமைக்காக (Patent) விண்ணப்பித்தனர். இதே புத்தாக்க உரிமைக்காக வேறு பலரும் போராடினார்கள். மயக்க மருந்து கொடுக்கும் முறையைக் கண்டுபிடித்த பெருமையின் பெரும் பகுதி மோர்ட்டோனையே சாரும் என்றபோதிலும், அவருக்கு அந்த பெருமையை அளிப்பதை பலர் எதிர்த்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவராக ஜேக்சன் இருந்தார் என்பது வியப்பளிக்கின்றது. எனினும், இந்த எதிர்ப்புகள் ஒதுக்கப்பட்டு, ஒருமாதத்திற்குப் பின்னர் மோர்ட்டோனுக்கே புத்தாக்க உரிமை வழங்கப்பட்டது. ஆனால், தமது இந்தக் கண்டுபிடிப்புத் தம்மைச் செல்வந்தராக்கும் என்ற மோர்ட்டோரின் நம்பிக்கை நிறைவேறவில்லை. ஈதரை மயக்க மருந்தாகப் பயன்படுத்திய பெரும்பாலான மருத்துவர்களும், மருத்துவமனைகளும் மோர்ட்டோனுக்கு உரிமைத் தொகை (Royalty) கொடுப்பது குறித்து கவலைப்படவேயில்லை. இதற்கென அவர் தொடுத்த வழக்குகளுக்காகவும், முந்துரிமைக்கான போராட்டத்திற்காகவும் அவர் செய்த செலவுகள் அவரது கண்டுபிடிப்புக்காக அவருக்கு கிடைத்த பணத் தொகையைவிட அதிகமாக இருந்தன. மனச் சோர்விலும், வறுமையிலும் வாடிய மோர்ட்டோன் 1888 ஆம் ஆண்டில் நியூயோர்க் நகரில் காலமானார். அவருக்கு 49 வயது கூட ஆகியிருக்கவில்லை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 02 – 11 – 1925



இறைவன் அழைப்பில்: 13 – 02 – 2000

## அமரர் அகஸ்ரின் அருளப்பு

*(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)*
*(பாஷையூர், யாழ்ப்பாணம்)*

எம் தந்தையே!
விழிநீர் மல்கி மெய்யுளம் உருகி
உயிராகி உங்கள் நினைவாகி கதியாகி
அருளாகி, அறிவாகி அனைத்துமாகிய
உங்கள் பிரிவாகிய துயரில் துடிக்கின்றோம்
நன்றே வரினும் தீதே வரினும் - தந்தையே
ஆண்டவன் அழைப்பினை ஏற்று விண்ணகம் ஏகினீர்
மண்ணக வாழ்வில் கல்விக்கண் திறந்திடும்
நல்ல குருவாக இருந்தீர்கள் - எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காகத் துலங்கினீர்கள்.
எங்களை வழி நடத்தும்
நல்ல தந்தையாக இருந்தீர்கள் - எங்களை அணைத்திடும்
பாசமிகு நற்பிறப்பே நேசமிகு பிதாவே இத்தனையும்
இவ்வையத்தில் உங்கள் பிரிவால் நாம் இழந்தோம்
இன்றும்மென்றும் துன்பத்தின் மீழாத் துயரில் நின்று உங்கள்
ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்போம்.

*உங்கள் பிரிவால் வாடும்*
*மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,*
*உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள்*

*தகவல்: மகன், றோய் ஜோய் [பிரான்ஸ்]*
01 39 34 71 12 / 01 40 12 14 37

# 31ம் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 25 – 10 – 1943



ஆண்டவன் அழைப்பில்: 15 – 01 – 2001

## அமரர் நாகலிங்கம் தியாகராசா

15.01.2001 ல் அமரரான எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரிகைகள் 14.02.2001 புதன்கிழமை வீட்டில் நடைபெற்று, பின்பு 17.02.2001 சனிக்கிழமை நண்பகல் லாச்சப்பலிலுள்ள அம்மன் கோவிலின் கீழ் மண்டபத்தில் மதிய போசனம் நடைபெறும்.

இவ் வைபவத்தில் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் கலந்து அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

இத்துடன் அன்னாரது மறைவுகேட்டு நேரில் வந்தும் தொலைபேசியில் அழைத்தும் ஆறுதல் கூறி உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

14, Rue du Jure,
78200 Mantes La Ville.
TEl: 01 30 98 66 73

இப்படிக்கு
மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை அரிதாஸ்

யாழ். சித்தங்கேணியை சொந்த இடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த சின்னத்துரை அரிதாஸ் கடந்த 12.02.2001 அன்று பாரிசில் காலமானார்.

இவர் சின்னத்துரை சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், சண்முகராசா (சந்திரன் - கனடா), சிவசக்தி, ஜெயசக்தி ஆகியோரின் சகோதரனும், விஜயேந்திரன், குணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவரது பூதவுடல்
Hopital Saint Joseph (Mo:- Plaisance)
185 Rue Raymond Losserand, 75014 Paris
இல் பிற்பகல் 1.30 மணி முதல் 4.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்படும்.

தகனக் கிரியைகள் பற்றி பின்னர் அறியத்தரப்படும்.

*தகவல்:*
சுதன் - 06.10.34.31.79

சந்திரன் (கனடா)
001 416 266 7311

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# பெரும் போருக்கு தயாராகும் சிறீலங்கா அரசு

## அமெரிக்கா – பாக் – செக் இராணுவ அதிகாரிகள் கொழும்பில் ஆலோசனை

(12.02.01)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்காக தமது யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடித்துள்ள நிலையில் சிறீலங்கா அரசு பெரும் போருக்கு தன்னைத் தயார்படுத்தி வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினரின் அடுத்த கட்ட பாரிய நகர்வுகளுக்கு தம்மைத் தயார்படுத்தி வருவதாகச் செய்திகள் மேலும் கூறுகின்றன. போருக்கு இந்த ஆண்டு சிறீலங்கா அரசு 6,338 கோடியே 90 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டு போருக்கு ஒதுக்கப்பட்டதைவிட 1088 கோடி ரூபா அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க அமெரிக்கா, பாகிஸ்தான், செக் குடியரசுகளின் இராணுவத் தளபதிகளும் வல்லுனர்களும் கொழும்பிற்கு வந்து சென்றுள்ளனர். இதன்போது இராணுவத்துக்கு வழங்க வேண்டிய உதவிகள் குறித்துப் பேச்சு நடத்திச் சென்றிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

கடந்த வார இறுதியில் செக் குடியரசில் இருந்து வந்த உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழு மூன்று நாட்கள் கொழும்பில் தங்கியிருந்து இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தது தெரிந்ததே. இதன்போது செக் குடியரசு இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரி லெப். ஜெனரல் ஜிரி சிடிவி தலைமையிலான இக்குழு சிறீலங்கா இராணுவத்திற்கு ஆயுததளபாடங்கள் விநியோகிப்பது பற்றிய பேச்சுக்களை நடாத்தியதாக தெரியவருகிறது. அத்துடன் இதன் தொடர்ச்சியாக செக் நாட்டு அமைச்சர்கள் குழு ஒன்றும் விரைவில் கொழும்பு வந்து மேலதிக விடயங்கள் குறித்து சிறீலங்கா அரசுடன் பேச்சு நடாத்தும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் இராணுவத்தின் இரண்டாவது நிலை உயர் அதிகாரி தலைமையிலான குழுவை கடந்தமாத இறுதியில் ஐந்து நாள் விஜயமாக கொழும்புக்கு அனுப்பியிருந்தார். இதில் பாகிஸ்தான் இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் முகமட் யூசுப்கான், பாகிஸ்தான் இராணுவத்தின் உளவுப்பிரிவு அதிகாரி மேஜர் ஜெனரல் இன்சான் அல்ஹக், பிரிகேடியர் குத்ஷிட் அகமட், கேணல் யாபீர் அகமட் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தமை தெரிந்ததே. இவ்வருகையின் போது பாகிஸ்தான் இராணுவம் - சிறீலங்கா இராணுவத்துக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் சிறீலங்கா அதிகாரிகளோடு விரிவாகப் பேச்சு நடாத்தியுள்ளனர். இதன் பின்னர் பாகிஸ்தானால் சிறீலங்காவிற்கு இராணுவ உதவியாக 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தானின் இந்த உதவியை சிறீலங்கா அரசதரப்பு நன்றியோடு வரவேற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டுநாட்டு இராணுவ அதிகாரிகளும் வந்து சென்றுள்ள நிலையில் இந்த வாரம் அமெரிக்காவின் உயர்நிலை இராணுவ அதிகாரி ஒருவர் தலைமையிலான குழு ஒன்று கொழும்புக்கு வந்துள்ளது. அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியத்துக்கான விசேட நடவடிக்கைக் கட்டளை மையத்தின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் டொனால்ட் வூர்ஸ்டேயே அந்த உயர்நிலை இராணுவ அதிகாரி ஆவார். அமெரிக்க இராணுவத்தின் பசுபிக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## களியாட்டங்களுக்கு மின்சாரம் தடை

(12.02.01)

சிறீலங்காவில் ஏற்பட்டுவரும் மின்சார தட்டுப்பாட்டை அடுத்து களியாட்டங்கள் மற்றும் வேடிக்கை நிகழ்வுகள் போன்றவற்றிற்கு மின்சாரம் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவில் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2001ம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகாலப் பிரமாணத்தைப் பொதுசனப் பாதுகாப்பு அதிகாரச் சட்டம் பிரிவு 5இன் கீழ் ஜனாதிபதி வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார். இந்தப் பிரமாணத்திற்கு அமைய சிறீலங்கா மின்சார சபை அல்லது மின்சாரக் கம்பனி தனியார் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தை எவரும், களியாட்ட விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள், விழாக்கள் நடைபெறும் மைதானங்கள், கட்டிடங்களை ஒளியூட்டுவதற்கு, கடைகளின் விளம்பரப் பலகைகள் அலங்காரத்திற்கு, கடைகளின் காட்சியறைகள் என்பனவற்றுக்கு மின்சாரத்தை பயன்படுத்துவது இப்புதிய சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீரேந்து பகுதிகளில் போதிய நீரில்லாததால் மின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாகவே மின்சாரப் பாவனையில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது. இதற்கிடையில் போர்ச் செலவீனங்கள் அதிகரித்துள்ளதால் எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து மின்சாரக் கட்டணம் 25 சதவீதத்தால் உயரும் என மின்சார சபை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## புலிகளைத் தடைசெய்தால் நோர்வே முயற்சி பாதிக்கும்

### – ஐரோப்பிய ஒன்றிய தொழிற்கட்சி உறுப்பினர் –

(12.02.01)

விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்தால் அது நோர்வே முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தொழிற்கட்சி உறுப்பினர் றொபேர்ட் ஈவன் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அடுத்த இரு வாரங்களில் கொழும்பிற்கு வரவிருக்கும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு தலைமை வகிக்கும் ஈவன் அப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

சிறீலங்காவுடன் ஐரோப்பிய ஒன்றியம் ஓரளவு தொடர்புகளையே தற்சமயம் வைத்திருக்கின்றது. போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அப்பாவி மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும் வரவு செலவுத் திட்டத்தில் 20 சதவீதம் யுத்தத்துக்கு செலவு செய்யப்பட்டு வரும் நாட்டுடன் ஐரோப்பிய ஒன்றியம் உறவுகளை வைத்திருக்க முடியாது. வெறும் தொடர்புகளை மட்டுமே பேண முடியும்.

இலங்கையில் அனைத்துத் தரப்பினருடனும் உறவுகளை வைத்திருக்கவே நாம் விரும்புகின்றோம். சிங்கள, தமிழ் மக்கள் என்ற வேறுபாடு காட்டமுடியாது. இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம் என்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub